
www.tamilarangam.net

# எரிமலை

மார்ச் 2000



⇨ பெண் விடுதலை என்றால் என்ன? தலைவர் அளித்த விளக்கம்

⇨ இராணுவ அடக்கு முறையும், மாணவர் எழுச்சியும்

⇨ பௌத்த மதமும் இனப்பிரச்சனையும்!



**பல்வேறு தடைகளாகவும் கட்டுப்பாடுகளாகவும் திணிக்கப்பட்டிருக்கும் சமூகப்பொருளாதார ஒடுக்கு முறையை சந்திரிகா அரசு அகற்றிவிட்டால் போர் நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருக்கிறது.**

4ம் பக்கம்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அக்கறைப் பூக்கள்



**அன்பின் ஆசிரியர்,**

மேலும் பல சிறப்பம்சங்களுடன், அழகிய வடிவமைப்பு (Lay out) மெருகேறி வரும் எரிமலைக்கு எம் வாழ்த்துக்கள். பாராட்டுக்கள்.

அத்துடன் தமிழீழ தேசத்தைச் சேர்ந்த நாம் ஒரு தேசிய இனம் என்பதையும், எம் மத்தியில் எழுச்சி யுடன் வளர்ந்துள்ள தமிழ்த் தேசியம் இன்னும் ஆழமாக வேரூன்ற வேண் டும் எனவே சென்ற இதழில் வெளி வந்த, தமிழ்மக்களின் பாரம்பரிய பிரதேசம் போன்ற ஆதாரபூர்வமான ஆக்கங்களும், எம் தேசியத்தின் உயிர் போன்ற பாரம்பரிய கலைவடிவங் கள் வெளிக்கொணரும் முகமாக அமைந்த நேர்காணல் பகுதியும் அமைந்திருந்தது. இவற்றைப்போல் நாம் மறந்த, மறைக்கப்பட்ட எம் தமிழர் தேசிய விழுமியங்கள் எரி மலை அகழ்ந்தெடுத்து எமக்குத் தர வேண்டும்

*அன்புடன்*
*அ. இராசன்*
*றோம் இத்தாலி*

**எரிமலை ஆசிரியர் அவர்களுக்கு,**

2000 ஆண்டு பெப்ரவரி இதழ் கிடைக்கப் பெற்றேன். முன் அட் டையோ பார்ப்போர் நெஞ்சில் இனம் புரியாத உணர்வை விதைத்தது. அவ் வுணர்வோடு வாசித்தேன். உள்ளே தடைகள் தகர்க்கும் மட்டக்களப்பு என்ற கட்டுரை தென்தமிழீழத்தின் இன்றைய நிலையை படம் பிடித்துக் காட்டியது.

மொழி போன்ற திரட்டுக் கட்டு ரைகள் தவிர்த்தல் நன்று. சடையரின் நாய்க்கவிதை வாசிப்போரை சிந்திக் கவும் சிரிக்கவும் தூண்டியது. துரோ கிகள்திருந்துவார்களா? சிங்களத்தின் போர்ப் பட்ஜெட் போன்ற நடைமுறை கட்டுரைகள் வாசகர்களை நடை முறை விடயங்கள் தெரிந்து கொள் ளக் கூடியதாக இருக்கும். செழுமை யோடு வந்த எரிமலைக்கு எனது பாராட்டுக்கள்.

சூரியகுமார்
பாரிஸ்
பிரான்ஸ்

**அன்புடையீர்,**

அச்சமுற்ற வாழ்க்கையும் நம்பிக் கையற்ற எதிர்காலமும் கொண்டு ஈழமக்கள் வாழ நேர்ந்துள்ள அவல வாழ்க்கை- எதிரிகளின் அநியாயமான மூர்க்கத்தனமான தாக்குதல்களால் சொந்த வீடு நிலம் ஊர் முதலி யவற்றை விட்டுவிட்டு உயிர் தப்ப அலைந்து திரிந்து, திறந்த வெளி களிலும் மரங்களடியிலும், பசி பட்டி னியோடும் பரிதாபகரமாக நாளோட் டுகிற மக்களின் இடப்பெயர்வு அனுப வங்கள் - சுதந்திரமான சமத்துவமான கௌரவமான வாழ்வைப் படைக்க வேண்டும் எனும் எழுச்சி கொண்ட சிந்தனை வீச்சுடன், பலவித தியா கங்கள் செய்து போராடிக் கொண்டி ருக்கும் போராளிகள், அவர்களது ஆற்றலும் வீரமும் நிறைந்த செயல் கள்.... மகத்தான தியாகம் புரிந்து நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் உயிர் நீத்த கரும்புலி மாவீரர்கள்.... - இப்படி வரலாற்றுப் பதிவுகளை எரிமலை இதழ்கள் அறியத்தரு கின்றன. தமிழீழ மாவீரர்களின் ஆற் றலையும் சமர்த்திறனையும், தமிழீ ழத் தேசியத் தலைவர் அவர்களின் இலட்சிய நோக்கையும், சிந்தனை வீச்சையும், மனிதாபிமானத்தையும் எடுத்துக்கூறும் கட்டுரைகள், இன் றைய ஈழமக்களின் அனுபவங்களை யும் உணர்வுகளையும் உணர்ச்சி யோடு சித்தரிக்கும் சிறுகதைகள், கவிதைகள். இவற்றோடு எதிர்காலம் பற்றிய நோக்குடன் வழங்கப்படும் ஆய்வுக் கட்டுரைகள், தற்கால இலக்கியப் படைப்புக்கள், எதிர்கால வளத்தில் கருத்துச் செலுத்தும் எண் ணக் கருவூலமாகவும் எரிமலை விளங்குகிறது. வாழ்த்துக்கள்.

*வல்லிக்கண்ணன்*
*சென்னை,*
*தமிழ் நாடு*

**எரிமலை ஆசிரியர் குழுவிற்கு,**

மனிதப் படுகொலைகள் இடம் பெறும் சிறீலங்காப் படைகள் செய்த கொடுமைகள் மீண்டும் கிளிநொச்சி உதய நகரின் மேற்கே மலக்குழியில் இருந்து தமிழீழ காவல் பணி மனையால் கண்டெடுக்கப்பட்ட உடல்களின் வாயிலாக வெளிவந் துள்ளமை எம்மை மேலும் அதிர்ச் சிக்குள்ளாக்கியுள்ளது.

இனம் அழிய மொழி அழிக்கப் படுமென கேள்விப்பட்டிருக்கின்றேன், எங்கள் நாட்டில் பார்த்தும் வருகி றோம். ஆனால் ஈழத்தில் தமிழ் மக் களை குவியல் குவியலாக கொன்று குவித்ததை, குவிப்பதை வேறெங் கும் கேள்விப்பட்டதில்லை.

விசாரணை என்ற பெயரால் தமி ழர்கள் சிறையில் அடைக்கப்படுவதும் பின்னர் காணாமல்ப் போவதும், சிறீலங்காப் படையினர் ஆக்கிரமித் துள்ள ஈழமண்ணில் நடந்து வரும் வேதனையான விடயம்.

இராணுவ வரலாற்றில் புதுமை கள் பலவற்றை கையாண்டு வெற்றி களை குவித்து வரும் புலிகள் எம் இனத்தின் அடிமைத்தளையை அறுப் பர். இது திண்ணம்.

*ச.வேல்முருகன்*
*புதுச்சேரி,*
*இந்தியா.*



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளே...

எரிமலை
பெப்ரவரி 2000

## கட்டுரை


தமிழ்மக்களின் பாரம்பரிய பிரதேசம் பக்கம் - 14
இளம் சமுதாயமே உணர்வுகளைத் தட்டியெழுப்புங்கள் பக்கம் - 20
ஓ வீரனே...! பக்கம் - 22
தம்பி எந்தத் தும்பிக்கும் பயப்படமாட்டான் பக்கம் - 28
கடற்ப்படை மூட்டிய தீ பக்கம் - 36
சிறீலங்கா அரசு கவனத்திலெடுக்காத சிங்களப் போர்க்கைதிகள் பக்கம் - 38
விடுதலைக்கு வித்திட்ட மாணவர் கிளர்ச்சி பக்கம் - 40
சம்புவெளி ஓர் இயற்கை வனப்பு பக்கம் - 41


## நூல் மதிப்பீட்டுரை


செம்மணி கவிதைத் தொகுப்பு –பிரதீப்ப குமாரன்– பக்கம் - 46


## சிறுகதை


சிலைகளும் சிற்பிகளும்மதுரா பக்கம் - 34
ஒரு பிரச்சனையும் இல்லை –எஸ். ஆதவன்– பக்கம் - 42


## கவிதை


இது பண்டார வன்னியன் ஆண்ட பூமி -அலெக்ஸ் பரந்தாமன்- பக்கம் - 11
இதுதான் வீரம் -கலைநிலா- பக்கம் - 17
இனியும் நான் சின்னவளோ -பண்டிதர் பரந்தாமன்- பக்கம் - 21
பெண்கள் இனமே விழித்தெழு -யோகதாஸ் யூட் நிமலன்- பக்கம் - 27
புனிததமிழீழம் -க.கலைஞன்- பக்கம் - 33
கண்கெட்ட பயலைக் கண்டால் மடக்கவும் -சடையர்- பக்கம் - 35


## தொகுப்பு


சந்திரிகாவின் ஆட்சியில் மனிதனும் மதமும் பக்கம் - 45
மீள்பார்வை பெப்ரவரி 2000 பக்கம் - 48



08 கெட்டிக்காரியின் பொய்யும் புரட்டும் எட்டு நாளையில் புரிந்து போகும்





12 விடியலைத்தேடும் மலையகப் பெண்கள்





18 வவுனியாவில் சிங்களப் படையின் சோதனைக் கெடுபிடிகள்






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எமது மக்களின் விடுதலைத் தாகம் கலை, இலக்கியங்களாக வேண்டும்

தமிழீழ மக்களாகிய நாம் ஒரு தேசிய இனக் கட்டமைப்பைக் கொண்டவர்கள். பழம் பெரும் மொழியும், பண்பாடும், பாரம்பரிய தாயகமும் பழமைமிக்க வரலாறும் கொண்ட ஒரு தனித்துவ தேசமாக நாம் வாழ்ந்து வருகிறோம். இந்தத் தமிழர் தேசத்தையே தமிழீழம் என நாம் அழைக்கிறோம். இந்தத் தமிழர் தேசத்திற்கு தன்னாட்சி உரிமையையும் இறமையையும் வென்றெடுக்கவே நாம் இரத்தம் சிந்திப் போராடி வருகிறோம்.



தமிழ்த் தேசியத்தை ஆதாரமாகக் கொண்ட ஈழத்தமிழரின் போராட்டத்திற்கு எழுத்தாளர்களதும், கலைஞர்களதும் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. உங்களது கலை, இலக்கியப் படைப்புக்கள் தமிழரின் தேசிய ஆன்மாவைத் தட்டியெழுப்பி, தமிழ்த் தேசிய எழுச்சிக்கு முனைப்பூட்டுவதாக அமையவேண்டும்.

ஒழுங்கும் அமைதியும் நிலவும் சாதாரண சமூகச் சூழலில் நாம் வாழவில்லை. நெருக்கடிகள் மிகுந்த ஒரு போராட்ட சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இப் போர்க்காலச்சூழலில் வாழும் எமது மக்களின் இன்றைய வாழ்நிலை மிகவும் துன்பகரமானது, அவலங்கள் நிறைந்தது. இந்தத் துயரமான வாழ்வைத் தரிசிக்க விழையும் கலை, இலக்கியப் படைப்புக்கள், வெறுமனே அவலத்தையும் சோகத்தையும் பிரதியெடுத்துக்காட்டாமல், இனஒடுக்குமுறையின் கொடூரமாக அவற்றைச் சித்தரித்துக்காட்டி, மக்களிடையே விழிப்புணர்வையும், ஒடுக்குமுறைக்கு எதிரான கொதிப்புணர்வையும் தூண்டிவிடவேண்டும்.

தனிமனிதர்களது வாழ்க்கையானது சுயநலச் சுவர்களுக்குள் சிறைப்பட்டுக் கிடக்கிறது. இந்தச் சுயநல வரம்புகளுக்கு அப்பால், தேசவிடுதலை என்ற பொதுநல விழுமியத்தால் மனிதர்களைக் கவர்ந்திழுக்கும் எழுத்துக்களே இன்றைய காலத்தின் தேவையாக இருக்கின்றது. இத்தகைய கலை, இலக்கியப் படைப்புக்களே தமிழ்த்தேசிய வளர்ச்சிக்கும், தேசிய விடுதலை எழுச்சிக்கும் உரமூட்டுவதாக அமையும்.


தேசிய உணர்வை வெளிக்காட்டும் படைப்பாக்கங்கள் தமிழீழ மண்ணில் படிப்படியாக மேலோங்கி வருவதை இன்று நாம் காணக்கூடியதாக இருக்கிறது. இந்தப் போர்க்கால விடுதலை இலக்கியம் மேலும் வளர்ச்சிகண்டு செழிப்புற வேண்டும். எமது மக்களின் விடுதலைத்தாகம் கலை, இலக்கிய வடிவங்களில் வெளிப்பாடு காணவேண்டும். இது எழுத்தாளர்களாகிய உங்களது ஆக்க முயற்சியில்தான் தங்கியிருக்கிறது. இதனை ஒரு உன்னதமான விடுதலைப்பணியாகக் கருத்திற்கொண்டு நீங்கள் உழைக்க வேண்டுமென நான் அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

**தமிழீழத் தேசியத் தலைவர்**
**மேதகு வே.பிரபாகரன்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

★

பத்தொன்பதாம் ஆண்டு

மார்ச்

*2000*

★

ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

*C/O T.C.C-France,*

*341, Rue des Pyrenees,*

*75020 Paris.*

*Tel: 01 - 43 58 11 42*

*Fax: 01 - 43 58 11 91*

# தலைவாசல்

## கிளிநொச்சி எலும்புக்கூடுகள் !

உலக நீதிமன்றம் அண்மையில் செரூபிய இராணுவத் தளபதியொருவருக்கு நாற்பத்தைந்து வருடச் சிறைத்தண்டனையை விதித்தது, பொஸ்னிய மக்கள் மீது பாரிய போர்க்குற்றங்களைப் புரிந்தமைக்காக இத்தளபதி தண்டிக்கப்பட்டுள்ளார். இப்படுகொலைகள் இடம்பெற்றபோது சம்பந்தப்பட்ட தளபதி சம்பவவிடத்தில் இல்லையெனினும் படைகளுக்குப் பொறுப்பானவர் என்ற கடமையைக் கொண்டவர் என உலக நீதிமன்றத்தினைத் தலைமை தாங்கிய பிரஞ்சு நீதிபதி அழுத்தம் திருத்தமாகச் சுட்டிக்காட்டி திட்டமிடப்பட்ட இனச்சுத்திகரிப்புக்கு எதிரான உலக சட்டக் கோட்பாடுகளைக் கோடிட்டுக்காட்டியுள்ளார். ஆனால் சிங்களப் பேரினவாத அரசின் ஆக்கிரமிப்பு இராணுவம் தொடர்ந்து புரிந்துவரும் பெரும் இனச்சுத்திகரிப்புக்கு எதிரான விவாதங்கள் இவ்வுலக சட்ட வியாக்கியானங்களைத் தொடாது தொடர்ந்தும் தப்பித்து வருகின்றது.

செம்மணிப் படுகொலைகள் பற்றிய சிங்களப் பேரினவாத ஆக்கிரமிப்பு அரசின் நீதிமன்ற கண்துடைப்புக்கள் தொடர்ந்து வருகையில் கிளிநொச்சியில் மலக்கூடங்களில் இருந்தும் கைவிடப்பட்ட கிணறுகளில் இருந்தும் தமிழர்களது எலும்புக்கூடுகள் மக்களால் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. சிங்கள இராணுவத்தின் சத்ஜெய நடவடிக்கைகளின்போது பெரும் ஆக்கிரமிப்புக்குள்ளான கிளிநொச்சி மண் ஓயாத அலைகளால் மீட்கப்பட்டபோது தன் குடிமக்கள் சிலரை இவ்வாறு எலும்புக்கூடுகளாகப் பாதுகாத்து வைத்துள்ளது. இருநூறுக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் சத்ஜெயவுக்கு பிற்பட்ட காலத்தில் கிளிநொச்சி இராணுவ ஆக்கிரமிப்பு வலயத்தில் காணாமல் போயிருந்தனர். வீடு பார்க்கப் போனவர்கள், காணி பார்க்கப் போனவர்கள் எனப் பலர் காணாற்ப் போயிருந்தனர். அவர்கள் இப்போது எலும்புக் கூடுகளாகக் கண்டெடுக்கப்பட்டு சிங்களப் பேரினவாதத்தின் சாட்சியங்களாகியுள்ளனர்.

இவ்வாறான படுகொலைகளுக்கு உலகப் போர்ச்சட்டங்களும், இனச்சுத்திகரிப்புக்கு எதிரான உடன்பாடுகளும் என்ன நியாயம் வழங்கவுள்ளது? செம்மணி படுகொலைகளை வெறும் மாவட்ட நீதிமன்ற விசாரணைக்கான விடயங்களாக்கி சில கீழ்மட்ட அதிகாரிகளினதும் படையினரதும் கிரிமினல் குற்றங்கள் போன்று விசாரணை நடாத்தும் சந்திரிகா குமாரதுங்கா, கிளிநொச்சியில் மக்களால் கண்டெடுக்கப்பட்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் பார்வையிடப்பட்ட எலும்புக்கூடுகள் பற்றி வாயே திறக்கவில்லை. கொழும்பில் சிங்களத் தகவல்த்தொடர்புச் சாதனங்களும், பிற சர்வதேச செய்தி நிறுவனங்களும் கிளிநொச்சி எலும்புக்கூடுகளை செய்திக்குரிய விடயமாகக் கொள்ளவில்லை. உலக நிறுவனங்கள் இன்னமும் கிளிநொச்சியில் சிங்கள இராணுவத்தால் கொடூரமாகக் கொல்லப்பட்ட மக்களிற்கு நீதி கேட்டுக் குரல் தரவில்லை.

ஓயாத அலைகள் 2 நடவடிக்கை புலிகளினால் மேற்கொள்ளப்பட்டு கிளிநொச்சி மீட்கப்பட்டதால் ஒரு பெரும் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கை கிளிநொச்சியில் தடுத்து நிறுத்தப்பட்டது. சிங்களம் புரிந்த இனச்சுத்திகரிப்புக்கான ஆதாரங்களும் வெளிக்கொண்டு வரப்பட்டது. இப்போது தொடரும் ஓயாத அலைகள் 3 நடவடிக்கைகளால் யாழ் குடாநாடு முழுமையாக விடுவிக்கப்படும்போது காணாமற் போனதாகக் கணக்கெழுதப்பட்ட பல நூறு தமிழர்கள் எங்கே எந்த மலக்கூடத்தில் அல்லது இரகசியப் புதைகுழிகளில் மூச்சிழந்து போய்விட்டனர் என்ற உண்மை வெளியுலகிற்குத் தெரியவரும்.

இவ்வாறான போர்க்குற்றங்களினைப் புரிந்த குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதும் தண்டிப்பதும் மனித குலத்தின் வரலாற்றுத் தேவையாகும். திட்டமிடப்பட்ட முறையில் சிங்கள முப்படைகளினால் மேற்கொள்ளப்படும். இவ் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகள் உலக நீதி நடைமுறைகளின் உடனடி நடவடிக்கைகளை ஈர்க்க வேண்டும். சிங்களப் படைகளின் பிரதான தளபதியான சந்திரிகா குமாரதுங்கா உட்பட இப்படுகொலை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவர்கள் சரியான முறையில் தண்டிக்கப்பட வேண்டும். புகலிடத் தமிழர்களாகிய நாம் இவ்வாறான சர்வதேச நடவடிக்கைகளுக்காக தொடர்ந்து உழைப்போமாக.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பல்வேறு தடைகளாகவும் கட்டுப் பாடுகளாகவும் திணிக்கப்பட்டிருக்கும் சமூகப்பொருளாதார ஒடுக்குமுறையை சந்திரிகா அரசு அகற்றிவிட்டால் போர்நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருப்பதாக புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

# தமிழ் மக்களின் மீதான அனைத்தும் உடன் நீக்க

**பேச்சுவார்த்தை சம்பந்தமாகவும், போர்நிறுத்தம் சம்பந்தமாகவும் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை திரு. அன்ரன் பாலசிங்கம் விளக்கமாக எடுத்துரைத்தார்.**

நெருக்கடியைத் தவிர்த்து இயல்பு நிலையைத் தோற்றுவித்தல் என்ற புலிகளின் யோசனைக்கு விரிவான விளக்கம் அளித்த அன்ரன் பாலசிங்கம், ஐக்கிய தேசியக் கட்சி அரசும் சந்திரிகாவின் அரசும் கடந்த பத்துவருட காலமாக எமது மக்கள் மீது திணித்துவந்துள்ள தடைகளும் கட்டுப்பாடுகளும் பாரிய இருப்புப் பிரச்சனைகளை ஏற்படுத்தியதோடு தமிழர்களது சமூக, பொருளாதார,கலாச்சார வாழ்வையும் ஆழமாக சீர்குலைத்திருப்பதாக குற்றம் சாட்டினார். அத்துடன் தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் நோக்குடன் கட்டவிழ்த்துவிடப்பட்ட போர் நடவடிக்கைகள் தமிழ்மக்களின் வாழ்க்கைப் பிரச்சனையை மேலும் மோசமாக்கி பத்து இலட்சம் தமிழர்களை அவர்களது சொந்த மண்ணிலேயே ஏதிலிகளாக்கியுள்ளதென்றும் திரு. பாலசிங்கம் கூறினார்.

தமிழ்மக்கள் மீது ஒரு கூட்டுத் தண்டனையாக விதிக்கப்பட்டிருக்கும் இந்த ஒடுக்குமுறைகளும் நெருக்குவாரங்களும் உடன் நீக்கப்பட வேண்டும். தமிழ் மக்களும் அதனையே விரும்புகிறார்கள் பொதிகளிலும், பெட்டகங்களிலும், ஒப்பந்தங்களிலும், அரசியல் அமைப்புச் சட்டத்திருத் தங்களிலும் அவர்களுக்குப் பெரிதாக அக்கறையில்லை. இந்தச் சட்டங்கள் அரசியல் யாப்பின் கட்டுக்கோப்பை மாற்றியமைக்குமே தவிர தமிழரின் நாளாந்த வாழ்க்கையின் கொடூரமான யதார்த்தத்தை பிரதிபலிக்கவில்லை. எமது மக்கள் தமக்கு உரித்தான உரிமைகளோடும், சுதந்திரங்களோடும் கௌரவமாக சாதாரண மனிதப்பிறவிகளாக வாழ விரும்புகிறார்கள். அவர்கள் தமது சொந்த வீடுகளில் சுதந்திரக்காற்றை சுவாசிக்க விரும்புகிறார்கள். தமது சொந்த மண்ணில் சுந்திரமாக நடமாட விரும்புகிறார்கள். தமது சொந்த நிலங்களில் விவசாயம் செய்தும், சொந்தக் கடலில் மீன்பிடித்தும், பயமின்றி, தடைகளின்றி, நெருக்குவாரங்களின்றி கௌரவமாக உழைத்து வாழ விரும்புகிறார்கள்.

தமிழர்கள் மீது இறுக்கப்பட்டுள்ள ஒடுக்குமுறைச் சூழ்நிலையைநீக்கி சமாதானத்திற்கும் பரஸ்பர நல்லெண்ணத்திற்குமான ஒரு இயல்பு நிலையைத் தோற்றுவிக்க அரசாங்கமும் எதிர்கட்சியும் ஒன்று சேர்ந்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரு. பாலசிங்கம் வேண்டுகோள் விடுத்தார். இந்த ஒடுக்குமுறையான தடைகள் நீக்கப்படுவது அரசாங்கத்தின் போர்க்கொள்கையோடு பின்னப்பட்டிருப்பதால் ஓர் உருப்படியான போர்நிறுத்தத்திற்கும் விடுதலைப் புலிகள் தயாராக இருப்பதாக திரு. பாலசிங்கம் தெரிவித்தார். பேச்சுவார்த்தைக்கு முன்னராக போரை நிறுத்தவோ, தமிழ்ப்பகுதிகளில் இருந்து சிங்களப்படைகளை வெளியேற்றவோ ஜனாதிபதி சந்திரிகா மறுத்துள்ளார் என்றும் பேச்சுவார்த்தை வெற்றியளித்து இனப்பிரச்சனைக்குத் தீர்வு ஏற்பட்டாலன்றி, படைகள் வெளியேற்றப்பட மாட்டாதென்பதே அவரது நிலைப்பாடு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அடக்குமுறைகள் ப்பட வேண்டும்

என்றும் பத்திரிகையாளர் சுட்டிக் காட்டியதற்கு பதிலளித்த திரு. பால சிங்கம், தொடரும் போர்ச்சூழலில் சமாதானப் பேச்சுக்கள் நடாத்துவதை புலிகள் விரும்பவில்லை என்றார். ஒரு புறம் போரை நடத்திக்கொண்டு மறுபுறம் பேச்சை நடத்துவதும், ஒரு வரை ஒருவர் கொன்றழித்துக் கொண்டு சமாதானம் பேசுவதும் மிகவும் அபத்தமான முட்டாள்த்தனமான காரியம்.

அதனால்தான் சமாதானப் பேச் சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்ன ராக போர்ச்சூழலை நீக்கிவிட வேண் டும் என புலிகள் வற்புறுத்துவதாக திரு. பாலசிங்கம் சொன்னார்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னராக வடகிழக்கிலிருந்து சிங் கள ஆயுதப்படைகள் விலக்கப்பட வேண்டும் என்பதை பேச்சுவார்த் தைக்கு ஒரு முன்நிபந்தனையாக நாம் வலியுறுத்தவில்லை. ஆனால் ஒரு போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டு, போர்மீறல்களை மேற்பார்வை செய்ய ஒரு கண்காணிப்புக்குழு நிய மிக்கப்பட்டதன் பின்னராக படை கள் முகாம்களுக்குள் அனுப்பப்பட வேண்டும். ஒரு இறுதித்தீர்வுகாணும் வரை அரசாங்கம் தனது படைகளை தமிழ் மண்ணில் வைத்திருப்பதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் போர்நிறுத் தத்தின் பின்னர் மக்கள் வாழும் பகுதிகளில் இருந்து, பாடசாலைகளி லிருந்து, கல்லூரிகளிலிருந்து, கோவில் கள் புனித தலங்களிலிருந்து, பொது நிலைகளில் இருந்து வீதிகளின் முடுக்கு மூலைகளில் இருந்து, பட்டினம் நகரப் புறங்களில் இருந்து ஆயுதம் தரித்த படைகள் விலக்கப்பட்டு முகாம்களுக் குள் நிறுத்தப்பட வேண்டும். போர் நிறுத்தத்தின் பின்னர், சிங்களப்படை கள் குடியிருப்புப்பிரதேசங்களை ஆக்கி ரமித்து நிற்பதை நாம் விரும்பவில்லை. இந்த ஆக்கிரமிப்பு நிலை தொடர்ந் தால் எமது பட்டினங்களும் குடியி ருப்புக்களும் தொடர்ந்தும் திறந்த வெளிச் சிறைச்சாலைகளாக இருக்க வேண்டியிருக்கும். தமிழரின் சமூக வாழ்விலும் தொடர்ந்தும் பீதியும் பதட்ட நிலையும் தொடரும். போர் நிறுத்தம் அர்த்தமற்றதாகிவிடும். ஆக்கி ரமிப்பு நெருக்கடி தொடரும். அதனால் தான் போர்நிறுத்தத்தின் பின்னர் சிங்கள ஆயுதப்படைகள் முகாம்களுக் குள் அனுப்பப்பட வேண்டும் என் பதை வலியுறுத்துகிறோம் என்று திரு. பாலசிங்கம் விளக்கினார்.



நெருக்கடியைத் தணித்து இயல்பு நிலையை ஏற்படுத்தும் விடுதலைப் புலிகளின் இந்த யோசனையை சிறீ லங்கா அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் என நீங்கள் நினைக்கின்றீர்களா என்ற கேள்விக்கு பதிலளித்த திரு. பாலசிங்கம், அதுபற்றி எனக்குத் தெரியாது. ஆனால் சமாதானத்தை உருவாக்குவதில் சந்தி ரிகா அரசு உண்மையான அக்கறை கொண்டிருந்தால் எமது யோசனை யைக் கவனமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் எனக் கூறினார்.

தமிழ்மக்களை அடிபணியவைத்து, புலிகளைப் பேச்சுக்கு நிர்ப்பந்திக்கும் நோக்குடனேயே சிங்கள அரசாங்கம் இராணுவ அடக்குமுறையையும் பொருளாதார ஒடுக்குமுறையையும் எமது மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது. இந்தக் கொள்கை அடிப்படையிலேயே தவறானது. இது சமாதானப் பாதைக்கு இட்டுச் செல் லப்போவதில்லை என்றும் புலிகளின் ஆலோசகர் எடுத்துரைத்தார். தென்னி லங்கையில் கடும் எதிர்ப்புக் கிளம் பியிருந்த போதும் விடுதலைப் புலி களுடன் பேசுவதற்கு நாம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி குமாரதுங்கா அறிவித்து வருகிறார். இந்த நிலைப் பாட்டிற்கு காரணமென்ன? இராணுவ பலவீனம் காராணமாக இருக்குமா? என்ற கேள்விக்குப் பதிலளித்த திரு. பாலசிங்கம் கீழ்க்கண்டவாறு தெரி வித்தார்.

வன்னியிலும் ஆனையிறவுப் பிர தேசத்திலும் எதிர்கொண்ட பாரிய இராணுவத் தோல்விகளும், வருடங் களாக இரத்தம் சிந்திப் போராடி ஆக்கி ரமித்த பெருநிலப்பரப்புக்களை இழக்க நேர்ந்ததும், இராணுவ ரீதியில் விடு தலைப் புலிகளை வெற்றிகொள்ள முடியாது என்ற உண்மையைச் சந்தி ரிகாவிற்கு உணர்த்தியிருக்கலாம். அத்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தோடு தமிழர் தாயகத்தின்மீது படையெடுத்து நிகழ்த்திய அனர்த்தங்களால் தமிழ் மக்களின் வெறுப்பிற்கும் சந்திரிகா ஆளாகியிருக்கிறார். அத்தோடு சிறீலங்காவின் ஆயுதப்படைகளும் சிக்கலான பிரச்சனைகளை எதிர்கொண்டு நிற்கின்றன. இருபது வருடங்களாக முடிவின்றித் தொடரும் போரில் பங்குபற்றி மாறிமாறித் தொடர்ச்சியாக நிகழ்ந்த சமர்களினாலும், சண்டைகளினாலும் இழப்புக்களைச் சந்தித்துச் சோர்ந்து, களைத்து, ஆட்டம் கண்டுநிற்கும் சிங்கள இராணுவத்தின் தாக்குதல்வலு பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் ஆட்பலமும் குறைந்து மனோபலமும் உடைந்து நிற்கிறது. பொறுப்பற்ற அரசியல்வாதிகளின் ஆதிக்கக்கனவை நிறைவு படுத்துவதென்பது இந்த வலுக்குன்றிய இராணுவத்தால் முடியாத காரியம். இந்த யதார்த்தத்தைத்தான் சந்திரிகா இப்போது சந்தித்து நிற்கிறார். இதன் அடிப்படையில் ஜனாதிபதி சந்திரிகா இராணுவப்பாதையைக் கைவிட்டு சமாதான வழியில் தமிழரின் தேசியப் பிரச்சனைக்குத் தீர்வுகாண முயற்சிப்பார் எனக் கருதமுடியாது. அவருக்கு இப்போது தேவைப்படுவது காலம். இராணுவ இயந்திரத்தை மீளமைப்புச் செய்து நவீனமயப்படுத்தி இன்னுமொரு பெரும் போருக்கு தயார் செய்வதற்கு சந்திரிகாவிற்குக் காலம் தேவைப்படுகிறது. அவர் ஏற்கனவே இராணுவச் செலவீனத்திற்கு வரவு செலவுத்திட்டத்தில் பெரும் தொகையான நிதியை ஒதுக்கியிருக்கின்றார். அத்தோடு அதிநவீன தொழில் நுட்பம் வாய்ந்த அழிவு ஆயுதங்களை வாங்கிக்குவித்து வருகின்றார். அவரது இராணுவத் தளபதிகளும் தென்னிலங்கையில் வீடு வீடாகச் சென்று படைக்கு ஆட்திரட்டி வருகிறார்கள். ஆகவே தற்போது கொழும்பில் அரங்கேறியுள்ள சமாதான நாடகமும், பேச்சுவார்த்தைக்கு புலிகளுக்கு விடுக்கப்படும் அழைப்புக்களும் ஒரு அரசியல் ஏமாற்றுவித்தை என்றே நாம் கருத வேண்டியிருக்கின்றது. இராணுவத்தை வலிமைப்படுத்தத் தேவையான கால இடைவெளியை நிரப்ப நடைபெறும் ஒரு அரசியல் கூத்தாக இருக்கலாம் என்று திரு. பாலசிங்கம் எடுத்துரைத்தார்.

> ஒரு புறம் போரை நடத்திக்கொண்டு மறுபுறம் பேச்சை நடத்துவதும், ஒருவரை ஒருவர் கொன்றழித்துக் கொண்டு சமாதானம் பேசுவதும் மிகவும் அபத்தமான முட்டாள்த்தனமான காரியம்

இன்னும் ஒரு ஆறுமாத இடைவெளிக்குள் தமிழரின் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்போவதாக ஜனாதிபதி குமாரதுங்கா மிகவும் உறுதியுடனும் நம்பிக்கையுடனும் கூறி வருகிறார். இந்தக் காலவரம்பு பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்ட போது.

ஆசியாவிலேயே மிகவும் கடினமானதும் சிக்கலானதுமான தமிழரின் தேசியப் பிரச்சனையை தீர்ப்பதற்கு குறுகிய கால வரம்புகளை நிர்ணயிக்க முடியாது என திரு. பாலசிங்கம் சொன்னார். தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆழத்தையும் அகலத்தையும் சிக்கலான வரலாற்றையும் மட்டுமன்றி, இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துவரும் சுதந்திர இயக்கத்தின் இலட்சியப்பற்றையும் சந்திரிகா நன்கு புரிந்துகொள்ளவில்லை. விடுதலைப் புலிகள் இயக்கம் எந்த ஒரு காலக்கெடுக்களையும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. காலக்கெடுக்களை நிர்ணயிப்பதே ஒரு நிபந்தனையை விதிப்பதாக முடியும். இந்தக் கால வரம்பிற்குள் விடுதலைப் புலிகளையும் உட்படுத்தலாம் என சந்திரிகா கருதுவாரானால் அவருக்கு ஏமாற்றமே காத்துநிற்கும். ஏனென்றால் நாம் அவரது கால அட்டவணைத் திட்டத்திற்குள் மாட்டிக் கொள்ளப் போவதில்லை. பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னராக தமது அரசியலமைப்புத் திருத்தங்களை பாராளுமன்றத்தில் நிறைவேற்றவேண்டும் என்ற நிர்ப்பந்தம் சந்திரிகாவுக்கு இருக்கலாம். பாராளுமன்ற ஆசனங்களில் அமர்ந்திருப்பவர்களுக்கும் அந்த நிர்ப்பந்தம் இருக்கலாம். ஆனால் விடுதலைப் புலிகள் ஒரு விடுதலை இயக்கம். சந்திரிகாவின் காலவரம்பிற்குள் செயற்பட வேண்டுமென அரசியல் நிர்ப்பந்தங்கள் எதுவும் எமக்கு இல்லை.

தமிழரின் இனப்பிரச்சனையைத் தீர்ப்பது குறித்து, சந்திரிகா அரசும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்று கூடிக் கலந்தாலோசித்து வருவது குறித்து, கேட்கப்பட்டபொழுது, அது ஒரு நன்முயற்சியென பாலசிங்கம் சொன்னார்.

தமிழரின் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு முட்டுக்கட்டைகளாக



நின்று பிரச்சனைகள் இழுபடுவதற்கும் தீவிரமடைந்திருப்பதற்கும் காரணமான வரலாற்றுக் குற்றவாளிகளான இந்த இருசிங்களக் கட்சிகளும் ஒன்று கூடிக்கதைப்பது ஆக்கபூர்வமான விடயம். தமிழரைப் பொறுத்தவரை தென்னிலங்கைச் சிங்களக் கட்சிகள் ஒன்றுகூடிக் கலந்தாலோசிப்பது முக்கியமல்ல. இந்தச் சர்வகட்சிக் கூட்டு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முயற்சிகளும் இணக்கப்பாடுகளும் திம்புக் கோட்பாடுகளாகப் பிரகடனப்படுத்தப்பட்ட தமிழரின் தேசிய அபிலாசைகளை நிறைவு செய்யும் ஒரு தீர்வுத்திட்டத்தை உருவாக்குமா என்பதுதான் முக்கியம். சந்திரிகாவின் சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசிக் கட்சியும் சாராம்சத்தில் சிங்களப் பேரினவாதக்கட்சிகள். இந்தக் கட்சிகளின் அரசியல் நலன்கள் சிங்களத் தொகுதிகளில் வேரூன்றிக் கிடக்கின்றன. இவ்விரு கட்சிகளுமாக இணைந்து பெரும்பான்மைச் சிங்களவரின் நலனைப் பேணும் வகையில் தமிழருக்கான அரசியல் அதிகாரத்தை மேலும் வெட்டிக்குறைத்து, தமிழரின் தாயகத்தைத் துண்டாடி, ஒரு இறுக்கமான ஒற்றையாட்சியை உருவாக்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இப்படியான ஒரு புதிய அரசியற்சட்டம் உருவாக்கப்படுமானால் சிங்களக் கட்சிகள் ஒன்றுபட்டதில் தமிழர்களுக்கு எவ்வித பலனும் ஏற்படப்போவதில்லை என்று திரு. பாலசிங்கம் விளக்கினார்.

பௌத்த பீடாதிபதிகளின் எதிர்ப்புப்பற்றி குறிப்பிட்ட திரு. பாலசிங்கம் தமிழரின் பிரச்சினையைத் தீர்க்க சிங்கள ஆட்சிபீடங்கள் முயற்சிகளை எடுக்கும் பொழுது பௌத்த மகாசங்கங்களில் இருந்து எதிர்ப்புக் கிளம்புவது சிங்கள அரசியல் வரலாற்றில் ஒரு விபரீதமான புதிய நிகழ்வு அல்ல என்றார். பௌத்த குருமாரின் எதிர்ப்பால் ஒப்பந்தங்களும் உடன்பாடுகளும் கிழித்தெறியப்பட்ட வரலாற்றை எமது மக்கள் நன்கறிவர். இந்தக் கசப்பான வரலாற்று அனுபவம் காரணமாகவே பௌத்தபீடத்தின் கடும் எதிர்ப்பை அறிந்து தமிழ் மக்கள் மனமுடைந்திருக்கிறார்கள். பௌத்த மகாநாயக்க தேரர்களினதும் மற்றும் பௌத்த தீவிரவாத இயக்கங்களினதும் எதிர்ப்பு சமாதான முயற்சிக்கு பெரும் இடையூறாக அமையும் என்று திரு. பாலசிங்கம் குறிப்பிட்டார்.

நோர்வேயில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் பற்றி விடுக்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த புலிகளின் அரசியல் ஆலோசகர், நோர்வேயின் மத்தியத்துவ நிலைப்பாட்டிலும் கொள்கையிலும் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லையெனவும் புதிய நோர்வே வெளிவிவகார அமைச்சரை தாம் விரைவில் சந்திக்கவிருப்பதாகவும் தெரிவித்தார்.

**இலண்டனிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகையான தமிழ் கூாடியனுக்கு திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் வழங்கிய பேட்டி.**

# குறைந்த நிலப்பரப்பில் அதிக கண்ணிவெடி விதைப்பு



தென்னாசியாவிலேயே மிதிவெடிகளினாலும், கண்ணிவெடிகளினாலும் அதிகமான பாதிப்பை ஏற்படுத்தும் பகுதிகளாக இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதி இனம் காணப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக யாழ் குடாநாடும், கிளிநொச்சியும் இனம் காணப்பட்டுள்ளன. இந்தப்பகுதிகளிலே 107 பேர் மிதிவெடிகளினாலும், கண்ணிவெடிகளினாலும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறீலங்காப் படையினர் யாழ் குடாநாட்டினையும் கிளிநொச்சிப் பகுதியினையும் ஆக்கிரமிப்புச் செய்த வேளையில் இப்பகுதியிலே அவர்களினால் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள், மிதிவெடிகள் என்பன கடந்த இரண்டு ஆண்டுகளில் இப்பகுதிமக்களிடையே பெரும்பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது.

சிங்களப் படையினரிடமிருந்து கிளிநொச்சிப் பிரதேசம் விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டதனைத் தொடர்ந்து தமது வாழ்விடங்களையும் காணிகளையும் பார்ப்பதற்காகச் சென்ற பொதுமக்களில் 24 பேர் அவயவங்களை இழந்துள்ளனர். சிறீலங்காப் படையினர் புதைத்து வைத்துள்ள மிதிவெடிகளினாலும், கண்ணிவெடிகளினாலும் இப்பகுதிக்குச் சென்ற பொதுமக்களுக்குப் பெரும் ஆபத்து காத்திருப்பதாகவும் அப்பகுதிக்கு பொதுமக்கள் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும் எனவும் புலிகள் அறிவித்துள்ள அதேவேளையில் கண்ணிவெடிகள் மிதிவெடிகள் போன்றவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகளையும் தாங்கள் மேற்கொண்டுள்ளதாக அறிவித்துள்ளனர்.

உலகிலேயே குறைந்த நிலப்பரப்பு ஒன்றிலே அதிகமான கண்ணிவெடிகள் விதைக்கப்பட்டுள்ள பகுதி யாழ் குடாநாடுஎன இனம் காணப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கெட்டிக்காரியின் பொய்யும் புரட்டும் எட்டு நாளையில் புரிந்து போகும்



பிரதான சிங்களக் கட்சிகள் இரண்டும் நேரடியாகப் பேச்சுவார்த்தையில் இறங்கியிருக்கின்றன. இனப்பிரச்சைனக்குத் தீர்வு காணும் நோக்கில் மேற்கொள்ளப்படுகின்ற நகர்வாகச் சொல்லப்படுகின்றது. மார்ச் மாதத்திற்கிடையில் மூன்று தடவைகள், இவ்விருகட்சிகளும் கூடிப்பேசியுள்ளன. முக்கியமான விடயங்கள் இன்னமும் ஆராயப்படவில்லை எனத் தெரிவித்திருப்பதுடன், பேச்சுவார்த்தை நல்ல முறையில் நடைபெறுவதாக இரு கட்சிகளும் கூட்டறிக்கை விடுகின்றன.

இரண்டு துருவங்களாகப் பிரிந்து நின்று, அரசியல் நடத்திவரும் பிரதான இரு சிங்களக் கட்சிகளும், இனப்பிரச்சனைத் தீர்வு விடயத்தில் ஒன்றை ஒன்று நெருங்கிவர ஆரம்பித்திருக்கின்றன. அரசியல் அமைப்புச் சட்டத்திருத்தம், தீர்வுப்பொதி குறித்து அவை பேசப்போவதாகத் தெரிவிக்கின்றன.

ஒருபுறத்தே நோர்வே அரசின் சமாதான முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்க, சமாந்தரமாக மற்றுமொரு அரசியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இவ்விரு கட்சிகளினது கூடிப்பேசல் பொது இணக்கத்துக்கு வரல் போன்ற விடயங்கள், நோர்வேயின் சமாதான முயற்சிக்குத் துணையாக அதன் தேவையாக மேற்கொள்ளப்படும் முயற்சியாகவே சிங்களம் கூறிவருகிறது.

**தமிழ் மக்களின் இன்றைய துயரநிலைக்கு இரு பிரதான சிங்களக் கட்சிகளுமே முழுமைக்காரணிகள் என்பது மறுக்கப்படவோ, மறைக்கப்படவோ முடியாதது.**

தமிழ் மக்களின் இன்றைய துயர நிலைக்கு இரு பிரதான சிங்களக் கட்சிகளுமே முழுமைக்காரணிகள் என்பது மறுக்கப்படவோ, மறைக்கப்படவோ முடியாதது. சிங்கள மக்களின் வாக்கைக் கவரும் தேர்தல்கால நடவடிக்கையாகவே இனக் கலவரம் என்ற பெயரிலான இன அழிப்பு நடவடிக்கைகளும், தமிழர்களின் உரிமைப்பறிப்புகளும் நடந்தேறியிருக்கின்றன.

தமிழரின் உயிர்ப்பறிப்பும் உரிமைப்பறிப்பும் விடயத்தில் யார் உயர்த்தி என்று காட்டுவதிலேயே, இரு பிரதான சிங்களக் கட்சிகளும் சப்பைக்கட்டுக்கட்டிக் கொண்டு களம் நின்றிருக்கின்றன.

இந்தக் கசப்பான வரலாற்று ஓட்டத்தினூடேயே, தற்போது தமிழ் மக்களின் உரிமைப்பிரச்சனைக்கு தீர்வு காண இவ்விரு கட்சிகளும் கூடிப்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேசுவதாகக் கூறிக்கொள்ளுகின்றன.

தற்போது, பிரதான கட்சிகள் இரண்டும் என்ன அடிப்படையில் உடன்பாட்டுக்கு வரப்போகின்றன என்பது கேள்விக்குறியாகவே உள் ளன. மாறி மாறித் தம்மால் பறிக் கப்பட்ட தமிழர்களின் உரிமைகளை, ஒருமித்த கருத்துடன் இணக்கத் துடன், தமிழர்களுக்கு திரும்பி வழங்கப் போவதாக முடிவெடுக் கப்போகின்றனவா?

அல்லது, பௌத்த சிங்களப் பேரி னவாதத்திற்கு கூட்டுத்தலைமை ஏற்று, தம்மிடையே விவாதத்திற்கு விடப்பட்ட தீர்வுப்பொதியை மேலும் வெட்டிக்குறுக்கி, தமிழ்மக்களை மேலும் சிறுமைப்படுத்த முடிவெடுக் கப்போகின்றனவா? என்பதே கேள்வி.

சிங்களப் பேரினவாத ஒடுக்கு முறையின் எதிர்விளைவாக உயிர்த் தெழுந்த தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் எழுச்சியும் வீச்சும் சிங்களத்தை மூச்சுத்திணறச் செய் கிறது. அதன் இருப்பைக் கேள்விக் குறியாக்கி அதன் சித்தத்தைக் கலங் கடிக்கச் செய்து கொண்டிருக்கிறது.

சிங்கள இராணுவ இயந்திரம் தோற்று அவமானப்பட்டு, தலை குனிந்து நிற்கிறது. சிங்களப் பேரி னவாதத்தின் கனவுக்காவலனாக மிடுக்கோடு தோற்றமளித்திருந்த இரா ணுவ இயந்திரம் அச்சுடைந்த தேர் போல ஆட்டம் கண்டுநிற்கிறது.

இந்த நிலையிலேயே பேச்சுவார்த்தை பற்றிய அக்கறை சிங்களத்தைப் பற் றிப் பிடித்திருக்கின்றது. இந்தச்சமா தானப் பிதற்றல்கள் எவ்வளவு தூரத் திற்கு உண்மைத்தன்மை வாய்ந்தவை என்பது ஒரு புறமிருக்க, இராணு வத்தின் இயலாத் தன்மையே சந்திரி காவை பேச்சுவார்த்தை குறித்துப் பேசவைத்துள்ளது என்பது தெட் டத்தெளிவானது.

இந்தச் சமாதானக் கூச்சல்கள் சந்தேகத்திற்குரியவை என்று கருதும் அளவிற்கு மறுபுறத்தே, போர்த்தயாரிப் புக்கள் நடந்து கொண்டுதானிருக் கின்றன. இராணுவத்திற்கு ஆட் சேர்த்துத் தோற்றுப்போன சிங்களப் படைத் தலைமை, தற்போது அதிர டிப்படையினருக்கு மேலும் பதினோ ராயிரம் பேரைத் திரட்டக் களமிறங் கியிருக்கின்றது.

சிங்களப் பெற்றோருக்கு, சிங்கள இராணுவத்தலைமை உருக்கமான அறிவித்தல்களை விடுத்துவருகின் றது. நாட்டைக்காக்க படையில் சேருமாறு உங்கள் பிள்ளைகளை ஊக்கப்படுத்துங்கள் என அது சிங் களப் பெற்றோருக்கு வேண்டுகோள் விடுக்கின்றது.

பாதுகாப்புச் செலவீன அதி கரிப்பு, நவீன யுத்த தளபாடங்கள் கொள்வனவு, இனத்துவேசமும் உணர்ச் சியூட்டும் வாசகங்களுடன் ஆட் சேர்ப்பு நடவடிக்கை என, சிங்களம் ஒரு பெரும் யுத்தமொன்றிற்கே தயா ராகி வருவது தெரிகின்றது.

**சமாதான விரும்பிகள் யார்? சமாதான எதிரிகள் யார்? என்பதை சர்வ தேசசமூகம் நேரடியாகவே அறிந்து கொள்ள வாய்ப்பேற்பட்டிருக்கின்றது**

அப்படியானால், இந்தச் சமா தான முயற்சிகளில் சிறீலங்கா அரசு ஈடுபடக் காராணம் என்ன என்ற கேள்வியும் இயல்பாக எழுகின்றது.

மூச்சுத்திணறிப்போயிருக்கின்ற சிங்கள இராணுவத்திற்கு குளுக் கோஸ் ஏற்றி, பிராணவாயு கொடுத்து அதை நிமிர்த்திவைக்க ஒரு கால அவகாசம் தேவைப்படுவது ஒரு காரணமாய் இருக்க, விடுதலைப் புலிகளை சமாதானத்தின் எதிரிகள் எனச் சர்வஉலகத்திற்கும் பிரகடனம் செய்ய இச்சமாதான முயற்சியைப் பயன்படுத்தலாம் என்ற உள்நோக் கமும் இதில் இருக்கும் என்றே கருத இடமுண்டு.

சமாதான முயற்சிகளிற்குத் தடை கள் ஏற்படுத்தும் வகையில் விடு தலைப் புலிகள் செயற்படுகின்றனர், நிபந்தனைகளை முன்வைக்கின்றனர் எனக் காரணம் தேடி, தமிழ் மக் களுக்கு எதிரான இனஅழிப்பு யுத்தத்தை சர்வதேச அங்கீகாரத் துடன் மேற்கொள்ளலாம் என்பது சந்திரிகாவின் நப்பாசை. ஆனால் சந்திரிகா அரசுதான் மெல்ல மெல்ல அம்பலமாகி வருகின்றது. அதன் பொய்மைத் தன்மை வெளிப்பட ஆரம்பித்திருக்கின்றது. உலக சமூகம் நேரடியாகவே சமாதான முயற்சியில் இறங்கியிருப்பதால், சந்திரிகாவினதும், கதிர்காமரினதும் பேச்சுக்களையும் பிரசங்கங்களையும் வைத்துக்கொண்டு உண்மை நிலையை எடைபோட வேண்டிய தேவை இல்லாமற் போனது.

சமாதான விரும்பிகள் யார்? சமாதான எதிரிகள் யார்? என்பதை சர்வ தேசசமூகம் நேரடியாகவே அறிந்து கொள்ள வாய்ப்பேற்பட்டிருக்கின்றது.

உண்ணாவிரதமிருந்த யுத்தக் கை திகள் விடயத்தில், விடுதலைப் புலி கள் நடந்து கொண்ட முறையும் நாகரீகமான முறையில் மனிதாபிமான அடிப்படையில் அவர்கள் மேற் கொண்ட நகர்வுகளும் விடுதலைப் புலிகளின் சமாதான அவாவை உலகத்திற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கும். இதற்கு உரிய முறை யில் பிரதி உபகாரம் செய்ய சிங்கள அரசு தவறிவிட்டது என்பதுடன், கைதிகள் விடுதலையைக் கொச்சைப் படுத்தும் விதமாய்க் காரணங்கள் தேடியது. கைதிகளைப் புலிகள் ஏன் விட்டார்கள்? மற்றவர்களையும் விடச் சம்மதிப்பது ஏன்? எனச் சிங்களம் சந்தேகம் கிளப்பியது. மற்றைய யுத் தக் கைதிகளை விடுதலை செய்யப் பேச்சுக்களை நடத்த மறுத்தது.

இதற்கிடையில், சும்மா இருக்காத வாயை வைத்துக் கொண்டு சந்தி ரிகா, இன்னுமொரு கெடுதலைத் தனக்கே ஏற்படுத்தியிருக்கின்றார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திற்கு, தமது அனுமதியின் பேரில்தான் நோர்வே அரசு சிகிச்சை அளித்தது எனச் சந்திரிகா தெரிவிக்க, அதற்கு நோர்வே அரசு மறுப்புத் தெரி வித்ததுடன், அது மனிதாபிமான அடிப்படையில் தம்மால் மேற் கொள்ளப்பட்ட தனிப்பட்ட முடிவு என நோர்வே அரசு தெரிவித்தி ருந்தது.

ஆக..... இந்தச் சிறிய விடயத் திற்குக்கூட பொய்யுரைக்கும் சந்தி ரிகா, பேச்சுவார்த்தை விடயத்திலும் நேர்மையாக நடந்து கொள்வாரா என்ற சந்தேகத்தை, நோர்வே அர சிற்கு உள்ளூரத் தோற்றியிருக்கும் என்பது சந்தேகமில்லை.

**-சுப்பு-**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இராணுவ அடக்குமுறையும் மாணவர் எழுச்சியும்

-திருமலைச் செல்வன்-

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான நடவடிக்கைகள் இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளை யுத்த நடவடிக்கைகள் கிழக்கிலும் பற்றிப்பரவ ஆரம்பித்துள்ளன என்பதை அண்மைக்கால சம்பவங்கள் எடுத்துக்காட்டுவனவாக அமைந்துள்ளன.

மார்ச் மாதம் 3ம் திகதி திருகோணமலைத் துறைமுக வீதியில் இடம்பெற்ற தற்கொடைப் போராளியின் குண்டுத் தாக்குதல் சம்பவம் இராணுவப் புலனாய்வு வட்டாரங்களைப் பெரிதும் அதிர்ச்சி அடைய வைத்துள்ளது என்றே கூறவேண்டும். இராணுவ உயர் அதிகாரி ஒருவரை இலக்கு வைத்தே இந்தக் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளதாகவும் பின்னைய விசாரணைக் குறிப்புகள் தெரிவித்துள்ளன.

வன்னிப் பெருநிலப்பரப்பிலும் வடக்கிலும் யுத்த மேகங்கள் பற்றிப் படர்ந்து சிறீலங்கா அரசுக்கு பெரும் தாக்கத்தினை அளித்துவரும் அதே வேளை திருகோணமலை மாவட்டத்தின் பிரதான பகுதிகள் தமது கைகளுக்குள் உள்ளதாக மார்தட்டிக் கொண்டிருக்கும் சிறீலங்கா அரசுக்கும், அரச படைகளுக்கும் உட்துறைமுக வீதிக் குண்டு வெடிப்பு பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது. வழமையாக படை அதிகாரிகளின் வாகனங்களும் கடற்படையினரின் வாகனத் தொடரணியும் இந்த வீதி வழியாக தினமும் செல்வது வழக்கமானதாகும்.



உட்துறைமுக வீதியைப் பொறுத்தவரை தங்கள் பிரயாணங்களுக்கு நகரிலிருந்து வெளியேறவும், போக்குவரத்தினை மேற்கொள்ளவும் உகந்த வீதி என எண்ணிக்கொண்டிருந்த அரச படையினருக்கும் பாதுகாப்புத் தரப்பினரும் எதிர்காலத்திலும் தமது யுத்த நடவடிக்கைகளுக்கும் செயல்பாடுகளுக்கும் உட்துறைமுக வீதியானது பாதுகாப்பானதாக இருக்குமா என ஆராயந்து வருகின்றனர்.

கடந்த மூன்று வருட காலத்தில் இத்தகைய நான்கு சம்பவங்கள் உட்துறைமுக வீதியில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதே வேளை இந்தத் தற்கொடைப் போராளியின் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக திருகோணமலை இந்துக் கல்லூரி மாணவனான 16 வயதான சண்முகலிங்கம் அர்ஜுன் என்பவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டிருந்தார். குண்டுத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற போது இந்த மாணவன் சம்பவம் நடைபெற்ற இடத்தில் நின்றதாகவும் இதன் விளைவாகவே இவருக்கு எரிகாயங்கள் ஏற்பட்டதாகவும் என்று கூறியே இந்த மாணவனைப் பொலிசார் கைது செய்திருந்தனர். மேலும் சம்பந்தப்பட்ட தற்கொடைப் போராளியான மூதூர் கட்டைபறிச்சானைச் சேர்ந்த யுவதியுடன் இந்த மாணவன் போராட்டம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கலாம் என்ற சந்தேகமும் இந்த மாணவனை கைதுசெய்ய வைத்திருந்தது.

ஆனால் முழுமாணவ சமுதாயம் மேற்கொண்ட எழுச்சிமிக்க நடவடிக்கைகளினால் இந்த மாணவன் கைதான சிலதினங்களிலேயே இவரை விடுவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியது.

மார்ச் 3ம் திகதியன்று குண்டு வெடிப்பு இடம்பெற்றதைத் தொடர்ந்து இந்த மாணவன் உடனடியாகவே பொலிசாரால் கைது செய்யப்பட்டிருந்தார். இந்த மாணவனை உடனடியாக விடுவிக்கக்கோரி திருகோணமலை நகரில் உள்ள அனைத்துப் பாடசாலை மாணவ மாணவியர் அனைவரும் 9ம் திகதி வியாழனன்று பாடசாலை பகிஷ்கரிப்பினை மேற்கொண்டிருந்தனர். சம்பந்தப்பட்ட மாணவனை விடுதலை செய்யாதபட்சத்தில் பாடசாலை பகிஷ்கரிப்பினை தொடர்ந்து மேற்கொள்ளப் போவதாகவும் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் கைதான மாணவன் தாக்கப்படவில்லை என்றும் இன்னும் சில தினங்களில் இவர் விடுதலை செய்யப்படுவார் என பொலிஸ் உயர் அதிகாரிகள் உறுதி அளித்தபோதும் பகிஷ்கரிப்பு கைவிடப்படவில்லை. இந்த நிலையில் மாணவர் பிரதிநிதிகள் 10 பேரை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்ற பொலிசார் அவரைக் காண்பித்ததுடன் ஒரு வார காலத்தில் அவர் விடுதலை செய்யப்படுவார் அல்லது நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்படுவார் என உறுதியளித்ததின் பேரில் பகிஷ்கரிப்புப் போராட்டம் கைவிடப்பட்டது.

ஆனால் எதிர்பாராத வகையில் வெள்ளியன்றே இந்த மாணவன் திருகோணமலை நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஒன்றுபட்ட மாணவர்சக்தி உருவாக்கிய இந்தப் பகிஷ்கரிப்புப் போராட்ட நடவடிக்கையும் மாணவர்களின் எதிர்கால நடவடிக்கைக்கு உரமூட்டுவனவாகவே அமைந்திருந்ததுதான் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இது பண்டார வன்னியன் ஆண்ட பூமி

வருக... வருக...
வன்னியூர்
உங்களை 'வரவேற்கின்றது'!
சிங்களப் படைகளே! வருக...
சிரித்த முகத்துடன் வருக...
பொங்கிடும் விடுதலை உணர்வுடன் கூடிய
புதியதோர் நாட்டிற்கு 'பொலிவுடன்'
வருக...
வெங்களமாடும் வேங்கைகள் வாழும்
வீரமிகு நாட்டிற்கு விரைந்து வருக...



வன்னிக் கானகத்தினூடாய்
வழி பிடிக்க வரும் படையே!
இன்னுமென்ன தயக்கம்...? எழுந்து வருக...
தெரியாதா உனக்கு
நாங்கள்
எம் தேசத்தின் மீது கொண்ட பற்று.
அதனால் தான்
புரியாத பாதைக்குள் நீ–
புகுந்து கொண்டுள்ளாய்
பாதை பிடிக்க பாய்ந்து வரும் படையே!
உன் 'போதை'யைத் தெளிவிக்க
இங்கு புகுந்துள்ளனர் புலிகள்.
சென்று வருகவென...
வென்று வருகவென...
உங்களுக்கு வாழ்த்துக் கூறியவன்
இப்போது
விழி பிதுங்கி நிற்கிறான்.
மரணத்துக்கு திகதி குறித்து
மண் மீட்கப் போராடும்
மறவர் படைக்கு முன்னால் நீ–
துப்பாக்கி எறிந்து விட்டு
தோற்றோடுவது நிச்சயம்.
பண்டார நாயக்காவின்
பரம்பரை வாரிசுகளே!
உங்கள்
பாதங்கள் இங்கு பதிகையில்
இறுதிப்பதிலடி கொடுக்கும்
எங்கள் ஈழமண்
ஏற்றுக்கொள்ள நீ தயாராக இரு!
ஏனெனில்...
இது–
பண்டார வன்னியன் ஆண்ட
பரிசுத்த பூமி!
மாசி நான்கினுள்
உங்களின் மரணச்செய்திகள்
மூசிப்பெய்யும் பனியூடாக
உமதூர் முற்றத்தைச் சென்றடைய
இங்கு வருக... வருக...
வளமுடன் கூடி நலமுடன் வருக...

-அலெக்ஸ்பரந்தாமன்-



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடியலைத் தேடும் மலை

சர்வதேசப் பெண்கள்தினம் உலகெங்கும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்ற இவ்வேளையில், மலையகத் தமிழ்ப் பெண்களின் எதிர்காலம் தொடர்ச்சியாக இருள் சூழ்ந்தே காணப்படுகின்றது. மலையகத் தமிழ்ப்பெண்களின் பிரச்சனைகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படவேண்டியதும் அவசியமாக உள்ளது. தனிமனித வாழ்க்கையோடு தொடர்புள்ள எல்லாவிடயங்களிலும் பெருந்தோட்டப் பெண்கள் பெரும் பின்னடைவுகளுக்குள்ளாகி வருகின்றனர்.

மலையகத் தமிழ்ப்பெண்கள் தம் மீது திணிக்கப்பட்டுள்ள சமுதாய அடக்குமுறைகளையும், சிங்களப் பெருந்தோட்ட முதலாளித்துவம் திணிக்கும் சமூகப் பொருளாதார அழுத்தங்களையும் உடைத்தெறிய வேண்டிய நிலையிலேயே உள்ளனர்.

சமூகப் பொருளாதார, அரசியல், கல்வி கலாச்சாரம் முதலான சகல துறைகளிலும் மிகவும் பின்தங்கிய நிலைகளிலேயே வாழ்கின்றனர். அவர்களது வாழ்வில் ஒளியேற்றப்படவேண்டுமாயின் புதிய சிந்தனைகள் முன்னிறுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

மலையகப்பெண்களின் வாழ்வில் விடிவு வரவேண்டுமாயின் அவை தொடர்பாகத் தீர்மானமெடுக்கும் விடயங்களில் முழு அதிகாரமும் மலையகப் பெண்களிடம் இருக்க வேண்டும். தெளிவாகக் கூறுவதாயின் சிறீலங்காவின் அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதிலும், தங்கள் குடும்பங்களின் ஜீவனோபாய வருமானத்தை ஈட்டித்தருவதிலும் மலையகத் தமிழ்ப் பெண்கள் முன்னணியிலுள்ளனர் என்பது அனைவரும் அறிந்த விடயம். ஆனால் சாதாரணமான குடும்ப வாழ்க்கையிலும்கூட தாம் ஈட்டிய வருமானத்தை எதற்கு செலவழிக்கலாம் என்பதை தீர்மானிப்பதற்கு கூட அவர்களது குடும்பத்தலைவர்கள் அவர்களை அனுமதிப்பதில்லை. இந்நிலையில் சிறீலங்காவிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் பிரதான துறையான பெருந்தோட்டத்துறையின் பிரதான உழைப்பாளர்களான மலையகத் தமிழ்ப் பெண்கள் சிறீலங்காவின் பொருளாதாரத் தீர்மானம் எடுக்கக்கூடிய அரச பங்காளிகளாக விளங்குவதற்கு சிங்களப் பேரினவாதம் அனுமதிக்கும் என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று.

மலையகத் தமிழர்களை அடிமைகளாகக் கருதும் சிங்களப் பெருந்தோட்ட முதலாளித்துவம் தீர்மானம் எடுக்கக்கூடிய அமைப்புக்களில் மலையகத்தமிழ்ப் பெண்களுக்கு வாய்ப்பளிக்கும் என்பது சாத்தியமாகாத நிலையில், மலையகத்தமிழ் பெண்களின் வாழ்க்கை முன்னேற்றமென்பது பல தசாப்தங்கள் கடந்தாலும் பகற்கனவாகவே இருக்கும்.

இதேவேளை இவர்களின் சகசகோதரிகளான இத்தீவில் வாழும் தமிழீழப் பெண்கள் சிறீலங்காப் பேரினவாத அடக்கு முறைகளை உடைத்துக் கொண்டும், அதேவேளை தமது சமூகத்தில் புரையோடிப் போயுள்ள சமூகத்தளைகளையும் அறுத்துக் கொண்டு வெற்றிகரமாக விடியலை நோக்கி வீறு நடைபோடுகின்றனர். ஆனால் மலையகத் தமிழ்ப் பெண்களோ தமது உழைப்பிற்கேற்ற ஊதியத்தைப் பெறுவதற்கே சிங்களப் பெருந்தோட்டத்துறையுடன் போராட வேண்டிய நிலையிலுள்ளனர்.

பெருந்தோட்டத்துறையானது நம்பியிருக்கும் பிரதான மனித இயந்திரங்களான மலையகப் பெண்கள், அவர்களது வாழ்க்கையிலும் ஓய்வற்று இயங்கும் மனிதப் பொறிகளாக உள்ளனர். சராசரியாக ஒருவன் எட்டு மணித்தியாலம் வேலை செய்யலாம் என்பது சர்வதேசச் சட்டம். ஆனால் இப்பெண்கள் தேயிலைக் கொழுந்துக் காலங்களில் பன்னிரண்டு மணித்தியாலத்திற்கு மேலும் வேலை செய்ய வேண்டிய நிலையிலுள்ளனர். அதே





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யகத் தமிழ்ப் பெண்கள்



நேரத்தில் தங்கள் குழந்தைகள் கவனிப்பு, கணவனின் அலுவல்களைக் கவனித்தல், வீட்டுப் பராமரிப்பு என இரண்டு வேலைகளையும் செய்ய வேண்டிய பொறிகளாகவே உள்ளனர். அவர்களுக்கு ஓய்வென்பது சொற்ப நேர நித்திரையின் போதே கிடைக்கின்றது.

மலையகத் தமிழ்ப் பெண்களுக்கு கல்வி என்பது எட்டாக் கனியாகவே உள்ளது. தோட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு போதிய ஆசிரியர்களில்லை, கல்விக்கூட தளபாடங்களின் பற்றாக்குறை, கட்டிட வசதிகள் இன்றியும் காணப்படுகின்றன. இவற்றோடு மலையகத் தமிழர்களின் பொருளாதாரப்பிரச்சனைகள், கல்வியறிவின்மை போன்ற நிலைமைகள் காரணமாக தமது இளஞ்சந்ததியினரை கல்வி கற்க அனுமதிக்காமல் ஆரம்பக்கல்வியைப் பாதியிலேயே நிறுத்தி பெருந்தோட்டத்துறை வேலைக்கே அழைத்துச் சென்று விடுகின்றனர். அதுவும் பெண் பிள்ளைகளாயின் பாடசாலைக்கே செல்லவிடுவதில்லை. கல்வியறிவில்லாத பெண்களை பெருந்தோட்ட நிர்வாகம் இலகுவில் ஏமாற்றி அவர்களின் உழைப்பை உறிஞ்சுகின்றது.

இதனைப் பெண் ஜனாதிபதியாக இருக்கும் அரசுகூட கண்டு கொள்வதில்லை. ஏனெனில் இவர்கள் தமிழ்ப் பெண்களாக இருப்பதே காரணமாகும். இனவாத நோக்கில் செயற்படும் சந்திரிகா அரசுமலையகப் பெண்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்கள் மீதான அடக்குமுறைகளை கண்டுகொள்ளுவதுமில்லை, மலையகத் தமிழ்ப் பெண்களின் அபிவிருத்திக்கென வரும் சர்வதேச உதவிகளையெல்லாம் சிங்களப் பகுதிகளுக்கே அனுப்பிவிடுகின்றது. இது போதாதென்று கொழும்பில் இடம் பெறும் குண்டு வெடிப்புக்களை காரணம் காட்டி நினைத்த நேரத்தில் சிங்களப் படையினர் இளம் மலையகத்தமிழப் பெண்கள், கர்ப்பிணித் தாய்மார், நோயாளிகள் என்ற வயது வேறுபாடின்றி கைது செய்து சிறையிலடைத்து சித்திர வதை செய்கின்றனர்.

இவற்றிலிருந்து மலையகத் தமிழ்பெண்களை காப்பாற்றுவதற்கு இவர்களது தலைமைகள் அதிகாரமற்ற நிலையில் உள்ளனர். சிங்களப் பேரினவாத அரசிடமிருந்து தமது பெண்களை காப்பாற்றுவதற்கு வெகுசனப் போராட்டங்களை நடாத்துவதற்குக் கூட சிங்களப் பேரினவாதம் மலையக அரசியல் தலைவர்கள் மற்றும் தொழிற்சங்கவாதிகளையும் பயமுறுத்தி தடுத்து வைத்துள்ளது. மலையகத் தமிழ்த் தலைவர்கள் தமக்கு வாக்களிக்கும் மலையகத்தமிழ்ப் பெண்களின் முன்னேற்றத்திற்கு ஆக்கபூர்வமான முயற்சிகளை முன்னெடுக்க முடியாதவர்களாகவே உள்ளனர்.

எனவேதான் மலையகத் தமிழ்ப்பெண்கள் தமது விடியலைத் தாமே தேடிக் கொள்ள அணிதிரள வேண்டும். இதன் மூலமே தமது எதிர்கால சமுதாயத்தையும் விடியலை நோக்கி வழிநடாத்தக் கூடியதாக இருக்கும். இது இயலாது போகுமாயின் மலையகத் தமிழ் மாதர்களின் வாழ்வு இருளிலேயிருக்கும். மலையகத் தமிழ் பெண்கள் சிந்திப்பார்களா.?



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம்



கலாநிதி சி.க.சிற்றம்பலம்
(வரலாற்றுத்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

(முன்னிதழ் தொடர்ச்சி)

திருகோணமலையில் காணப்பட்ட வன்னியர் ஆட்சிபற்றி கி.பி. 14ஆம் நூற்றாண்டுக்குரிய சங்குவேலிக் கல்வெட்டும் "மலையில் வன்னியனாரும் ஏழூரில் அடம்பர்களும் கூடிக்கோணைநாதருக்கு" அளித்த தானம் பற்றிக் குறிப்பிடுகிறது. கி.பி. 16ஆம் நூற்றாண்டுக்குரிய வெருகல் கல்வெட்டு கயிலை வன்னியனார் இக்கோயிலின் மேற்கு மதிலைக் கட்டியதாகக் கூறுகிறது. (52) தம்பலகாமத்திலும் கி.பி. 14ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழக் கல்வெட்டொன்று கிடைத்துள்ளது. இது பழுதடைந்த நிலையிலுள்ளது. இதுவும் வன்னியர் பற்றிக் குறிக்கலாம். இது போல் கி.பி. 13ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ்க் கல்வெட்டு ஒன்றும் திருகோணமலையிலுள்ள வில்லூன்றிக் கந்தசுவாமி கோயிற்தூணிலுண்டு. மட்டக்களப்பு மான்மிகம் இப்பகுதியில் மாகனுடன்தான் வன்னிமைகள் தோன்றின எனக் கூறினாலும் இவனுக்கு முன்னரே இங்கும் இவை தோன்றிவிட்டன எனலாம். (53) மாகன் கேரளத்திலிருந்து தன்னுடன் கூட்டிவந்த முக்குவர்களுக்கு வன்னிமைகளை அளித்து அவர்களை இப்பகுதித் தலைவர்களாக்கினான். இத்தகைய முக்குவ வன்னிமைகள் புத்தள மாவட்டத்திலும் காணப்பட்டன. இவர்களை கி.பி 15ஆம் நூற்றாண்டில் கோட்டை மன்னன் அடக்கினான். போத்துக்கேய வரலாற்றாசிரியரான கெய்ரோஸ் சுவாமிகள் யாழ்ப்பாண இராச்சியத்தின் எல்லைகள் பற்றிக் குறிப்பிடுவது அவதானிக்கத்தக்கது. இது திருகோணமலை வரையும் பரந்திருந்ததை அவர் குறிப்பிடுகிறார்.(54) இதனெல்லை மேற்கே சிலாபம் வரை ஒரு காலத்தில் சென்றதையும் அவர் குறிப்பிட்டுள்ளார். போத்துக்கேயரிடமிருந்து 1658இல் ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற டச்சுக்காரரின் முதற்தேசாதிபதியாகிய பான்கூன்ஸ் மேலும் இது பற்றி விரிவாகக் கூறியுள்ளார்.(55) அதாவது "இந்நான்கு மாகாணங்களும் (வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப் பள்ளி) பதின்மூன்று தீவுகளும் யாழ்ப்பாண பட்டினமென வழங்கப்பட்டன. இவற்றோடு வன்னியும் அவ்வரசைச் சேர்ந்திருந்தது. யாழ்ப்பாண மன்னர் வன்னியைக் கைப்பற்றித் திறை பெற்றுவந்தனர். அதே போல் போர்த்துக்கேயரும் வன்னியரிடமிருந்து திறை பெற்றனர். மேற்கிலே கற்பிட்டியிலிருந்து பூநகரிப்பக்கமாகவுள்ள கல்முனை வரை காணப்படும் செட்டிகுளம், மாதோட்டம் முதலான இடங்களை அடக்கிக் கிழக்கிலே திருகோணமலை வரையும் வன்னி பரந்து காணப்படுகிறது. இவ்வரசினைச் சியங்கோி (சங்கிலி) என்ற அரசன் நாற்பத்திரண்டு ஆண்டுகட்கு மேலாக அரசாண்டான்.

டச்சுக்காரராட்சியில் (கி.பி. 1658–1796) வடகிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் மரபு வழித்தாயகமாகக் கூணப்பட்டதை மேற்கூறிய வான்கூன்ஸ் தேசாதிபதியின் கூற்று உறுதிசெய்கிறது. ஆஃதாவது:

"பழைய மலபார் (தமிழ்) இராசாக்கள் ஆதிக்கம் பரந்து காணப்பட்டது. உயர்ந்த மலைத்தொடர்கள் மீதும் வேடர்களின் நிலப்பரப்புக்கள் மீதும் இந்த ஆதிக்கம் பரந்திருந்ததோடு புத்தளம், கற்பிட்டியின் நடுப் பகுதிக்கும் அது பரந்தது. அது



கொழும்பு நூதன சாலையில் உள்ள கோணேஸ்வரி சிற்பம்

மேலும் தெற்கு நோக்கி விரிவாக்கப்பட்டு நீர்கொழும்பு வரை ஈழத்தின் மேற்கு கரையோரம் அவர்கள் கட்டுப்பாட்டுக்குள்ளே இருந்தது. கிழக்குப் பகுதியில் பாணமை வரைக்கும் கும்புக்கன் ஓயாவிலும் அது பரந்திருந்தது. இன்றும் கூட வழக்கமாக மலபாரி மொழியே இங்கு பேசப்படுகிறது.

வடக்கே யாழ்ப்பாண அரசு மறைந்தாலும் கிழக்கே திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் வன்னியராட்சி தொடர்ந்தது. (36) எனினும் இவர்கள் மீது முதலில் கோட்டை மன்னரும் அவர்கள் வீழச்சி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆனையிறவில் போத்துக்கேயரின் சுங்கத்தீர்வை நிலையம் 16ம் நூற்றாண்டு

யடையக் கண்டி மன்னரும் மேலாணை செலுத்தினர். இதனைப் போத்துக்கேய வரலாற்றாசிரியராகிய கெய்ரோசின் குறிப்புகளும் இப்பகுதிகளிற் கிடைக்கும் கல்வெட்டுக்களும் உறுதி செய்கின்றன. இக் கல்வெட்டுக்கள் தமிழிலே நிருவாகம் இங்கு நடைபெற்றதை உறுதி செய்கின்றன. திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிளிவெட்டிப் பிள்ளையார் கோயிற் கல்வெட்டு, திருகோணமலை மாரியம்மன் கோயிற் கல்வெட்டுக்கள் ஆகியவற்றை இங்கே குறிக்கலாம். இவை கி.பி. 16ஆம், 18ஆம் நூற்றாண்டுகளுக்குரியவையாகும். ஏற்கனவே கி.பி 16ஆம் நூற்றாண்டுக்குரியவொரு கல்வெட்டு வன்னியர் பற்றிக் குறிப்பதைக் கண்டோம். மட்டக்களப்புத் தமிழகத்திலுள்ள கல்வெட்டுகளில் கி.பி.16ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டுக்கள் முக்கியம் பெறுகின்றன. இவற்றுள் ஒன்று தம்பிலுவிலில் காணப்படுகின்றது. இக் கல்வெட்டு சிவஞானசங்கரன் கோயிலுக்கு அளிக்கப்பட்ட தானத்தினைக் குறிக்கும்போது கோட்டை அரசனான விஜயபாகு பற்றியும் கூறுகிறது. இதேபோன்று திருக்கோயிற் சித்திர வேலாயுத சுவாமி கோயிலிலும் இரு கல்வெட்டுக்கள் உள. முதலாவது கல்வெட்டு கி.பி. 16ஆம் நூற்றாண்டுக்குரியது. இரண்டாவதன் காலம் கி.பி.1752 ஆகும். இதேபோன்று வீரமுனையிலும் ஓர் செப்பேடு உண்டு. இதன் காலம் கி.பி. 16ஆம் 17ஆம் நூற்றாண்டுகளாகும். இச்செப்பேட்டில் கண்டி மன்னராகிய இரண்டாவது சேனரத்புவன சிங்கசுவாமி என அழைக்கப்படுகிறான். இம்மன்னன் வீரமுனைப் பிள்ளையாருக்கு அளித்த நிலமானியத்தை இத்தமிழ்க் கல்வெட்டு எடுத்தியம்புகிறது. இதேபோன்று கி.பி. 1683ஆம் ஆண்டுக்குரிய சம்பாந்துறைச் செப்பேடு கண்டியரசன் பிராமணருக்கு அளித்த நில மானியத்தை கூறுகிறது. இதனை அளித்தவன் இரண்டாவது ராஜசிங்கனாகும். (கி.பி. 1635—1687) இத்தகைய சான்றுகள் கி.பி. 16ஆம், 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளில் இப்பகுதிகளில் தமிழர் ஆட்சிநிலை கொண்டமையையும் இவர்கள்மீது கண்டி மன்னர் பெயரளவில் மேலாணை செலுத்தியதையும் எடுத்தியம்புகின்றன எனலாம். இக்காலத்தில் எழுந்த மட்டக்களப்பு மான்யம் சிங்களவர் மேலாணை ஏற்கப்பட்ட காலத்திலும் கூடத் தனியாக விளங்கிய தமிழரின் கலாச்சார பாரம்பரியத்தினை எடுத்துக் காட்டுகின்றது எனலாம்.



மட்டக்களப்பில் ஒல்லாந்தரின் கோட்டை கி.பி 17ம் நூற்றாண்டு

(VII)

கி.பி. 1658இல் போத்துக்கேயரிடமிருந்து அரசியலாதிக்கத்தினை ஒல்லாந்தர் கைப்பற்றியதன் விளைவாக ஈழத்தின் வடபகுதி இவர்களின் ஆட்சிக்கு கீழ் வந்தது. வடபகுதி வன்னிச் சிற்றரசர்கள் இவர்கள் மேலாணையை ஏற்றனர். கிழக்குப் பகுதியில் திருகோணமலையிலிருந்த வன்னிச் சிற்றரசுகள், மட்டக்களப்புச் சிற்றரசுகள் தமிழிற் கருமமாற்றினாலும்கூட கண்டி மன்னனின் மேலாணையை ஏற்றிருந்தன. எனினும் கி.பி. 1766 இல் கண்டி மன்னனுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் விளைவாக ஒல்லாந்தர் (டச்சுக்காரர்) ஈழத்தின் கரையோர மாகாணங்களுக்கு அதிபதியானார்கள். இதனால் இப்பகுதிகளின் நிருவாகம் சீரமைக்கப்பட்டது. இவர்கள் மேற்கொண்ட நிருவாக நடவடிக்கைகள் இப்பகுதிகளில் கலாச்சார பாரம்பரியத்தினை இவர்கள் அங்கீகரித்ததையே எடுத்துக்காட்டுகின்றன. இக்கரையோரப் பகுதிகளை எல்லாமாக ஆறு மாவட்டங்களாக இவர்கள் பிரித்தார்கள். இவற்றுக்கும் பொறுப்பாகத் தலைவர்கள் நியமிக்கப்பட்டனர். இவ்வாட்சி மாவட்டங்கள் பின்வருமாறு அமைந்தன. (57)

(1) கொழும்பு மாவட்டம் பெந்தோட்டை ஆறு தொடக்கம் வடக்கே தெதுறு ஓயா வரைக்கும் பரந்திருந்தது.

(2) புத்தளம் – கற்பிட்டி மாவட்டம் – தெதுறுஓயா தொடக்கம் மோதரகம்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆறுவரை பரந்திருந்தது.

(3) யாழ்ப்பாண மாவட்டம் — மோதரகம் ஆறு தொடக்கம் வடக்கே யாழ்ப்பாணக் குடாநாடு வன்னிப் பகுதி ஆகியவற்றையும் உள்ளடக்கிக் கிழக்கே கொக்கிளாய் வரையும் பரந் திருந்தது.

(4) திருகோணமலை மாவட்டம் – கொக்கிளாய் தொடக்கம் தெற்கே வெருகல் ஆறு வரையும் பரந்திருந்தது.

(5) மட்டக்களப்பு மாவட்டம் –வெருகல் ஆற்றிலிருந்து தெற்கே கும்புக்கன் ஆறு வரையும் பரந்தி ருந்தது.

(6) காலி மாவட்டம் – கும்புக்கன் பெந்தோட்டை ஆறுகளுக்கிடைப் பட்ட பகுதியை உள்ளடக்கியிருந்தது.

இவ்வாறு நிருவாக வசதிக்காக ஆறு ஆட்சி மாவட்டங்களை அமைத்த டச்சுக்காரர் அவ்வப் பகுதிகளின் வழக்கங்களுக்கேற்ப நீதி நிருவாகத் தினையும் ஒழுங்கு செய்திருந்தனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் இப் பகுதியில் தொன்றுதொட்டு நிலவி வந்த தேச வழமைப்படியே நீதி நிரு வாகம் அமைந்திருந்தது. அத்துடன் இப்பகுதித் தேச வழமைச் சட் டங்களைத் தொகுத்த பெருமையும் இவர்களுக்கே உண்டு. மட்டக்களப்பு மாவட்டத்தில் முக்குவர்களுக்கே தனிச்சிறப்பான முக்குவ வழக்கங் கள் இப்பகுதி நிருவாகத்தில் முக்கி யம் பெற்றன. எனினும் நீதி நிரு வாகத்தை ஒருங்கிணைக்க விரும்பிய டச்சுக்காரர் சிங்களப்பகுதிகளின் நீதி நிருவாகத்தையும், தமிழ்ப்பகுதி களின் நீதி நிருவாகத்தினையும் வெவ்வேறாகவே இனங்கண்டு கொண் டதை இவர்கள் ஏற்படுத்திய நீதி நிருவாகப் பிரிவுகள் உணர்த்துகின் றன. இவ்வாறு ஆட்சி மாவட்டங் களும் நீதி நிருவாகத்திற்காக மூன்று பெரிய மாவட்டங்களாகச் செயற் பட்டன. அவையாவன கொழும்பு, காலி, யாழ்ப்பாண நீதி மாவட்டங் களாகும். (படம் 1) கொழும்பு நீதி நிரு வாக மாவட்டம் கொழும்பைத் தலை மையகமாகக் கொண் டிருந்தது. இப்பிரி வில் கொழும்பு, புத் தள மாவட்டங் கள் அடங்கி இருந் தன. புத்தளம், நீர் கொழும்பு ஆகிய இடங்களிலுள்ள தமி ழர்கள் மெல்ல மெல் லச் சிங்கள மொழி பேசுபவர்களாக மாறத் தொடங்கினர்.




சோழர் கால பொலநறுவைச் சிவாலயம் கிபி 10 ம் நூற்றாண்டு

காலி நிருவாக மாவட்டம் காலி யைத் தலைமையக மாகக் கொண்டிருந்த தோடு இதனுள் பெ ந்தோட்டை ஆறு தொடக்கம், கும்புக் கன் ஆறுவரையிலுள்ளபகுதிகள் அடங் கியிருந்தன. ஆனால் தமிழ்ப்பகுதி களாகிய யாழ்ப்பாணம், திருகோண மலை, மட்டக்களப்பு ஆகியன ஒரே நீதி நிருவாகம்பிரிவில் அடங்கி யிருந்தன. இதன் தலைமையகம் யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்தது. திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள வழக்குகள் யாழ்ப்பாணத்தில் மேல் விசார ணைக்கு அனுப்பப்பட்டன. ஒல் லாந்தரின் நடவடிக்கைகள் சிங்கள வர் – தமிழர் ஆகியோர் தனித்து வமான கலாச்சார பாரம்பரியத் தைப் பேணுபவர்கள் என்பதை அங்கீ கரித்ததையே உணர்த்துகின்ற அதே சமயத்தில் தமிழரின் பாரம்பரிய பிரதேசத்தினையும் அங்கீகரித்ததை யும் எடுத்துக்காட்டுகின்றன.

ஒல்லாந்தரிடமிருந்து ஆட்சிப் பொறுப்பைக் கையேற்ற பிரித்தானி யரும் சிங்கள – தமிழ் மக்கள் தனித்து வமான மரபுவழித் தாயகங்களில் வாழ்ந்து வந்ததை இனங்கண்டு கொள்ளத் தவறவில்லை. அது மட்டு மன்றி இவை இரண்டும் தனித்தனி யான தேசிய இனங்களே என்பதனை யும் அங்கீகரித்திருந்தனர். ஐரோப் பாவில் தேசியவாதம், தேசிய இனங் கள் ஆகியனவற்றின் உருவாக்கத்தை அறிந்திருந்த இவர்கள் தனித்தனிப் பகுதிகளில் தனியான பொருளாதார. நீதி நிருவாக கலாச்சாரப் பாரம்பரி யத்தினை உடைய சிங்கள – தமிழ் மக்களை இவ்வாறு இனங்கண்டு கொண்டமை வியப்பன்று. கி. பி. 1796 இல் ஈழம் பிரித்தானியர் கை யில் வந்தபோது முதலாவது தேசாதி பதியாக நோத்பிரபு கடமையாற்றி னார். இவரின் காரியதரிசியாககிளை கோன் விளங்கினார். இவர் 1799 இல் வெளியிட்ட குறிப்பு தமிழரைத் தனியான தேசிய இனமாக இவா கள் இனங்கண்டு கொண்டதை எடுத்துக்காட்டுகிறது. (58) அதாவது "இலங்கைத் தீவானது மிகப் பழைய காலந்தொட்டே இருவேறு தேசிய இனங்களால் வெவ்வேறு பகுதி களில் உரிமை கொண்டாடப்பட் டுள்ளது. இத்தீவின் நடுப்பகுதியும் தென்பகுதியும் வளவை ஆற்றிலி ருந்து சிலாபம் வரையிலான மேற் குப்பகுதியும் சிங்கள இனத்தவரால் ஆட்சிசெய்யப்பட்ட பகுதியாகும் இத்தீவின் வடக்கு கிழக்கு நிலப் பகுதிகள் மலபார் (தமிழ்) மக்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாகும். இவ்விரு தேசிய இனங்களும் இவ விரு பகுதியினரும் மதத்தாலும் மொழியாலும் வாழ்க்கைப் பண்பாட்டாலும் முற்றிலும் வேறு பட்டவர்களாவர்."

தொடரும்

கொட்டகம பிரதேசத்தில் காணப்பட்ட தமிழ்க் கல்வெட்டு கி.மு 1ம் நூற்றாண்டு





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இதுதான் வீரம்



தன் ஊரிழந்து உறவிழந்து
மட்டுமல்ல தன் உயிரிழக்கவோ
அத்தனை புன்னகையோடு
களம் செல்ல அனுமதி
கேட்கிறானே
ஏன் அவனுக்குள்
ஆசையில்லையா?
அவனுக்குள் பாசமில்லையா?
இல்லை இதுதான் வீரமா?
தன் உணர்விழந்து உறக்கம்
இழந்து
மட்டுமல்ல தன்னல
உணர்விற்கே
தீயிட்டு தைரியமாய் கால்வைத்து
மரணத்திற்கு
மணிபார்க்கின்றானே
இவன் என்ன
மனிதனில்லையா?
இல்லை இதுதான் வீரமா?
வீரனின் நெஞ்சில்தான் வீரம்
ஆனால் இவன் ஒவ்வொரு
அசைவுகளிலுமே வீரம்.
பொறித்து விடுங்கள்
அகராதிகளில்
வீரத்தின் இலக்கணத்திற்கு
தமிழீழப் போராளி என்று
இதுதான் வீரமே.

-கலைநிலா-



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# வவுனியாவில் சிங்களப்பன சோதனைக்

வன்னிப்பெரு நிலப்பரப்பின் ஒரு பகுதியான சிங்களப்படையின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருக்கும் வவுனியாவிலே பாதுகாப்பு நிலைமைகள் நாளொரு "சென்றி"யும் பொழுதொரு "பங்கரு"மாக அதிகரித்துக் கொண்டே செல்வதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் வன்னிப்பகுதிக்கான போக்குவரத்து மாற்றம் இதர தேவைகளை மக்கள் பூர்த்தி செய்து கொள்ளும் ஓர் மத்திய நிலையமாகத் தற்போது வவுனியா இருந்து வருகிறது. அதே வேளை, சிங்களப்படையினரைப் பொறுத்தவரையிலும் வவுனியா ஓர் முக்கிய இடமாகவும் இராணுவ ஆக்கிரமிப்பு செயற்பாடுகளை வன்னியில் மேற்கொள்ள ஓர் மத்திய நிலையமாகவும் இருந்து வருகிறது. இந்த வகைகளில் பார்க்கும் போது வன்னிமக்களுக்கும், சிங்களப் படைக்கும் வவுனியா ஓர் முக்கியத் துவம் மிகு பகுதியாகவே இருந்து வருகிறது.

ஆங்காங்கே சோதனைச் சாவடிகள் அமைத்து சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடும் சிங்களப் படையினர் ஒருபுறமிருக்க திடீர் திடீரென பஸ்களிலும் மோட்டார் சைக்கிள்களிலும் வரும் படையினர் வீதிகளில் திடீரென நிறுத்தி விட்டு அந்தப் பகுதியில் செல்லும் வாகனங்களையும், பொதுமக்களையும் தீவிர சோதனைக்கு உட்படுத்துகின்றனர். இதுதவிர வீதியில் சென்று கொண்டிருக்கும் மக்கள்மீது, மோட்டார் சைக்கிளில் 'நகர பவனி' வரும் சிங்களப் படையினருக்கு சந்தேகம் ஏற்பட்டால் உடனடியாக அங்கே தீவிர சோதனையும், விசாரணையும் ஏற்படும். அத்தோடு துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் மற்றும் இதர வாகனங்களை அவசரவேளையின் போதுகூட விரும்பிய, வசதியான இடங்களில் நிறுத்திவிட்டுச் செல்ல முடியாது. இது தவிர வங்கிகள் மற்றும் அரச அலுவலகங்களுக்கு தேவைகள் நிமித்தம் செல்லுபவர்கள் சைக்கிள்களிலோ அல்லது வாகனங்களிலோ அந்த அலுவலக வளாகத்தினுள் நுழைய முடியாது. தூரத்தில் அமைந்துள்ள குறிப்பிடப்பட்ட இடங்களில் நிறுத்திவிட்டு கால்நடையாக வேதான் செல்ல வேண்டும். அத்தோடு, வவுனியா ரயில் நிலையத்தில் ரயில் வரும்போதும் புறப்படும் போதும் மக்கள் புகையிரத நிலையத்தில் கூடிநிற்பது வழக்கம். ரயிலில் வருவோரை அழைத்துச்செல்லவும், பிற இடங்களுக்கு செல்வோரை வழியனுப்பி வைப்பதற்கும் மக்கள் இவ்வாறு அங்கே கூடி நிற்பர். அவ்வாறு அங்கே காத்திருப்போர் தற்போது புகையிரத நிலையத்திற்கு முன்னால் நிற்பதற்கும், வாகனங்கள் நிறுத்துவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. சுமார் 500 மீற்றர் தொலைவிலுள்ள மரநிழலின் கீழ் நிற்குமாறு பொது மக்கள் சிங்களப்படைகளால்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# டயின் கெடுபிடிகள்



விரட்டப்படுகின்றனர். இதனால், வரவேற்க வந்தவர்களுக்கு தமது உறவினர்கள் வந்தனரா இல்லையா என்று அறிய முடியாத நிலையும், வழியனுப்ப வந்தவர்களுக்கு தமது உறவினர்கள் சென்றனரா இல்லையா என்பதையும் அறிய அந்த மர நிழலின் கீழ் மணிக்கணக்காக காத்திருக்க வேண்டியுள்ளது.

மேலும் பைகளுடன், மூட்டை, முடிச்சுக்களுடனும் செல்வோரின் நிலையோ மிகவும் பரிதாபகரமானதாக இருக்கிறது. மொத்த வியாபாரிகள் சாக்குகளில் எடுத்து வரும் தேங்காய், தேசிக்காய், உருளைக் கிழங்கு, போன்றன நடுவீதியிலேயே சோதனைச்சாவடிகளில் அவிழ்த்துக் கொட்டும்போது அவை அங்குமிங்கும் ஓட அவைகளைத் துரத்திப் பிடித்து சாக்கில் போட்டு எடுத்து செல்ல வேண்டிய நிலையை அன்றாடம் வவுனியா சோதனைச்சாவடிகளில் காணலாம். இந்தச் சோதனைக் கெடுபிடிகள் முகத்தினைப் பார்த்தே மேற்கொள்ளவும் படுகின்றன. ஆண்கள் என்றால் மீசையும் பெண்கள் என்றால் பொட்டும் வைத்திருந்தால் அவர்கள் நிச்சயம் இந்த கெடுபிடிகளிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது.

இதேபோல, வவுனியாவிலிருந்து தென்பகுதிக்குச் செல்லும் வாகனங்களும், அங்கிருந்து வவுனியாவிற்கு வருகிற வாகனங்களும் சோதனைச்சாவடிகளிலே தீவிரமான சோதனைக்கு உட்படுத்தப்படத் தவறுவதேயில்லை. பொதிகள் ஏற்றிவரப்படும் வாகனங்கள் முன்னர் மதவாச்சிப்பகுதிக்கு முன்பாகவுள்ள மைத்திரிபுர என்னுமிடத்தில் வைத்து சோதனைக்குட்படுத்தப்பட்டு வந்தன. ஆனால் தற்போது வவுனியாவின் நுழைவாயிலான ஈரற்பெரிய குளம் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது. அங்கே பொதிகளுடன் போகும் வாகனங்களும், வரும் வாகனங்களும் ஒரேயிடத்தில் நிறுத்தப்பட்டு சோதனையிடப்படுகின்றன. முன்னரோ சோதனைகள் மேலெழுந்தவாரியாக மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஆனால் தற்போது சோதனைகள் மிகவும் இறுக்கமடைந்து காணப்படுகின்றன. பொதிகள் அனைத்தும் பிரிக்கப்பட்டு தோண்டித் துருவி ஆராயப்படுகின்றன. இதனால் பல மணிநேரம் வாகனப் பயணம் தாமதமாகின்றது.

பொதிகள் மீது மேற்கொள்ளப்படுகின்ற சிங்களப் படையினரது சோதனை குண்டுப்பரிசோதனையாகத் தெரியவில்லையென வாகனச் சாரதிகளும், நடத்துனர்களும் குறிப்பிடுகிறார்கள். பொதிகளை பிரித்துப்பார்த்து

தமக்கு தேவையான அளவிற்கு எடுத்துக்கொள்வதிலேயே சோதனையினை மேற்கொள்ளும் சிங்களப்படையினர் கண்ணும் கருத்துமாய் இருப்பதாகவும் தெரிய வருகிறது. இவைகளை சில வேளைகளில் வாகன சாரதிகளிடமோ அல்லது நடத்துனர்களிடமோ கேட்டே சிங்களப்படையினர் பெற்றுக் கொள்ளுவதாக கூறப்படுகின்றது. பல வேளைகளில் பல வந்தமாகவே எடுத்துக்கொள்ளுகின்றனர். கேட்டுக் கொடுக்க வாகன உரிமையாளர்கள் மறுக்கும் போது அவர்களது பொதிகள் அக்குவேறு ஆணிவேறாக சோதனையிடப்படுகின்றன. இந்தக் கொடுமைக்கு அஞ்சி வாகனக்காரர்கள் கேட்டவுடன் தானம் பண்ணுவதில் பின்நிற்பது கிடையாது எனவும் கூறப்படுகின்றது.

இவ்வாறு வவுனியாவிலே நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக சோதனைக் கெடுபிடிகள் இறுக்கமடைந்து கொண்டே வருகின்றன.

சோதனைச்சாவடிகள் ஆயிரமமைத்து பாதுகாப்புக் கெடுபிடிகளை எவ்வாறு அதிகரித்தாலும் அதனால் பாதிக்கப்படப் போவது பொது மக்களே. அதிலும் குறிப்பாக தமிழ்மக்கள். இவர்கள் என்னதான் செய்தாலும் புலிகளின் நடமாட்டத்தினையும், அவர்களது ஊடுருவல்களையும் சிறீலங்கா அரசினாலும் சரி, சிங்களப் படைகளாலும் சரி தடுக்கமுடியாது. ஏனெனில் புலிகள் காற்றுச் செல்லும் துவாரம் வழி உட்புகுந்து விடுவார்கள்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இளம் சமுதாயமே! உணர்வுகளைத் தட்டி எழுப்புங்கள்

–சிவராஜகுமாரி–

உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் இன்று சிறுபான்மை இன மக்கள் நசுக்கப்பட்டு வருகிறார்கள். சிறுபான்மை இன மக்கள் கிளர்ந்தெழாமல் முடங்கிக்கிடக்கும் நாடுகளில் இந்த ஒடுக்கங்கள் தொடர்கின்றன. மாறாக சில நாடுகளின் சிறுபான்மை மக்கள் தம்மீதான தடைகளைத் தகர்த்தெறிந்து இன்று உலக அரங்கில் பெரும் சக்தியாக மாறி வருகின்றனர். இப்போது சிங்கள இனவாதப் பிசாசுகளின் கைக்குள்ளும் தமிழ்ச் சமுதாயம் நசுங்கி வேரறுக்கப்படும் நிலைக்கே தள்ளப்பட்டு வருகிறது. இந்த நிலை நீள அனுமதித்தால் தமிழ்ச் சமுதாயத்தின் எதிர்காலம் சூனியமாக இருக்கப்போகின்றது. எனவே இதற்காக நாம் என்ன செய்ய வேண்டும் என்பதற்கு பெரிதாக மூளையைக் குடையத் தேவையில்லை. இன்றைய ஒவ்வொரு தமிழ் மகனுக்கும், யுவதிக்கும் இந்த நிலையில் தெளிவில்லை என்று கூறிவிட முடியாது. ஆனால் அவர்கள் தம்மை மந்தப்புத்திக்காரராகவே காட்டிக் கொள்கிறார்கள். எம் நாடு, எம் மக்கள், எம் இனம், எம் சமுதாயம் என்று விடுதலைக்கான போரில் தம்மை ஆகுதியாக்கிக்கொண்டிருக்கையில், அதே நாடு, அதே மக்களின் அழிவுகளுக்கு இன்னொரு இளம் சமுதாயம் காரணமாக இருக்க விருப்பம் கொள்வது வேடிக்கை பார்ப்பது இனியும் அழகல்ல!

உலக விடுதலைப் போராட்டங்கள், பெரும்பான்மை இனங்களால் அடக்கு முறைக்கு ஆளாகிவரும் மக்கள் அனைவரும் தீவிரத்துடன் தங்கள் தடைகளை துடைத்தெறிய கங்கணம்கட்டி நிற்கையில், வீரமே இரத்தத்தில் ஊறியிருக்கும் நாம் எல்லாம் சிங்கள இனவாதத்திற்கு எங்கனம் எமது மண்ணை, எம் மக்களை இனியும் பலியாக்கியபடி இருக்கலாம். உலக மகா வல்லரசு நாடுகளை எதிர்த்து சின்னஞ் சிறிய தேசமெல்லாம் போர்க் கொடி தூக்குகையில் எம்மைவிட மனோபலத்தால் பின்தங்கியுள்ள சிங்களத்திற்கு முன் பயந்து நாம் எல்லாம் ஏன் ஓடிக்கொண்டேயிருக்க வேண்டும்.

எம் வரலாறு முழுவதும் ஓடியோடி நாம் களைத்துப்போய் இருக்கிறோம். இனிமேல் ஓடுவதற்கு நாதியற்றும் துடிக்கிறோம். ஆனால் இந்த ஓட்டத்தை நிறுத்தும் சக்தி எம்மை விட்டு எங்கும் ஓடிவிடவில்லை. பின் ஏன் நாம் எப்போதும் ஓடிக்கொண்டேயிருக்க வேண்டும்?

இன்று சிங்களம் எம் எல்லைகளை மெல்ல மெல்ல ஆக்கிரமித்துக் கொண்டே வருகின்றான். எம் பிரதேசங்கள் முழுவதையும் எதிரியிடம் கொடுத்துவிட்டு நாம்மெல்லாம் நிம்மதியான வாழ்வைக் கனவிலும் கண்டு கொள்ள முடியாது. சிங்கள இனவாதம் என்றைக்கும் தமிழ் மக்களுக்கு எதையும் அள்ளிக்கொடுத்தது கிடையாது. அப்படி எதையும் கொடுக்கப் போவதுமில்லை. எம் வரலாறு முழுவதும் இதை நாம் கண்டு அனுபவித்து வந்துள்ளோம். ஆனால் இப்போது மட்டும் சிங்கள இனவாதம் என்னத்தைத் தந்துவிடப் போகின்றார்கள் என எம் தேசத்தில் உள்ள ஒவ்வொரு இளைஞர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எம் நிலங்களை அபகரித்து அதே நிலங்களை சிங்களக் குடியேற்றங்களாக்கி, எம் சமுதாயம் என்ற களை பிடுங்கி எமது மண்ணிலே எருவாக்கி அதே மண்ணில் விளைச்சல் பெறப்போவது சிங்களப்பேரினவாதமே. இந்த இனவாத சிந்தனையைத்தான் இற்றை வரைக்கும் சிங்கள ஆட்சியாளார்கள் நிறைவேற்றி வருகின்றார்கள். சிங்கள ஆட்சியாளர்கள் மாறினாலும் இந்த இனவாத சிந்தனைகள் அவர்களின் மண்டைகளை விட்டு கழன்றுவிடப் போவதில்லை. சிங்களம் ஆக்கிரமித்த பகுதிகள் சகலவற்றிலும் இதுவே தொடர்கின்றது. இந்தக் கட்டங்களாகவே தொடர்ந்தும் எமது மக்களின் குரல்வளைகளை சிங்களம் இறுக்கி வருகின்றது. எமது மக்களை நிர்க்கதியாக்கி அவர்களை அடிமைத் தளத்தில் இருத்திய பின்னர் சிங்களம் எம்மை நோக்கி எலும்புத் துண்டுகளை மட்டும் எறிந்துகொண்டிருக்கும்.

நாமும் மெல்ல மெல்ல எமது இனத்தை அழிவுக்குத் தள்ளிவிட வேண்டிய நிலையே ஏற்படும். இந்த நிலை தொடர அனுமதித்த பின்னர் நாமெல்லாம் வாழ்ந்து என்ன கண்டு விடப் போகிறோம். சாவைப்பற்றியே கவலைப்படாமல் எம்சேனைகள் போராடிக்கொண்டிருக்கும் போது வாழ்வைப்பற்றிய கனவுகண்டு நாமெல்லாம் ஏன் அலட்டிக்கொண்டிருக்க வேண்டும்.

தொடர்ந்து எமது இளைய சந்ததிக்காக வாழ்வழிக்க வேண்டும் என்று நாம் வரலாறு பூராவும் கூறிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. எங்களுடன் இளையசந்ததி இணைந்து போராட வேண்டும். எம் மண் விடுதலை பெற வேண்டும். இந்தத் தொடருகின்ற அவலம் எம்முடன் நிறைவுக்கு வர வேண்டும். எம் மக்கள் சிங்கள இனவாதப் பிடியில் இருந்து விடுவித்துக் கொள்ளத் தம்மை இனிமேலும் பின்னடித்துக் கொள்வது முறையல்ல.

தமிழர் சேனையின் தற்போதைய வளர்ச்சியைப் பயன்படுத்தி நாமெல்லாம் எமது விடுதலையை விரைவு படுத்தியே ஆகவேண்டும். நாமெல்லோரும் வாழப்பிறந்தவர்கள்தான். ஆனால் அடிமையாக வாழப்பிறந்தவர்கள் இல்லையே! சிங்கள இனவாதத்தின் பிடிக்குள் சிக்கித் திணறி எமது சுதந்திரம், நிம்மதி எல்லாவற்றையுமே இழந்துவிட்ட வாழ்வை, எங்கனம் வாழ்கின்றோம் என்று நாம் பறைசாற்றலாம்.

எனவே எம் இளம் சமுதாயமே நீங்கள் உங்களின் உணர்வுகளைத் தட்டி எழுப்புங்கள். தமிழர் சேனையின் கைகளைப் பலப்படுத்துங்கள். உங்களின் எழுச்சி வீறுகொண்டு இருக்கும் எம் இதயங்களிலும் புது உத்வேகத்தைத் தந்து விடும். நீங்கள் திரண்டுவரின் எம் நிலங்களை ஆக்கிரமித்து இருக்கும் எதிரிகளை இப்போதிலிருந்தே நாம் விரட்டியடிக்க புயலாகின்றோம். எழுந்து கொள்ளுங்கள். எங்களின் இளம் சமுதாயமே நாமெல்லாம் ஒன்றானால் எம் விடுதலைக்கனி இனியும் எம்மை விலத்திச் செல்லப்போவதில்லை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இனியும் நான் சின்னவளோ?

அம்மா! உன் பிள்ளை, அறியாப் பருவத்தாள்;
சும்மாயா ரோவம்பர் சொல்லை விழுங்கிக்
களத்தினிலே போய்நின்று காய்கின்றாளோ? வென்(று)
உயத்திலெழும் கொச்சை உணர்வுகளால் வாடாதே!
அன்றோருநாள், இல்லம் அதிர்ந்துதிர முற்றத்தில்
குன்றுகிளர்ந் தாற்போலக் குண்டு வெடித்திடவே
வேப்பமரம் கோழிகளும் வெள்ளாடும் மற்றுனது
காப்பரணாம் மஞ்சள் கயிறும் சிதறினவே!
தந்தையெமக் கில்லை; தாலியுனக் கில்லையென்(று)
இந்தவகை நாங்கள் இரங்கிநெஞ் சேங்கினமே!
பின்னையும் நான் அறியாப் பிள்ளையோ? இன்னுமென்ன
கொன்னைமொழி பேசும் குழந்தையோ? இன்றுநான்,
ஏழிரண் டாண்டின் எழிலார் குமரியம்மா!
நாலிரண்டு சொல்லும் நயந்தவள்தான் பள்ளியிலே!
உன்னோ டிருந்துநான் உண்ணாத நாளெத்தனை?
கண்ணுறக்கம் இன்றிக் கலங்கியவா றேசிறிய
மண்குழிக்குள் மெல்ல மடிந்த இரவுபகல்
எண்ண முடியாவே! ஏனம்மா? வாழாமல்
சாகும்வாழ் வுக்கா தவிக்கின்றாய்? வானூர்தி
ஏகும் இரைச்சல், எறிகின்ற குண்டொலியும்
நெஞ்சைப் பிளக்க நினைவு தடுமாறி
அஞ்சிக் கிடக்கும் அவலந்தான் வாழ்க்கையதோ?
பின்னையும் நாம் அறியாப் பிள்ளையோ? அன்னுமென்ன
கொன்னைமொழி பேசும் குழந்தையோ? இங்குநான்
கையில் கலமேந்திக் காப்பரணில் நிற்கின்றேன்
பொய்யில்லை அம்மா! புதுப்பெண்நான் எங்களுடை
மண்ணின் அரசியென்பேன்! மானம் நிறைந்தென்றன்
கண்ணில் ஒளிவீசு, கைகால் தலைநிமிர்ந்து
விண்ணளவு நான்வளர்ந்து விட்டேன்! இனியும்நான்
சின்னவளோ? இங்கு, சிலவேளை அண்ணன்
அவர்தான்நீ வாயூறி வாழ்த்தும் மறவன்
சுவரோவியம் போல் தொலையா அழகரம்மா!
மண்ணில் தனிப்பிறவி - மாவீரர் - எம்முடைய
தண்ணந் தலைவரைத்தான் சாற்றுகிறேன்; வந்தவர்தாம்
நல்லொழுக்கம் வீரம் நடைமுறைகள் பேரறிவும்
எல்லாமே சொல்லித்தந் தேகுமந்நாள் எல்லாம்
எனக்கோ பிறந்தநாள் இங்கெவர்க்கும் பொன்னாள்!
மனக்கினியர் அன்னார்மற் றுன்னில் இனியரம்மா!
இன்னுநான் ஏதும் அறியாத சின்னவளோ?
விண்ணளவு பாயுமோர் வேங்கையம்மா! நான்முன்பு
போட்டசட்டை யும்படித்த புத்தகமும் மற்றெங்கள்
வீட்டில்நான் வைத்து விளையாடும் பாவைபந்தும்
எல்லாம் உனக்கிரக்கம் ஏற்படுத்தி என்பழைய
பொல்லா நினைவைப் புதுக்கிவிடும் ஆதலினால்
அன்னவற்றை யாதுமின்றி அல்லற் படுகின்ற
சின்னச் சிறுமியர்பாற் சேர்த்துவிடு! தம்பியை
பள்ளிக்குப் போக்கிவை பாவம் வெயிற்சுடும்
சின்னக்கால் நோகும் செருப்புவாங் கிக்கொடம்மா!
மண்ணின் இருள்விடிந்து வாழ்வு மலரட்டும்
சின்னாள் பொறுப்பாய் செருவொழியும்
நான்வந்துன்
பொன்முகம் காண்பேன் புலம்பாதே
இப்படிக்குன்
அன்புமற வாத அழகு.

**-பண்டிதர் பரந்தாமன்-**





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓ வீரனே!

சோகம் ஒவ்வொருவருடைய சொந்த அனுபவங்களின் வாயிலாக, உணர்வுரீதியாக உணரப்படுகின்ற சோகம் என்பது சொல்லுக்கும் பொருளுக்கும் அப்பாற்பட்டு நின்று ஆட்டப்பட்டவரை உலுப்பி எடுக்க வல்லது.

இழப்பினால் ஏற்படும் சோகம், பிரிவினால் ஏற்படும் சோகம், தவறினால் ஏற்படும் சோகம், என்று சோகத்திற்கு காரணமான காரணிகளைப் பல வகைப்படுத்தலாம். கவலைகள் பல விதம். அவை ஒவ்வொன்றும் ஒரு ரகம். ஆழவேரோடும் துயரம் உயிரையே குடித்து விடும் வலிமை மிக்கது. அதனாற்தான் கவலையை "நஞ்சு" என்று வர்ணிக்கிறார்கள்.

சோகங்களுள் எல்லாம் மிகப்பெரிய சோகம் புத்திர சோகம், பாசத்திற்குரிய பற்று ஒன்று பறிபோவதை யாரால்த்தான் பொறுத்துக்கொள்ள முடியும்? அதுவும் தமது மக்கள் தமது கண் முன்னாலேயே மரணமடைவதைக் கண்டு மனம் பதைத்து பதறி அழுத பெற்றோர்களின் பாசப்பிணைப்பைத் தமிழிலக்கியங்கள் பல சுட்டி நிற்கின்றன. பெற்றெடுத்த நாள் முதலாய் பாலூட்டி, சீராட்டிப் பற்றுடனே வளர்த்தெடுக்கும் போது.....

உன்கண்ணில் நீர் வழிந்தால்-
என் நெஞ்சில்
உதிரம் கொட்டுதடி!
என் கண்ணிற் பாவையன்றோ-
கண்ணம்மா!
என்னுயிர் நின்னதன்றோ
சொல்லும் மழலையிலே
கண்ணம்மா!
துன்பங்கள்
தீர்த்திடுவாய்
முல்லைச் சிரிப்பாலே-
எனது மூர்க்கம் தவிர்த்திடுவாய்.

என்று உச்சி முகர்ந்து முத்த மழையில் நனைந்து, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகத் தத்தி தளர் நடை நடந்து, இட்டும், தொட்டும், கௌவியும், துளாவியும் மகிழ்ந்து உணவு உண்பதைக் கண்டு ஆனந்தம் கொண்ட பெற்றோர், தமது செல்வங்களை இழந்து நிற்கும் போது தவிக்கும் தவிப்பு, சோகங்கள் எல்லா வற்றிலும் பெரிய சோகமாகும்.

பிள்ளைக் கனியமுதமாக பேசும் பொறிச்சித்திரமாக, செல்வக்களஞ்சியமாக, சின்னஞ்சிறு கிளியாக, மார்பில் அணியும் வைரமணியாக, சீர் பெற்று வாழ்வதற்குச் சிறப்புச் செய்த செல்வமாக சுப்பிரமணிய பாரதியாரால் பாராட்டப்பட்ட மழலைச் செல்வம் செல்வங்களுள் எல்லாம் மிகப் பெரிய செல்வமாகச் சிறப்பிடம் பெறுவது. அத்தகைய கிடைத்தற்கரிய செல்வத்தை ஒரு விடுதலைப்போர் மாவீரனாக வீரமரணம் எய்தும் போது ஒவ்வொரு தாயும் தந்தையும் அடைகின்ற வேதனை சொல்லவொணாதது.

தாயகப் பற்றோடு தமது புதல்வர்கள் தங்களைத் "தற்கொடை" செய்தமையை எண்ணி ஒரு புறம் அந்த வீரர்களது வியத்தகு வீரம் கண்டு பூரித்தாலும், "புத்திர சோகம்" என்ற பாச இழப்பு அன்புடையோர் அனைவரையும் ஒருமுறை கவலைக்குள் தள்ளிவிடுகிறது. ஈன்ற பொழுதில் பெரிதுவந்து தமது தவப்புதல்வரின் உறுதிக்கு தலைவணங்கும் அதேவேளை ஊனை



-இலக்கியா-



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உருக்கி உயிரை ஊடறுக்கும் சோகம், அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ் என்றபடி கண்வழியே வெளிப்பட்டு விடுகின்றது.

பாரதப் போரிலே அர்ச்சுனனுடைய புதல்வன் அபிமன்யு போர்க்களத்திலே ஒப்பற்ற வீரத்தைக்காட்டினான். ஆனால் அந்த மாபெரும் வீரன் பதின்மூன்றாம் நாட்போரில் அநியாயமாகக் கொல்லப்பட்டான். "பிறந்த நாள் முதலாய் உன்னைப் பெற்றெடுத்த அர்ச்சுனனை விடவும் பெருமையும் ஒளியும் மிக்கவனாக நீ இருந்தாய். உன் வீரத்தைக் கொண்டே எதிரியை வென்று உலகை ஆளலாம் என்று நினைத்திருந்தேனே.... இன்று எங்களையெல்லாம் மறந்தனையோ!" என்று தர்மன் கவலை தாங்காது அழுகின்றான்.

பிறந்ததினம் முதலாக பெற்றெடுத்த
விடலையினும் பீடும் தேசும்
சிறந்தனை என்று உனைக்கொண்டே
தெவ்வரை வென்று உலகு ஆளச்
சிந்தித்தேன் ஞான்
மறந்தனையோ எங்களையும்?

பாரதப்போரில் வீரமரணம் அடைந்த அபிமன்யுவின் மாமனோ கண்ணன். தந்தையோ அர்ச்சுனன். பாட்டனோ வானவர் தேவன் இந்திரன். அப்படியிருக்க விதி தன் வலிய கரங்களைப் பதித்ததோ அபிமன்யுவின் வாழ்வில்?

அபிமன்யு! இந்த வீரன் போர்க்களத்திலே காட்டிய வீரமும், அந்த வீரம் அறத்துக்குப் புறம்பான வழியில் அழிக்கப்பட்ட முறைமையையும் வில்லிபுத்தூரார் படிப்போர் நெஞ்சில் இரங்கல் உண்டாகும் வண்ணம் எடுத்துக் காட்டியுள்ளார். பாண்டவர்கள் ஐவரும் இருக்கின்றார்கள். அவர்கள் வயதில் பெரியவர்கள். அந்த ஐவரும் அசாதரணமானவர்கள். இந்த ஐந்து வீரர்களும் இருக்க, கண்ணன் என்னும் கடவுள் கூடவே துணை இருக்க, அபிமன்யுவின் இழப்பு நம்பக்கூடியதா என்று எண்ணத் தோன்றுகிறது.

புத்திரசோகம் என்னும் நஞ்சினால்
பொன்றினான் போல்
அத் தடந் தேரினின்றும் அவனி
மேல் அயர்ந்து
வீழ்ந்த அர்ச்சுனன் அழுது புலம்புகின்ற சோகம் எல்லோர் நெஞ்சையும் உருக்கவல்லது.

"சேனைகளின் துணையில்லாமல் தனித்தே நின்று போர் செய்த அபிமன்யுவே! உனக்குப் பொருத்தமான இடம் சொர்க்கலோகம் என்று இப்பூவுலகை நீத்துவிட்டாய். ஐயனே! களிப்போடு நம்மைக் காண்பதற்கு மகன் வருகின்றான்.... மகன் வருகின்றான் என்று இந்திரன் ஏவ உன்னை இமயவர் எதிர்கொண்டழைத்தாரோ? தேரை இழந்தாய். கையில் வில்லும் ஒளிபொருந்திய வாளும் இன்றி ஒரு உதவியும் பெறாமல் உயிரழிந்தாயோ மகனே! அற்புதமான படைகளில் வல்லவனே! என் அபிமன்யுவே! உன்னுடைய வலிமைபொருந்திய குன்று போன்ற புஜங்களில் ஒன்று வாளுடன் துணிக்கப்பட்டு வீழ்ந்தபிறகும் மிக அழகாகப் போர் செய்த நீ சொர்க்கலோகத்தை அடைந்தபோது அமராவதி நகரையும், கற்பகக்காவையும், ஆகாய கங்கையையும் காட்டினார்களோ மகனே? வளைந்தவில் நிமிரா வண்ணம் அம்புகள் எய்து குதிரைகளையும், தேரையும் ஒழித்துத் தன்காலால் துரோணரை திரும்பி நடந்து செல்லும்படி ஓட்டிய வீரனே! இடைவிடாது செய்த போரிலே அர்ச்சுனனுடைய சிறுவனின் மேனி இளைத்துவிட்டது என்று இந்திராணி இன்னமுது ஊட்டினாளோ?" என்று அர்ச்சுனன் என்கின்ற அந்தப் பாரதவீரன் தந்தையாக நின்று தவிக்கின்ற தவிப்பு எல்லோர் நெஞ்சையும் தொட்டுச் செல்கின்றது.

அபிமன்யு போர்க்களத்திலே காட்டிய அபாரப்போர்த்திறன், அந்த வீரன் வீரமரணம் அடைந்தபோது மிகப் பெரிய இழப்பாக எடுத்தியம்பப்பட்டது. அவன் செய்த போர்த்திறனை பூவுலகும் தேவரும் வான்முகடு அதிரக் கோசமிட்டுத் துதித்ததாகக் கூறப்பட்டது. கர்ணன் முதலில் அபிமன்யுவோடு போர்செய்து அவனது அம்பை அறுத்தான். வில்லை அறுத்தான். கொடியை அறுத்தான். துரோணாச்சாரியார் அவ்வீரனின் ஒரு கையைத் துணித்தார். இறுதியில் செயந்திரன் தலையைத் துணித்தான். தனியொருவராய்ப் பொருது தனித்து அழிக்க முடியாத இந்த வீரனை எத்தனை பேர் சேர்ந்து எத்தனை வழிகளில் அழிக்க முயன்றார்கள்.

போர் என்று வந்தால் போர்க்களத்தில் நின்று வீர உணர்வோடும், மான உணர்வோடும் போர் செய்து வீர மரணமடைகின்ற வீரன் வியக்கத் தக்கவன். போற்றத்தக்கவன். வணங்கத்தக்கவன்.

தர்மத்தின் வாழ்வதனைச் சூது கௌவும்
தர்மம் மறுபடியும் வெல்லும்.

என்பதற்கிணங்க தர்மத்தின் வெற்றிக்காய் போர்செய்து வாகைசூடி தனது வாழ்வை வரலாறாக்கிய பாரத அபிமன்யுவின் வரலாறு எமக்கொரு சான்று! ஒரு வரலாற்றுச் சாதனை! பாரத வெற்றி, பஞ்ச பாண்டவருக்கு கிடைத்த வெற்றி. அறத்துக்குக் கிடைத்த வெற்றி. அந்த வெற்றியைப் பெறுவதற்காகக் கொடுக்கப்பட்ட விலைகள் ஏராளம். அந்த விலைகள் கணக்கிடமுடியாதவை. அதற்கு ஒரு சான்று இந்த அபிமன்யு. இதேபோன்று மிக ஏராளமான வீரவித்துக்களின் விதைப்பில்தான் அறம் வெற்றிபெற்றது. அநீதி அடியோடு மறைந்தது.

இதேபோன்ற ஒரு தர்மயுத்தம் இன்று நிகழ்கால யுத்தமாய் நீள்கின்றது. இந்தப் புனிதப்போரில் எமது தாயகத்திலும் பல அபிமன்யுக்கள் மாவீரர்களாய், வீரவித்துக்களாய் விதையுண்டு போகின்ற நிகழ்காலம் இன்று எங்களுடையது. இந்த வீரர்களின் வீர வரலாற்றால் ஒரு அறப்போர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நாமும் தர்மர்களாய், அர்ச்சுனர்களாய், பீமர்களாய், நகுல சகாதேவர்களாய் ஒரு வித உடன்பிறந்த பாசப்பிணைப்போடு விடுதல் அறியா விருப்போடு ஏங்கிக் கதறி அழும் நெஞ்சங்களாய் நனைகிறோம். "நீ மடியவில்லையடா! உன் கதை முடியவில்லையடா! ஓ! வீரனே!" என்று பிரிவாற்றாமையால் எங்கள் வீரவித்துக்களின் இழப்பை ஈடுசெய்யும் வகைதெரியாது விம்மி வெடிக்கின்றோம். எங்களது சொத்துக்களின் வீரம் எங்கள் மண்ணுக்கு உரமாகி, தமிழுக்கு வளமாகி, ஈழத்துக்கு உயிர்ச்சத்தாகி ஊட்டம் தருவதால் வழியும் விழியின் துளிதொடுத்து அஞ்சலிகளை அர்ப்பணம் செய்து நிற்கின்றோம்.

அர்ச்சுனனாய் நின்று பிரிவாற்றாமையினால் விம்மும் தந்தையரும், தாயரும் இன்று வீர அபிமன்யுக்களைப் பெற்றெடுத்த, மாவீரர்களின் பெற்றோராய் ஈன்று புறம் தந்து நிற்கின்றார்கள். இவர்களின் மக்களின் ஈகம் ஈழத்தின் ஒளியாய் நாளை வெளிச்சம் நல்கும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண் விடுதலை
# தலைவர் அளி

இன்று அனைத்துலகப் பெண்கள் நாள். உலகப் பெண் இனத்தின் உரிமைக் குரல் உலகெங்கும் முழங்கும் ஓர் எழுச்சி நாள். மனித இனத்தின் சரிபாதி சனத்தொகையினர் சமநீதி கேட்டு நிற்கும் ஒரு புரட்சிகரநாள். இந்தப் பெண் எழுச்சி தினம் இன்று, தமிழீழம் எங்கும் கொண்டாடப்படுவதையிட்டு நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.



பெண் ஒடுக்குமுறை என்பது, யுகம் யுகமாக எல்லா நாடுகளிலும், எல்லா சமூகங்களிலும், எல்லாப் பண்பாடுகளிலும் நிலவிவந்த ஒரு சமூக அநீதி. இந்த சமூக அநீதி இன்னும் இந்தப் பூமியிலிருந்து அகன்றுவிடவில்லை.

நீண்ட காலமாக, வளர்ச்சி கண்ட நாடுகளில், தொடர்ச்சியாக நடந்து வந்த உரிமைப்போராட்டங்களின் பலாபலனாக, பெண்ணினம் குறிப்பிடத்தக்க சில வெற்றிகளை மட்டும் ஈட்டிக்கொள்ள முடிந்தது. அடிப்படையான மனித உரிமைகளையும், அரசியல் உரிமைகளையும் வென்றெடுக்க முடிந்தது. கல்வி வாய்ப்பும் தொழில் வாய்ப்பும் பெற்றுக் கொள்ள முடிந்தது. எனினும் இந்த நாடுகளில் பெண்ணின் பிரச்சனை தீர்ந்த பாடில்லை. இங்கு பழைய பிரச்சனைகள் புதிய வடிவங்களில் தோற்றம் கண்டு வருகின்றன.



அன்றொரு காலம், மேற்குலகில் முதலாளித்துவம் எழுச்சி கொண்டு வளர்ச்சி கண்ட சகாப்தத்தில் பெண்ணினம் மிகவும் ஈவிரக்கமற்ற சுரண்டல் முறைக்கு ஆளாகியது. அப்பொழுது பெண் ஒடுக்கு முறையின் மூலகாரணி முதலாளித்துவம் என்று கூறப்பட்டது. தனியார் சொத்துடமை நீக்கப்பட்டால், சமத்துவம் அற்ற பொருளாதார அமைப்பு ஒழிக்கப்பட்டால், பொருளுற் பத்தியில் பெண்கள் ஈடுபட்டால் பெண்ணினத்திற்கு விடிவுகாலம் பிறக்கும் என வாதங்களும் முன்வைக்கப்பட்டன. இதனால் விடுதலை வேண்டி நின்ற பெண்ணினம் சமூகப்புரட்சிப் போராட்டங்களில் அணிசேர்ந்து கொண்டது. பெண்களின் பங்களிப்புடன் பல நாடுகளில் சமூகப் புரட்சிகள் நிகழ்ந்தன. சமுதாய மாற்றம் மூலம் பொருளாதார சமத்துவத்தைக் கட்டியெழுப்பிய நாடுகளில் பெண்களின் வாழ்க்கை நிலை உயர்ந்தது. சமூக அந்தஸ்து மேம்பட்டது. ஆயினும் இந் நாடுகளில் பெண் ஒடுக்குமுறை முற்றாக நீங்கியபாடில்லை. சமதர்ம சமூக உலகத்திலும் பெண்ணுக்கு சமநீதி கிடைத்ததாகக் கூறிவிட முடியாது.



இந்தச் சமூகப் பரிசோதனை மாற்றங்களில் அனுபவங்களிலிருந்து நாம் ஒரு உண்மையைக் கண்டு கொள்ளலாம். அதாவது பொருளுலகத்தை எந்தெந்த வடிவங்களில் சீரமைத்தாலும், ஆண்களின் மனோவுலகில், பெண்மை பற்றிய கருத்துலகில் ஆழமான மாற்றங்கள் நிகழாமல் பெண் சமத்துவம் சாத்தியமாகப் போவதில்லை.



பெண்ணினத்தின் விடுதலை நோக்கிய பாதையில் அவர்களது சமூக பொருளாதார வாழ்வு மேம்படுவது அவசியம் என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆயினும் அதேவேளை, ஆண் பெண் உறவிலும், அந்த மானசீக உலகிலும்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என்றால் என்ன?
# த்த விளக்கம்











மாற்றங்கள் தேவை. உண்மையான சமத்துவம் என்பது ஆண் பெண் உறவில் எழும் ஆழமான புரிந்துணர்வில்தான் சாத்தியமாகிறது.

எமது சமூகக் கட்டமைப்பில் பெண்ணினம் மிக மோசமான ஒடுக்குமுறை வடிவங்களை எதிர் கொண்டு நிற்கிறது. மிகவும் பின்தங்கிய சமூக பொருளாதார வாழ்வு ஒரு புறமும் அரச அடக்குமுறை அழுத்தங்கள் மறுபுறமும், ஆணாதிக்கக் கொடுமைகள் இன்னொருபுறமுமாக பல பரிமாணங்களில் எமது பெண்கள் ஒடுக்குமுறையைச் சந்திக்கிறார்கள். இங்கு பெண் விடுதலை என்பது, ஒரேகாலத்தில் பல்வேறு முனைகளில் தொடுக்கப்பட வேண்டிய ஒரு போராட்டமாக அமைந்துவிட்டது.

எமது தேசிய சுதந்திர இயக்கம் பெண் விடுதலையைத் தனது அடிப்படை அரசியல் இலட்சியங்களில் ஒன்றாக வரித்துக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

பெண்விடுதலை என்னும் பொழுது அரச ஒடுக்கு முறைகளில் இருந்தும், சமூக ஒடுக்கு முறையிலிருந்தும், பொருளாதார சுரண்டல்முறையில் இருந்தும் பெண்ணினம் விடுதலை பெறுவதையே குறிக்கிறோம். எனவே எமது இயக்கம் வடிவமைத்துள்ள பெண் விடுதலைப் போராட்டமானது தேச விடுதலை, சமூக விடுதலை, பொருளாதார விடுதலை என்ற குறிக்கோள்களைக் கொண்ட மும் முனை விடுதலைப் போராட்டமாக முன்னெடுக்கப்படுகிறது.

இந்த மும்முனைப் போராட்டங்களில் தேசிய விடுதலை, அதாவது எமது மண்ணின் விடுதலை முக்கியமானது. எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது மண்ணை முதலில் மீட்டெடுப்பது இன்றைய வரலாற்றின் தேவை. இந்த வரலாற்று நிர்ப்பந்தத்தை, நாம் அசட்டை செய்ய முடியாது. எமது மண்ணின் விடுதலை பெண்ணின் விடுதலைக்கு மட்டுமன்றி எமது இனத்தின் விடுதலைக்கும் அத்திவாரமானது.

இந்த மண்மீட்புப் போர்க்களத்தில் இன்று தமிழ் இளம் பெண்கள் ஆயுதமேந்தி நிற்கிறார்கள். முழு உலகமுமே வியக்கும் வகையில் அபாரமான அர்ப்பணிப்புக்களைச் செய்து வருகின்றார்கள். விடுதலைப் புலிகளின் மகளிர் படைப்பிரிவின் தோற்றமும் வளர்ச்சியும் எழுச்சியும் எமது இயக்கம் படைத்த மாபெரும் சாதனைகளில் ஒன்று என்பதை நான் பெருமிதத்துடன் கூறமுடியும். தமிழீழப் பெண்ணினத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றில், இது ஒரு புரட்சிகரமான திருப்பத்தைக் குறித்து நிற்கிறது.

ஒரு விடுதலை இயக்கத்துடன் அணிசேருவதன் மூலமே பெண்ணினம் தனது விடுதலை நோக்கிய இலட்சியப் பாதையில் வெற்றிபெற முடியும். வீரமும், தியாகமும். துணிவும், தன்னம்பிக்கையும் கொண்ட புரட்சிப் பெண்களாக மாறமுடியும். பெண்விடுதலைக்குக் களம் அமைத்துக் கொடுத்திருக்கும் எமது புரட்சி இயக்கத்துடன் பெண்ணினம் அணிசேரும் பொழுதுதான் எமது போராட்டமும் முழுமை பெறும்.

எமது சமுதாய அமைப்பில் நிலவிவரும் ஒடுக்குமுறை அழுத்தங்களில்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்தும் பெண்ணினம் விடுதலை வேண்டி நிற்கிறது. நீண்ட நெடுங்காலமாக எமது சமூகத்தில் வேரூன்றி வளர்ந்த மூடநம்பிக்கைகளும், இந்த மூடநம் பிக்கைகளில் இருந்து தோற்றம் கொண்ட சமூக வழக்குகளும், சம்பிர தாயங்களும் எமது பெண்களின் வாழ்க்கையைச் சீரழித்து வருகிறது. ஆணா திக்க அடக்கு முறையாலும், வன்முறையாலும் சாதியம், சீதனம் என்ற கொடு மைகளாலும் தமிழீழப் பெண்ணினம் விபரிக்கமுடியாத துன்பங்களை அனுபவித்து வருகிறது.

இந்த ஒடுக்குமுறைச் சிறையிலிருந்து விடுதலை பெறுவதானால் பெண்ணினம் முதலில் தனக்கு எதிராக ஏவப்பட்டுவரும், ஒடுக்குமுறையின் தன்மைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். தனது சீரழிந்த வாழ்க்கை நிலையைச் சீரமைத்துக் கொள்வதனால் பெண்ணினம் தனது இழிநிலை பற்றி விழிப்புக் கொள்ள வேண்டும். தலைவிதி என்றும், கர்மவினை என்றும், தனக் காக விதிக்கப்பட்ட மனுநீதி என்றும் பழைமை என்றும், பண்பாட்டுக்கோலம் என்றும் காலம் காலமாக மனவுலக இருளுக்குள் முடங்கிக் கிடந்த பெண் ணினம் விழித்தெழ வேண்டும்.

விழிப்புத்தான் விடுதலைக்கு முதற்படி.

விழிப்படைந்து எழுச்சி கொள்ளும் பெண்ணினமே ஒரு போராட்ட சக்தியாக உருப்பெற முடியும். அந்தப் போராட்ட சக்தியால்தான் ஒடுக்குமுறை விலங்குகளை உடைத்தெறிய முடியும்.

ஆணாதிக்க ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டம் ஆண்களுக்கு எதிரான போராட்டம் அல்ல. இது ஆணாதிக்க அறியாமைக்கு எதிரான கருத்துப்போராட்டமாகும். இந்தச் சித்தாந்தப் போராட்டம் ஆண்களின் மன உலக மாற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும்.

மனித உறவுகளில் அடிப்படையானது ஆண்- பெண் உறவு. இந்த உறவு சாதாரண சமூக உறவு அல்ல. இது மனித உயிர் இயக்கத்திற்கும் மனித இன விருத்திக்கும் மூலமானது. மனித இனத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஆதாரமானது.

ஆண் - பெண் உறவில் எழும் அபசுரங்களாகவே இன்று பெண் இனம் எதிர்கொள்ளும் பல அவலங்கள் தோற்றம் கொள்கின்றன.

ஆணும் பெண்ணும் ஒத்திசைவாக ஒருவர் ஒருவரின் சுதந்திரத் தையும், சமத்துவத்தையும் கௌரவத்தையும் மதித்து, குடும்ப வாழ்வின் பொறுப்புக்களைப் பகிர்ந்து, சமூகத்தின் மேம்பாட்டிற்கு உழைத்து, பரஸ்பர புரிந்துணர்வுடன் பற்றுக் கொண்டு வாழ்ந்தால் இந்தப் பால் வேறுபாட்டால் எழும் பல்வேறு முரண்பாடுகள் நீங்கும். இந்த அன்புறவின் அடிமன அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் ஆணினம் புரிந்து கொள்ளும் போதுதான் ஆணாதிக்கமும் அதனால் எழும் அதிகார அடக்குமுறைகளும் அகன்றுவிட வாய்ப்புண்டு.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

வே.பிரபாகரன்
தமிழீழ விடுதலைப் புலிகள்

குறிப்பு :

அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் 08.03.1992 அன்று விடுத்த அறிக்கை.













தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போராடிப் பெற வேண்டியது
உலகம் எங்கும்
பெண்கள் அடக்குமுறை
அவற்றை எதிர்த்து
ஆர்ப்பாட்டங்களும்
போர்க் கோஷங்களும்
முடிவு என்னவோ
பெண் இன்னமும் அடிமைதான்
ஈழத்துப் பெண் எழுச்சி
கொண்டது
பெண்மை என்பது பெருமை
கொண்டது
எமது மண்ணிலே
தாயாய் தங்கையாய்
ஆசிரியராய் வைத்தியராய்

# பெண் இனமே விழித்தெழு

பெண்ணினமே விழித்தெழு!
யாருக்கும் அடிமையாய்
இருந்து விடாதே!
அடிமை விலங்கை
உடைத்தெறிந்து
தலைநிமிர்ந்து
வாழ்ந்து கொள்
தன்மானத் தமிழ்ப் பெண் என
தலைநிமிர்த்திக் கொள்
அடுப்பங்கரையில்
அகப்பை தூக்கி
சமைப்பது மட்டுமா? உன்பணி
சமர்க்களத்தில் கருவி ஏந்திப்
போராடுவதே பெண்ணின் மகிமை.
சுதந்திரம் என்பது
கேட்டுப் பெறுவது அல்ல

இத்தனையுடன் எதிரிகளை அழிக்கும்
இணையில்லாப் போர்ப்புலிகளாய்
பாரதி கண்ட புதுமைப் பெண்கள் ஈழத்தில்
உலகப் பெண்ணினமே!
இன்னமும் தயக்கம் ஏன்?
உன் பழமை விலங்குகளை
அடக்குமுறையின்
அடிமைச்சங்கிலிகளை
உடைத்தெறிந்து
விடுதலைக்காக
விழித்தெழு.

**-யோகதாஸ் யூட் நிமலன்-**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தம்பி எந்தத் தும்பி பயப்படமாட்டான்

செவி வளைந்தான் கிழவரின் காலுக்குள்சுருண்டு கிடந்தது. தோள்த்துண்டுடன் சேர்ந்து ஒரு சிறு பையும் கிழவரின் தோளில் தொங்கியபடி கிடந்தது. திடீரென "செவி வளைந்தான்" வானத்தைப் பார்த்து முனகத் தொடங்கியது. கிழவருக்கு விளங்கிவிட்டது.

"துலைவான்ரை தும்பி வருகு தாக்கும்"

அயலில் நின்றவர் தம்பி, தட்டிக்குடுக்கிறாங்கள். இப்ப மேலால பறக்கிற தும்பி (கெலி) ரஷ்யாவின்ர எம்.ஐ 24 ரகத்தைச் சேந்தது. இதை இப்ப பெடியள் கிட்டடியில் ஆனையிறவில் விழுத்திப் போட்டாங்கள் கண்டியோ, அதனாலை பெரிய வல்லரசிட்டயிருந்து பெல் ரக தும்பியள் நாலைஞ்சை இறக்கப் போறாங்களாம் பெடியா. ஆனால் எங்கட தம்பி எந்தத் தும்பிக்கும் பயப்பிடமாட்டான் தம்பி".

ஆலமரத்தைத் தாண்டிச் சென்ற தும்பி மரக்கறிச் சந்தைப் பக்கம் சடசடத்துவிட்டுச் சென்றது. "செவிவளைந்தான்" அங்கும் இங்கும் பயந்தோடியது. கணநேர அமைதிக்குப் பிறகு நவம் பலவீனமான குரலில் சொன்னான்.

"அப்பு! தும்பி மட்டுமெண்டில்லை மில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதத் தளவாடங்களோடை புலிகளின்ரை ஆட்டிலறித் தளங்களைக் கண்டறியிறதுக்கான நவீன லேசர் ராடர்களையும் சிறீலங்காவுக்கு விக்கிறதுக்கு பெரிய வல்லரசு முன்வந்திருக்காம். இனிப் பெடியளின்ர பாடு அவ்வளவுதான். ஆனையிறவும் போச்சு குடாநாடும் போச்சுது".

"உனக்கென்ன தெரியுமடா தம்பி?" கையிலிருந்த சுருட்டைத் தூர வீசி எறிந்து காறித்துப்பிவிட்டு கிழவர் தொடர்ந்தார்.

"இந்த ராடர்க் கருவியெல்லாம் ஜெயசிக்குறு தொடங்கின காலத்களெல்லாம் சத்தம் கேட்டு ஆல மரத்தடிக்கு புகலிடம் தேடி ஓடி வந்தார்கள்.

அருகில் இருந்த நவம் சொன்னான், "பட்டினி போட்டுச் சாகடிக்கிறாங்கள் என்று பார்த்தால் குண்டு வீசிச் சனத்தைச் சாகடிக்கிறாங்கள். இப்படி அக்கிரமம் செய்யிறாங்கள். இதுகளைத் தட்டிக் கேட்குறதுக்கு உலகத்தில் ஆக்களே இல்லையா?..."

படுத்திருந்த கிழவர் எழுந்து கொண்டார்.

"தட்டிக் கேக்கேல்லையடா

-ஆலமரத்தடி அப்பு-





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திலேயே வல்லரசிட்ட இருந்து இவங்கள் வாங்கிப் பாவிச்சதுகள்தான். அதைப் பாவிச்சு புலியளின்ர ஆட்டிலறித் தளத்தை முதலே அழிச்சிருக்கலாம்தானே? எத்தினையோ தரம் புலிகளின்ரை ஆட்டிலறித் தளத்தை அழிச்சுப்போட்டம் என்று சொன்னவை தானே? இதுக்குப் பிறகு தானே ஓயாத அலைகள்–3 அடிச்ச அடியில் வன்னியை விட்டு ஓடினவை. இந்த ஆட்டிலறித்தளங்களைக் கண்டுபிடிக்கிற ராடார் தனிய மரபார்ந்த படையணிக்குத்தான் உதவும் கண்டியோ... ஏனெண்டால் அவங்கள்தான் ஒரே இடத்திலை ஆட்டிலறித் தளங்களை வைச்சிருக்கிறவை. பெடியள் சண்டைக் களங்களுக்கு ஏத்த மாதிரி மரபார்ந்த படையணியாயும் செயற்படுவினம், கெரில்லாத் தாக்குதல்களையும் செய்வினம். எங்கடை பெடியள் தங்கடை உத்தியளை இராணுவ தந்திரோபாய ரீதியிலை நிலைமைக்கேத்த மாதிரி மாத்திக் கொள்ளுவினம் பெடியா".

"எனக்கும் ஒண்டு நினைவுக்கு வருகுது. ஜெயசிக்குறு தொடங்கிறதுக்கு முன்னம் ஆள் இல்லா விமானம் இறக்குமதி செய்தவையெல்லே அப்பு. இனிமேல் புலியளின்ரை நடமாட்டங்களைக் கண்டறிஞ்சு போடுவம்... தலைவற்றை நடமாட்டங்களையும் கண்டு பிடிச்சு புலியளை அடியோடு அழிச்சுப் போடுவோம் என்று தம்பட்டம் அடிச்சவை. ஆனால் ஆள் இல்லா விமானங்கள் ஒவ்வொண்டாய் மாயமாய்ப் போச்சு. புலியளையும் அழிக்கேல்லை. காட்டுக்கை இருந்த எலியளைக்கூட அழிக்கேல்லை".

தலைக்கு கையால் முண்டு கொடுத்தபடி படுத்துக் கதைத்துக்கொண்டிருந்த கிழவர் எழுந்து குந்திக் கொண்டார்.

தும்பிக்குப் பயந்து முனகிக் கொண்டிருந்த செவி வளைந்தான் கிழவர் புறப்படப் போகின்றார் என நினைத்து உசாரடைந்தது.

"தம்பி 1985க் காலப்பகுதியிலை சிறீலங்கா ஆமிக்கு சிம்மசொப்பனமாக இருந்த கண்ணிவெடியிலை இருந்து கவசவாகனங்களை பாதுகாக்க அப்ப இருந்த தென்னாபிரிக்க இனவாத அரசிட்டை இருந்து பவள் கவச வாகனத்தை இறக்கிப் போட்டு இனிப் புலிகளை அழிச்சுப் போடுவம். புலியளின்ரை கண்ணிவெடி வேலையெல்லாம் சரிவராது என்று அப்பத்தைய சிறீலங்கா பாதுகாப்பமைச்சர் லலித் அத்துலத் முதலி சொன்னார். கவச வாகனம் வந்து முதல் கவசவாகனமே மன்னாரில பெடியளின்ரை புதுமுறையிலை செய்த கண்ணி வெடியிலை சிக்கி சுக்கு நூறாறப்போக அத்துலத் முதலி கலங்கிப் போனார் கண்டியோ."

"நல்லாய்ச் சொன்னியள் அப்பு. கிபீர், கபீர் என்று புதிய ஜெற் குண்டு வீச்சு விமானம் கொள்வனவு செய்யேக்கை சொன்னவையப்பு. இனி புலிகளை குண்டு போட்டே அழிச்சுப் போடுவம் எண்டு. அப்பாவி மக்களை அழித்தது தான் மிச்சம்."

தமது இடுப்பிலிருந்த துண்டைச் சரி செய்தபடி கிழவர் தொடர்ந்தார்.

"தம்பி தேசியத் தலைவர் சொல்லுறது போலை பெரிய பலத்தைக்கண்டு பயப்பிடக்கூடாது. எதிரியின்ரை பெரிய பலத்திலை எங்கை பலயீனம் இருக்கோ அங்கை ஓங்கி அடிக்கவேணும்."

கிழவரின் குரல் ஓங்கத் தொடங்கியது. நவம் கிழவரை உற்றுப்பார்க்கத் தொடங்கினான். தும்பிக்குப் பயந்து ஆலமரத்தடியில் ஒதுங்கி நின்ற சிலருக்கு அப்புவின் கதை ஆவலைத் தூண்டி விட்டது. அடுத்து அப்பு என்ன சொல்லப்போகின்றார் என்பதை ஆவலுடன் எதிர்பார்த்து நின்றனர்.

"தம்பி ஜெயசிக்குறு தொடங்கின வேளை இது புலியளுக்கு சந்திரிகாவின்ரை சுருக்குக் கயிறு எண்டு கொழும்புப் பத்திரிகையளிலை எழுதினவை. ஒட்டிசுட்டானுக்கும் ஆமி போயிட்டான். இனி புலிகளின்ரை கதை முடிஞ்சுது எண்டு சொன்னவை. எங்கடை பெடியள் பலயீனத்தையும் பார்த்ததோடை பொறுமையையும் காத்திச்சினம்... அதாலதான் இண்டைக்கு குடாநாட்டின்ரை கழுத்துப் பகுதியிலை குந்தியிருக்கிற ஆனையிறவு முகாமின்ரை குரல் வளையை நெரிச்சிக்கொண்டிருக்கினம்."

அது சரியப்பு! இந்த வெளிநாடுகள் ஆயுதங்கள், பிற உதவிகள் என்று சிறீலங்காவுக்கு குடுக்கிறதை நிப்பாட்ட ஏலாதே?"

"தம்பியவை எல்லாம் பலத்திலதான் இருக்கு. நாங்கள் பலமாய் இருந்தால்தான் அரசியல் பேச்சு வார்த்தைக்கும் தேடி வருவினம். அரசியல் சூழ்நிலையும் காலத்துக்குக் காலம் மாறும். இந்திய அரசியலைப் பாத்தியோ. இப்ப பாதகமில்லாமல்இருக்கு..."


தலைவர் 98 மாவீரர் நாளில் 3ம் தரப்பு மத்தியத்துவத்துக்கு அழைப்பு விட்டார். ஒரு வருசம் கழிச்சு ஓயாத அலைகள்–3இன்ரை அடிக்குப் பிறகு தான் இப்ப மூண்டாம் தரப்பு மத்தியத்துவம் நோர்வே அரசின்ரை வழியாக வந்திருக்கு. அதே போல சிறீலங்காவுக்கு ஆயுதங்களைக் குடுத்துக் கொண்டு எங்கடை பெடியளைப் பயங்கரவாதிகள் எண்டு சொல்லிக் கொண்டிருக்கினம் வல்லரசு நாடுகள். புலியளின்ரை பலம் இராணுவ ரீதியாயும் அரசியல் ரீதியாயும் ஓங்க மத்தயத்துவத்துக்கோ அல்லது ஓர் நாள் புலிகளை அங்கீகரிக்கக்கூடிய நிலைக்கோ வருவினம் தம்பி. முதல் நெல்சன் மண்டேலாவையும், யாசீர் அரபாத்தையும் பயங்கரவாதிகள் எண்டுதான் சொன்னவை. இப்ப அவைக்குச் செங்கம்பள வரவேற்புக் குடுக்கினம். இருந்துபார் ஒரு நாளைக்கு எங்கடை தலைவருக்கும் செங்கம்பள வரவேற்புக் கொடுப்பினம். சிறீலங்காவின்ரை பொய் முகம் கெதியா கிழிக்கப்படப்போகுது தம்பி. இராணுவ அரசியல் ரீதியாய் ஒண்டுபடும் வேலை செய்யவேணும் தம்பி. எல்லாம் பலத்திலதான்ரா இருக்கு. எல்லோரும் சேர்ந்து தம்பிக்கு கைகுடுக்க வேணுமடா தம்பி...அப்படிக் கொடுத்தா விடுதலை விரைவிலை கிடைக்கும் என்று கூறிக் கொண்டு கிழவர் விரைவாக நடையைக் கட்டினார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பௌத்த மதமும் இனப்பிரச்சனையும்



சிங்கள மக்கள் இன்று வரை தங்கள் வரலாறாக கருதி வரும் மகாவம்சத்தின்படி புத்தர் கி.மு.500 ஆண்டு காலப்பகுதிவரை மூன்று தடவைகள் இலங்கைக்கு வந்துள்ளார். சமகாலத்தில் விஜயனும் அவனது 700 தோழர்களும் இலங்கையில் காலடி எடுத்து வைத்தனர். விஜயனும் அவரது தோழர்களும் பாளி, சமஸ்கிருதம், தமிழ் ஆகிய கலப்பு மொழியான சிங்களத்தைப் பேசிவந்தார்கள். புத்தரும் விஜயனும் இலங்கைக்கு வருமுன் பூர்வீகமாக வாழ்ந்து வந்தவர்கள் இயக்கர், நாகர் ஆவார்கள். கி.மு 247 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையை தேவநம்பிய தீசன் ஆண்டு வந்தான். இவனின் காலத்தில்தான் பௌத்த மதம் இலங்கையில் பரப்பப்பட்டது. பௌத்த மதத்தில் அதிகளவு இயக்கர்களும் சொற்ப நாகர்களும் மதம் மாறினார்கள். மதம் மாறாமல் இருந்து வந்த நாகர்கள் இன்றைய தமிழர்களாக வாழ்ந்து வருகின்றார்கள்.

கி.மு 1ம் நூற்றாண்டுக்கும் 2ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலகட்டங்களில் பௌத்த மதம் இரண்டாகப் பிளவுபட்டது. அதிலொன்று மகாயானம் மற்றது தேரவாதம். இலங்கையில் பெரும்பான்மையினராக வாழ்ந்து வந்தவர்கள் தேரவாதத்தினர். தென்னிந்தியாவில் மகாயானம் பரவலாயிற்று. மகாயானவாதத்தில் தென்னிந்தியா வாழ் தமிழர்கள் புத்த பிக்குகளாக இருந்தனர். இவர்கள் தங்கள் மதக்கொள்கையை பரப்புவதற்கு இலங்கை வந்தனர். புத்தரின் மதக்கோட்பாட்டில் இவ்விரு குழுக்களுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டது. தேரவாத பிரிவினர் புத்தர் போதித்த அன்பையும், அறத்தையும், ஆன்மீகத்தையும் திரிபுபடுத்தி இலங்கைவாழ் பௌத்த மக்களிடையே பரப்பிவந்தனர். இத் திரிபுபடுத்தலை மகாயானவாத பிரிவினர் கடுமையாக விமர்சித்தனர். இதனால் இவ்விரு குழுக்களுக்கிடையில் கலகம் ஒன்று ஏற்பட்டது. பின் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட தென்னிந்திய தமிழ் மன்னர்களின் படையெடுப்புக்களின் போதும் குறிப்பாக இராஜராஜ சோழனின் காலத்தில் இலங்கையை முற்று முழுதாகக் கைப்பற்றி தென்னிந்தியாவின் ஒரு மாகாணமாக ஆக்கி ஆட்சி புரிந்தனர். இராஜராஜனின் மகன் இராஜேந்திரன் காலத்திலும் இலங்கை அதேநிலையில்தான் இருந்து வந்தது. இதன் காரணமாக தென்னிந்திய தமிழ்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மன்னர்களிலும் ஈழத் தமிழர்களி லும் சிங்கள பௌத்த மக்களும் பிக்கு களும் இயற்கையாகவே தமிழர் களை அந்நியர்களாக கருதவேண் டிய நிலை ஏற்பட்டது.

கி.பி. 500ஆம் ஆண்டு காலப் பகுதியில் வாழ்ந்து வந்த மகாநாம தேரர் என்பவர்தான் திரிபுபடுத்தப் பட்ட மகாவம்ச நூலை எழுதி னார். இந்நூலில் இலங்கைச் சிங்கள வர் வரலாறும் அதன் தோற்றமும் பௌத்தமதம் பற்றியும் குறிப்பிடு கின்றது. இந்நூல் குறிப்பிடுவது என்ன வெனில் விஜயனும் அவனது தோழர் களும் இலங்கையில் முதல்குடி என் றும், புத்தர் சிங்களவர்களுக்காக இலங்கைத் தீவை உருவாக்கினார் என்றும் ஒரு சிங்கள பௌத்தன் தான் இலங்கையை ஆட்சி செய்ய வேண்டும் என்றும் புத்தர் பரிநிர் வாணம் அடையும் முன்பு கூறிய தாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. சிங்கள பௌத்த பிக்குவான மகா நாமதேரரால் திரிபுபடுத்தி எழுதப் பட்ட மகாவம்சம் திட்டமிட்டு தமிழர் களின் வரலாற்றை மறைப்பதற்காக வும், தமிழர்கள் இலங்கையின் புரா தன குடியில்லையென சிங்கள மக் களை நம்பவைப்பதற்காகவும் எழு தப்பட்ட ஒன்று. அன்று எழுதிய மகாவம்ச நூல் இன்று சிங்கள வர்களின் வரலாற்று நூலாக அங்கீ கரிக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு பகுதியான தம்பதீப கோட்பாடு என்று ஒன்று உண்டு. இது தீவிர தமிழர்கள் எதிர்ப்பை கொண்டுள் ளது. இலங்கையில் பௌத்த மதத்தை தவிர்ந்த ஏனையவர்கள் இந்நாட் டில் குடியுரிமைக்கு உரியவர்கள் இல்லை என்றும் கூறுகின்றது. மகா வம்ச நூல்தான் அன்றும் இன்றும் சிங்கள பௌத்த மக்களின் மதவெறி யைத் தூண்டி வருகிறது. இன்று ஆசியாக் கண்டத்தில் சீனா, பர்மா, ஜப்பான் போன்ற நாடுகளில் புத்த மதம் அதிகளவில் பரவியுள்ளது.

மேற்கத்தைய காலனி ஆதிக்கத் திற்குள் இலங்கை கொண்டுவரப் பட்ட போது இலங்கை மூன்று பிரிவு களாக இருந்தது. அவை கோட்டை இராச்சியம், கண்டி இராச்சியம், யாழ்ப்பாண இராச்சியம் போன்ற வையாகும். போர்த்துக்கேயர்களும் ஒல்லாந்தர்களும் இலங்கையின் கண்டி இராச்சியம் தவிர்ந்த ஏனைய இரு இராச்சியங்களையும் கைப்பற்றி ஆட்சி செய்தனர்.

இவர்கள் காலத்தில் கோட்டை, யாழ்ப்பாண இராச்சியங்களுக்குட் பட்ட மக்கள் கிறிஸ்தவமதம் மாற றப்பட்டனர். குறிப்பாக கோட்டை இராச்சியத் துக்கு உட்பட்ட மக்கள் அதிகளவில் ஐரோப்பிய நாகரீகத்திற்கு கிறிஸ்தவ மதம் ஏற்படுத்திய கிளர்ச்சி யினாலும் சலுகைகளைப் பெறவும் மதம் மாறினார் கள். இந்தக் காலகட்டத் தில் கண்டி இராச்சியத் திற்குட்பட்ட மன்னன், புத்தபிக்குகள், மக்கள் ஆகியோர் பௌத்த மதத் திலிருந்து மதம் மாறிய சிங்கள மக்களை வெறுக் கலாயினர். இதன்பின் 1815ஆம் ஆண்டு கண்டி இராச்சியம் உட்பட முழு இலங்கையையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். ஆங்கிலேயருடன் பௌத்த பிக்குகள் பௌத்தமதத் பாது காப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டனர். அதில் பௌத்தமதத்தை தழுவிய மக்கள் கிறிஸ்தவமதம் மாற றப்படக்கூடாது. அதன் வழிபாட்டு முறைகள் ஒழுக்கம் கட்டுப்பாடு சீர்குலையாது பாதுகாக்கப்படவேண் டும். அவர்கள் அவமரியாதைக்குட் படக்கூடாது என்றும் ஒப்பந்தம் செய்துகொண்டனர். காலப்போக்கில் கண்டி இராச்சிய சிங்கள மக்களும் ஆங்கிலேயரின் நாகரீகத்திற்கு மயங்கி சலுகைகளைப்பெற கிறிஸ்தவமதம் மாற தவறவில்லை.

கி.பி. 1839ஆம் ஆண்டு வலன் சித்தார்த்ததேரோ பரமதம்ப நசேற் றியா சங்கம் என்று ஒன்றை ஆரம்பித் தார். இது பௌத்த சிங்கள பாளி, சிங்கள பௌத்த இலக்கியம் மற்றும் பண்பாட்டு அம்சங்களையும் பௌத்த மதத்தை புத்துயிர் ஊட்டக்கூடிய பௌத்த பிக்குகளையும் இச்சங்கம் உருவாக்கியது. இக்காலகட்டத்தில் தான் மெஜிட்டி வந்த குணானந்த தேரர், சிறிசுமங்களதேரர் போன் றோர் தோன்றினார்கள். 1873ஆம் ஆண்டு பாணந்துறை என்னுமிடத் தில் மெஜிட்டிவந்த குணானந்ததேரர் கிறிஸ்தவபாதிரிமார்களும் ஒரு பகி ரங்க விவாதத்தில் ஈடுபட்டனர். மெஜிட்டிவந்த குணானந்த தேரர் இதில் வெற்றியும் பெற்றார். வெற் றியின் பின் சிங்கள பௌத்த மக்



களுக்கு சில கருத்துக்களை முன் வைத்தார். பௌத்தமதம் கிறிஸ்தவ மதத்திற்கு குறைந்தது அல்ல அதில் உள்ள முற்போக்கான இறை சிந்த னைகள் கிறிஸ்தவ மதத்தில் இல்லை யென்றும் கருத்துக் கூறினார் இத னால் பௌத்தம் சிங்களவர் மத்தி யில் மீண்டும் துளிர்விட ஆரம்பித்தது.

இன்று சிங்களவர்களால் ஏற்றி போற்றிப் பாதுகாக்கப்பட்டு வரும் வரலாற்று நாயகர் அனாகரிக தர்ம பாலா. இவர் 1864 ஆம் ஆண்டு பிறந்தார். இவரின் இயற்பெயர் டொன் டேவிட் கொவா விதாரண என்பது ஆகும். இவர் தனது பௌத்த மதப்பற்றின் காரணமாக அனா கரிக தர்மபாலா என்று பெயர் மாற் றிக் கொண்டார். இவர்தான் மகா நாம திரிவுபடுத்தி எழுதிய மகா வம்ச நூலுக்கு புத்தியிர் கொடுத் தவர். இவர் சொன்ன தம்பதீப கோட்பாட்டின்படி இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு அது சிங்கள வர்களுக்கே உரியது. ஒரு பௌத்த மகன்தான் இலங்கையை ஆளவேண் டும் என சூழுரைத்தார். இலங்கை வாழ் தமிழர்கள் போரின் நோக்காக இங்கு வந்தார்கள். தமிழர்கள் வந்தேறுகுடிகள் என்றும் கூறினார். அனாகரிக தர்மபால மேலும் ஆங்கி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லேயனிடம் ஒரு சிங்களபௌத்தன் தான் இலங்கை ஆட்சி அதிகாரத்தை பெற்று ஆளவேண்டும் என்று சொன்னார். தமிழர்கள் கையில் ஆட்சி அதிகாரம் போக சிங்களவர்கள் ஒரு போதும் அனுமதிக்க மாட்டார்கள் என்று கூறினார். அனாகரிக தர்ம பால தமிழர்களின் கைகளில் ஆட்சிய திகாரம் சென்று விட்டால் ஈழத் தமிழர்கள் தென்னிந்தியத் தமிழர் களுடன் இணைந்து முழு இலங் கையையும் கைப்பற்றி விடுவார்கள் என்ற பய உணர்வை அனாகரிக தர்மபால சிங்கள மக்கள் மனங் களில் விதைத்துவிட்டார். இதன் காரணமாக அனாகரிக தர்மபால சிங்கள மக்களின் மத்தியில் அடிப் படையில் தமிழர்கள் வெறுப்புணர் சியை தோற்றுவித்தார். அன்று அனா கரிக தர்மபாலவால் உருவாக்கப் பட்ட இனப்பிரச்சனை இன்றும் தொடர்ந்து வருகின்றது.

அன்று மகாநாமவால் திரிபு படுத்தி எழுதப்பட்ட மகாவம்ச நூல்தான் இன்று சிங்களவர்களின் வரலாறாக இருந்து வருகின்றது. சிங்கள பாலர் மாணவர் தொட்டு பல்கலைக்கழக மாணவர் வரையும் மகாவம்சமும் அதன் கோட்பாடும் தான் ஆசிரியர்களால் போதிக்கப் பட்டு வருகின்றது. இதனால் சிங்கள பௌத்த மக்கள் இலங்கை எங்கள் பௌத்த நாடு, தமிழர்கள் அன்னி யர்கள் என்று கருதுமளவிற்கு மகா வம்சக் கோட்பாடு அவர்களின் மூளையில் செறிந்த ஒரு இனவா தத்தை ஏற்படுத்தியுள்ளது.

மகாவம்ச கோட்பாட்டை அடிப் படையாகக் கொண்டு சிங்கள இராணுவத்தில் ஆட்கள் திரட்டப் படுகின்றனர். சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவங்களின் பயிற்சிக் கல்லூரி களில் அரசியல் பாடத்திட்டத்து டன் மகாவம்சம் அதன் தம்பதீப கோட்பாடு பிரிவாக விரிவுரை செய் யப்பட்டு வருகின்றது. புத்தர் போதித் தது அன்பும், அறமும், ஆன்மீகமும் தான். அது இப்படி இருக்கும்போது, இங்கு சிங்கள பௌத்த பேரினவாத பிக்குகள் தமிழின அழிப்பிற்காக வடக்கு கிழக்கு மாகாணங்களின் பேரினவாத ஆக்கிரமிப்பு இராணுவ முகாம்களில் பூஜைகள் வைத்தும் சிங்கள சிப்பாய்களுக்கு கைகளில் நூல் கட்டியும் ஆசீர்வதித்தும் இரா ணுவ நடவடிக்கைகளுக்கு பெயர் சூட்டியும் தமிழின அழிப்பைத்தூண் டும் முகமாக புத்தபிக்குகள் செயற் பட்டு வருகின்றனர். பௌத்த பிக்கு கள் அதோடில்லாமல் சிங்களப் பேரின வாத அரசியலில் ஒதுக்கப்பட முடியாத முக்கிய பிரமுகர்களாக இன்று வலுவடைந்துள்ளனர்.

இந்த திரிபுபடுத்தப்பட்ட மகா வம்ச நூல் தமிழர்களின் பூர்வீக வரலாற்றை மறைத்துள்ளது. இலங் கையில் பாரம்பரியமாக வாழ்ந்துவந்த இயக்கர், நாகர் தான் தற்போதைய தமிழர்கள். குறிப்பாக பௌத்தமதத்தை தழுவிக் கொள்ளாதவர்கள் எனக் கூறலாம். தமிழர்களின் பூர்வீக நிலங் களில் சிங்கள பௌத்தர்களை குடி யிருத்தி எமது வரலாற்று தொடர் நிலங்களையும் விழுமியங்களையும் சிதைத்துள்ளார்கள். சிங்கள பௌத்த பேரினவாதம் தற்போது தமிழர்களுக் கான கல்வித்திட்டத்தில் தமிழரின் பூர்வீக வரலாறு முற்றாக இருட் டடிப்புச் செய்யப்பட்டுள்ளது. எமது தேசியத் தலைவர் திரு வே.பிரபாகரன் காலத்தில் எமது வரலாறும் விழு மியங்களும் புத்துயிர் கொடுக்கப் பட்டு உலகத்தமிழினம் தலை நிமிர்ந்து வாழும்.

# புது நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வறுமையின் பிடியில் வாழும் உலக மக்கள்

உலக வறிய மக்களில் மிக வறிய மக்கள் என்று கணிப்பிடப்பட் டுள்ள சுமார் 130 கோடி மக்கள் நாளொன்றுக்கு 60 ரூபாவிற்கும் குறைந்த வருமானத்தினைப் பெறு கின்றனர். (இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு சிங்கள அரசு பெரி யோருக்கு 35 ரூபாவும் சிறியவர் களுக்கு 20 ரூபா வீதமும் கொடுக் கிறது). புது நூற்றாண்டின் தொடக் கத்தில் உலக சனத்தொகை 600 கோடியை எட்டியுள்ளது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் 150 கோடிப்பேர் வறுமையில் வாழ் கின்றனர். 2015இல் இத்தொகை 190 கோடியைத் தாண்டலாம் என அஞ்சப்படுகின்றது. தனி மனித அபிவிருத்திக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் வறுமை தொடர்ந் தும் ஒரு பாரிய தடையாகவே இருக் கப்போகின்றது என ஐக்கிய நாடு கள் சபை செயலாளர் நாயகம் கொபி அனான் கூறியுள்ளார்,

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் உள்ள கிராமப்புறங்களி லேயே உலகின் மிக வறியமக்களில் அநேகமானோர் வாழ்ந்துவருகின் றார்கள், இவர்கள் தங்களது ஜீவ னோபாயத்திற்கும் வேலைவாய்ப் புக்கும் பெருமளவில் விவசாயத் தையே நம்பி வாழ்கின்றார்கள் என திரு. அனான் மேலும் கூறினார். தமது சொந்த மண்ணில் வள முடன் வாழ்ந்த எமது மக்களை இருப்பிடங்களை விட்டுத் துரத்தி விட்டு ஒரு நாள் வாழக்கைக்கு 35 ரூபாவை வழங்குகின்றது சிங்கள அரசு. சர்வதேசக் கணிப்பீட்டை விட மிக வறியமக்கள் எமது மண்ணில் வாழ்வது சர்வதேச மனிதாபிமானத்தை உறுத்தாமல் இல்லை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புனித தமிழீழம்

என் தாயகமே
விடியலுக்காய் எரிந்து
கொண்டு இருக்கும் தேசமே
நாற் புறமும் அன்னியனின்
ஆக்கிரமிப்பு கொடுமை
அழிந்திடனும் உரிமைகேட்டு
உருகிடும் என் தாயகமே
வேள்விகள் ஆயிரம் சுமந்து
வேதனையின் விளிம்பில்
விளையாடும் என் புனித பூமியே
யாரும் விலை பேச முடியாத
பிரபாகரனின் தாய்நாடே
போர்ப் புலிகள் பிறந்திடும் புவியே
நாளை நீ மலர்வாய் - உன்
விடிவிற்காய் தமிழன் எனும்
மனிதம் எதிர்பார்த்து இருக்கின்றது
கொடுமை, துயரம் வேதனை
சுமந்து நாம் கொடுத்தோம் விலை
நாம் தவழ்ந்து மகிழ்ந்து வாழ்ந்த
மண்ணை மீட்பதற்காய் உறவுகள்
புதிய வாழ்விற்காய் உதயமாகப்
போகும் உன் அழகிற்காய்
உலகமே வழிபார்த்திருக்கின்றது
உயிர் கொடுக்கும் உன்னதங்கள்
உருகிடும் உன் மடியில்- நாளை
உயிர்க்கும் ஒரு புனித ***தமிழீழம்***



**-க.கலைஞன்-**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிலைகளும் சிற்பிகளும்


சிறுகதை

அம்மாவின் மடியில் தலையும் சீமெந்து நிலத்தில் உடலுமாக கால்மேல் கால் போட்டுக்கொண்டு பெரிய மனிசத்தனத்துடன் புத்தகம் படிப்பதில்தான் அந்த 6 வயதுப் பாலகனுக்கு எத்தனை விருப்பம். முறுக்கு மீசையும் முரட்டுத் தோற்றமுமாய், நெருங்கவே அச்சமூட்டும் மாமன் திடீரென அவனைப் பார்த்து நாளைக்கு மாரியம்மன் கோவில் தேருக்கு போவமா? எனக் கேட்டபோது அவனுக்கு ஏற்படும் அதிர்ச்சி, ஆச்சரியம், பின் குதூகலம். தேருக்குப் போகும் தனது குதூகலத்தை தனக்குத் தெரிந்தவர் எல்லோருக்கும் சொல்ல வேண்டும் என்ற ஆவலில் மாமாவின் ஸ்ரீக்கு கூற அவன் நம்பாத போது மனஞ் சோர்ந்து காதும் கண்ணும் மங்கிப் போன பெத்தாச்சிக்குப் புரிய வைக்க முயன்று ஏற்பட்ட தோல்வியில் மனம் அலுத்து – ரதி அக்காவிடம் சொல்லி அவளின் முத்தத்தையும், 5ரூபா காசையும் பெற்றபோது குதூகலித்து இறுதியில் தயா மச்சாளுக்கு சொல்லி மூவரும் இருந்து அடுத்த நாள் உடுத்துப்போகும் உடைபற்றி அலசி, உண்டியல் காசை மாறி மாறி எண்ணிப் பார்த்து கோவிலில் பார்க்கப்போவதையும் வாங்கப்போவதையும் அட்டவணைப்படுத்தி அந்த ஒரு பொழுதுக்குள் அந்தக் குழந்தை மனசுக்குள்த்தான் எத்தனை ஆசைகள், ஏக்கங்கள், கனவுகள் உணர்வு மாற்றங்கள்.

நெஞ்சம் நிறைந்த கனவுகளுடன் சாமி உலா பார்க்கக் கிளம்பி அந்த பிஞ்சுகளின் றோட்டுப் புதினங்களை அறியும் ஆவல், தீர்த்தக் கேணியில் கால் நனைக்கும் ஆசை, தேரை சுற்றிப் பார்க்கத் தேரின் அழகைப் பக்கத்தில் நெருங்கி நின்று பார்க்கவேண்டும் என்ற உந்துதலில் கோபுரவாசலில் படியைத் தொட்டு, கண்ணில் ஒற்றி, நாலு தெரிந்த முகத்தைப் பார்த்துச் சிரித்து, செல்லக் கதை பேசி, சந்தோசமாக உள்ளே போகும் கனவு அனைத்துமே மாமனின் ஒரு அதட்டலில் கனல் தெறிக்கும் பார்வையில் முரட்டுத்தனமாக, அநியாயமாக சிதைக்கப்பட்டபோது அந்தப் பிஞ்சு உள்ளத்தில் கருக்கொள்ளும் வெறுப்பு வன்மம், ஏக்கம் பெரியவனாக வந்து இவரை இந்த மாமாவை நெஞ்சிலை ஏறியிருந்து கழுத்தை நெரித்து மூச்சுத் திணறக் கனவுகள் நெருங்கியபோது குரூரமாகக் காயப்பட்ட அந்த மனத்தின் உள்ளே கொப்பளித்த உணர்ச்சிப் பிழம்புகள் தனக்கென ஒரு வடிகாலை தேடவேசெய்தன.

அதுவும் உடனுக்குடன் உணர்வுகளை அடக்கிவைத்து சமயம் பார்த்து பழிதீர்க்க நினைக்குமாயின் அது குழந்தையல்லவே– வாகனங்களுடன் வாகனமாக தம்மை இருத்திவிட்ட மாமனை எப்படியாவது பழிதீர்க்க வேண்டும் என்ற வன்மம் வாகனச் சாலையில் இருந்த யோகு அன்ரியை நினைப்பூட்டிக் கொண்டிருந்த "காராம் பசு"வின் மீது ஒண்டுக்கு இருக்க வைக்கிறது. மாமா வாங்கிக் கொடுத்த கடலைப் பொட்டலத்தை அவர் காணாத சமயம் தூர வீசிஎறியச் செய்கின்றது. மாமனை நிமிர்ந்து நின்று விறைப்புடன் அம்மனை, கொடி மரத்தை, அபிஷேகத்தைப் பார்க்க வேணும் என்று அசட்டுத் துணிச்சலுடன் கேட்கவைத்து குட்டு வாங்கச் செய்கிறது. தன்னைப் புறக்கணித்து தமது மகனை மட்டும் தோளில் தூக்கி சாமி காட்டிய போது இந்த வன்மம் கோபம் எல்லாம் வடிந்து மனம் ஒடுங்கி வெம்பி வீதி உலா, பச்சை சாத்தல் வசந்த மண்டப அபிஷேகம் பார்க்கும் கனவுகளும் ஒட்டுப்பொட்டு அம்மம்மாக்குழல், சூப்புத்தடி தாங்கும் கனவுகளும் பொய்த்துப்போக ஆற்றாமையுடன் அடுத்த முறை அம்மாவுடன் தான் வரவேணும் என்று நினைத்துக் கொண்டு திரும்பச் செய்கிறது.

-மதுரா-





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கண்கெட்ட பயலைக்.. கண்டால் மடக்கவும்

நேற்றோரு "உலக்கையன் ஊருக்குப் போய் வந்தான்.
போய் வந்து... சொன்னான்...
ஊரில் சனமெல்லாம் " சுதியாய்" இருக்குதெண்டான்.
"சுதி" எண்டால்...? கேட்டது நான்.

திருவிழா நடப்பதும்.
தேருலாப் போவதும்.
கலியாணம் கச்சேரி கொண்டாட்டம் யாவுமே...
முன்புபோலவே மும்முரம் எண்டான்.

பொடிபொட்டை யாவரும் "ரியூசன்" போவதும்
இடைப்பட்ட நேரத்தில் புதுப்படம் பார்ப்பதும்
சோடி பிடித்துப் பின்னலைந்து சுழட்டல் செய்வதும்
வலு நேர்த்தி எண்டு...
வாய்வழியச் சொன்னான் "சொதிவாயன்."

ஆமியைக் கண்டால் சனங்கள் சிரிப்பதும்..
சனங்களைக் கண்டால் ஆமி சிரிப்பதும்...
கண்கொள்ளாக் காட்சி என்று..
கண்ணுக்குள் விரலைவிட்டான்.

சோதனையாகினும் விசாரணை ஆகினும்
"சொறி" சொல்லிச் செய்வதே
பழக்கம் ஆகையால்..
படையினர் குறித்து பயமேதும் இன்றி.......
அடுக்கிக் கொண்டே அகலப் போனான்.

அப்போ... சனங்கள் யாவரும் சுதந்திர
உணர்வுடன் உலாவரக் கண்டாய்?
விடுதலை பெற்றதாய் உணரக் கண்டாய்... ?
சினத்துடன் கேட்டேன்.
விடுதலை..என்றால்..? முழியைப் பிரட்டிக்
கேட்டது அவன்.
விளங்காப் பயல்.

சோற்றுக்கு அலைகின்ற "சோத்து மாட்டுக்கு"
விடுதலைக் கெங்கே விளக்கம் தெரியும்?
சுதந்திர உணர்வின் சுகமெங்கே பரியும்?

நேற்றுத்தான் எனது தங்கச்சி... கிருசாந்தி
சிதைத்துப் புதைத்த வலியின் கொடுமையால் கொதிக்கும்
நெஞ்சில்....

இன்னும் இன்னும் எத்தனை கொடுமை.
செம்மணிப் புதைகுழி புதைந்து மூச்சுத்திணற...

பிராணனை தேடும் உறவுகள் அங்கே.

தோண்டத் தோண்ட எங்கும் புதைகுழி...
நூறு.. இருநூறு.. ஆயிரமாய் விரியும் அவலங்கள்
அழுத்தும்
பூமிப் பரப்பில்..
சிரிப்பொலி எழுதற்கு சாத்தியமுண்டா..?

கிருசாந்தி தொடங்கி... சாரதாம்பாள் வரையும்
கசக்கி முகர்ந்த காமுகக் கூடாரத்தில் வரவேற்பாம்.
வணக்கம் வேறாம்.

கடலுக்குச் சென்று வலைவிரிக்கவும்
வயலுக்குச் சென்று விதைத்தறுக்கவும்
கால நேரம் தூரம் கணிப்பது
அவனே ஆன எமது பூமியில்....
நமது தலைவிதி நம்பிக்கையில் உண்டா...?

பாலியல் வதைகள் ... படுகொலை நிகழ்வுகள் ...
கைதுகள். காணாமல் போதல்... புதைகுழிக்
கொடுமைகள்...
இன்னபிற அவலங்கள்.. யாவுக்கும்.
விசாரணை வேண்டும் என.. மடிப்பிச்சை
கேட்பதா தமிழன் நிலை.
எய்தவனிடமே அம்பை நோவென்பது
அபத்தம்... அவலம்.

சோற்றை உருட்டி உருட்டி உள்ளேதள்ளி...
உண்ட களைப்பில் விழுந்து படுத்து..
மாலையில் எழுந்து படம் ஒன்று பார்த்து...
பாட்டும் கூத்துமாய் காலம் கழிந்தால்...
சுந்திரம் வாழ்வின் சுகமெனக் கொள்வதா..?

இரத்தம் சூடேற.. கேட்டுத் திரும்பினேன்.
நிண்டவனைக் காணவில்லை.

கண்டால் மடக்கவும்... கேள்விகளால்!

சடையர்
கவிதைகள்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடற்படை மூட்டிய தீ

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பார்கள். இலங்கைக் கடற்படையினரோ தீக்குச்சியை ஆயுதமாகப் பயன்படுத்தி மாபெரும் யுத்தமொன்றை திருகோணமலை சல்லியில் நடத்தி முடித்திருக்கிறார்கள்.

வேற்று நாட்டவர்களுடனோ அல்லது எதிரிகளுடனோ தான் வழக்கமாகப் படையினர் யுத்தம் புரிவார்கள். ஆனால் இலங்கையில் படையினர் நடத்தும் யுத்தம் ஆயுதம் ஏந்திய விடுதலைப் புலிகளுக்கெதிரானது என்று சொல்லிக் கொண்டாலும்கூட உண்மையில் அவர்களது வீரப்பிரதாபங்களில் பெரும் பகுதி சாதாரண தமிழ் மக்களுக்கெதிராகவே நடத்தப்படுகின்றன என்பதுதான் உண்மை.



சல்லியிலும் இத்தகைய யுத்தமொன்றைத் தான் கடற்படைவீரர்கள் வெற்றிகரமாக நடத்தியுள்ளார்கள்.

சல்லி திருகோணமலையிலிருந்து வடபுறம் நோக்கி ஐந்து மைல் துாரத்தில் அமைந்துள்ள கடற்கரைக் கிராமம். இங்குள்ள மக்களின் பிரதான தொழில் மீன்பிடித்தல்தான். இங்கு படையினர் முகாமிட்டிருந்தாலும் கூட விடுதலைப் புலிகளின் ஆதிக்கம்தான் அதிகம். பகல் வேளைகளில் படையினரின் ரோந்து நடவடிக்கைகள் இடம் பெறும். இரவில் படையினர் முகாம்களுக்குள் முடங்கிவிட விடுதலைப் புலிகளின் ரோந்து நடவடிக்கைகள் தொடங்கிவிடும்.

படையினரைவிட இங்குள்ள முகாமில் நாய்களின் எண்ணிக்கையே அதிகம். ஜீவகாருண்யம் காரணமாக இவர்கள் நாய் வளர்க்கிறார்கள் என்று பார்ப்பவர்கள் எண்ணக்கூடும். ஆனால் உண்மையில் இந்த நாய்கள் இரவில் படையினருக்குக் காவலாக இருக்கின்றன. யாராவது ஊடுருவ முனைந்தால் நாய்கள் குரைத்துக் காட்டிக் கொடுத்துவிடும் என்ற நம்பிக்கை படையினருக்கு.

விடுதலைப் புலிகள் வவுனியாவைக் கைப்பற்றப் போகிறார்கள் என்று அரசு அச்சமடைந்திருந்த வேளையில் திருகோணமலை வடபுலக் கிராமங்களில் கடமையிலிருந்த இராணுவத்தினர் வன்னிமுகாமுக்கு அழைக்கப்பட அந்த இடங்களில் கடற்படையினர் கடமைக்கு அமர்த்தப்பட்டார்கள்.



கடற்படையினரோ இராணுவத்தைக் காட்டிலும் தாங்கள் பொல்லாதவர்கள் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் பரவும் வகையில் தங்கள் நடவடிக்கைகளை அமைத்துக்கொண்டார்கள். சோதனைச் சாவடிகளில் மிடுக்காக நடந்து கொண்டார்கள். மக்கள் தங்கள் முன்னால் பணிவுடன் நடந்துகொள்ளவேண்டும் என்று எதிர்பார்த்தார்கள்.

சல்லிக் கிராமத்தில் இவர்கள் அட்டகாசமாகவே நடந்து கொண்டார்கள். அடுக்குப்பாறை என்ற இடத்திலுள்ள முகாமிலிருந்து தங்களுக்கு தினமும் உணவு எடுத்து வரும் பொறுப்பை சல்லி மீனவர்களிடமே ஒப்படைத்திருந்தனர்.

வகையற்ற நிலையில் மீனவர்களும் தங்களுக்குள் முறைவைத்துக் கொண்டு ஒன்றரை மைல் துாரம் கடல்மார்க்கமாக தினமும் உணவு கொண்டு வந்து கொடுத்திருக்கிறார்கள். திருகோணமலையிலிருந்து தடைதாண்டி கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட வகையில் கொண்டு வரப்படும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணெயில் மீனவர்கள் அந்தப்பணியையும் செய்ததன் ஒரே காரணம் கடற்படையினரின் "பொல்லாத தன்மை" தங்களுக் கெதிராக வரக்கூடாது என்பதனால்தான்.

அன்று பெப்ரவரி 24 வியாழக்கிழமை நேரம் இரவு 9.30 அளவிருக்கும். கவிதா ஸ்டோர்ஸ் சந்தி என்ற இடத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் இருந்திருக்கிறது, இதை அவதானித்த கடற்படையினர் அவர்களை நோக்கிச் சுட்டிருக்கிறார்கள். பதிலுக்கு அவர்களும் சுட்டார்கள். சென்றார்கள்.

விடுதலைப் புலிகள் சுட்டதில் ஆர். ஏ. வசந்த புஷ்பகுமார கொல்லப்பட்டார். இவர் ஒரு சப்லெப்டினண்ட், பெரேரா, குணதிலக ஆகிய இருவர் காயமடைந்தனர். அப்போதுகூட மீனவர்கள் கடற்படையினருக்கு உதவியிருக்கிறார்கள். காயமடைந்த நபர்களைப் படகில் ஏற்றிக் கொண்டு 5 மைல் துாரமுள்ள திருகோணமலை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்கள்.

ஆனால், கடற்படையினரோ தங்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களுக்கு உதவியாக இருந்த, தாங்கள் சொல்வதற்கெல்லாம் தலையாட்டி வாழ்ந்த பொது மக்கள் மீதே தங்கள் வீரத்தைக் காட்டியிருக்கிறார்கள்.

இரவு பூராகவும் வீடெரிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதில் பத்து வீடுகள், இரண்டு கடைகள், ஒரு வேன், பல மோட்டார் சைக்கிள்கள் என்பவை எரிக்கப்பட்டிருக்கின்றன.



மயில்வாகனம் நவரத்தினம் என்பவருக்குச் சொந்தமான கவிதா ஸ்டோர்ஸ் கடையும், வீடும் சிவபாத சுந்தரம் சுபாஷினுடைய வீடு, கடை, வேன் என்பவையும் ராசதுரை செகராசா, சரவணமுத்து பரஞ்சோதி, திருமதி மூர்த்தி சரோஜா, திருமதி பிரபாகரன் உதயவனம், முருகேசு ரவீந்திரன், மார்க்கண்டு வண்ணக்கிளி, செல்வவிநாயகம் சண்முகநாதன், இரத்தினம் ஜீவநாதன் ஆகியோரின் வீடுகளும் கடற்படையினரின் அடாவடித்தனத்தால் அழிக்கப்பட்டிருக்கின்றன.

இதனால் வெகுண்டெழுந்த சல்லி, சாம்பல்தீவு கிராம மக்கள் தமது கிராமத்திலிருந்து ஒரு மைல் தூரமுள்ள பிள்ளைகுளம் சந்தி என்ற இடத்துக்கு வந்து சனிக்கிழமை காலை பிரதான தெருவில் அமர்ந்து தங்களுக்கு நியாயம் வேண்டும் எனக் கோரி மறியல் போராட்டத்தை மேற்கொண்டனர்.

பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள், பெண்கள், பிள்ளைகள் உட்பட இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் மேற்கொண்ட இந்தப் போராட்டத்தினால் வடபுலக் கிராமங்களுக்கான போக்குவரத்துத் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

பிள்ளைக்குளச் சந்தியில் காவலுக்கு நின்ற கடற்படையினர் மக்கள் வந்து பாதையில் அமரமுற்பட்டபோது தடுக்க முயன்றனராயினும், மக்கள் திரண்டதால் பின்வாங்கினர்.

காலை 7 மணிக்குப் போராட்டம் ஆரம்பமானது. பகல் 11 மணியளவில் பிரதேசச் செயலர் வேலும்மயிலும் மற்றும் இராணுவ, பொலிஸ் உயரதிகாரிகள் ஸ்தலத்துக்கு வந்து மக்களைச் சமாதானப்படுத்தி கலைந்து போகும்படி செய்தனர்.

பிற்பகல் இரண்டு மணியளவில் பொலிஸ் அதிபர் அலுவலகத்தில் பாதுகாப்புத் தரப்பு அதிகாரிகள், சல்லி இளைஞர்கள் அடங்கிய கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது. சம்பந்தப்பட்ட கடற்படையினர் மேல் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது, பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் பெற்றுக்கொடுப்பது ஆகிய விடயங்களில் இணக்கம் காணப்பட்டன.

சிறுகச் சிறுகச் சேர்த்த உடைமைகளை ஒரே இரவில் அக்கிரமக்காரர்களின் அடாவடித்தனத்துக்கு இரையாக்கிவிட்டு நடுத்தெருவுக்கு வந்துவிட்ட குடும்பங்களின் வேதனையை இந்த இணக்கப்பாடுகளால் தீர்த்து வைக்கமுடியுமா?

நன்றி . சரிநிகர்

# விடுதலைக்காய் எழுவோம்!!

மீண்ட மண்ணில் மீண்டும் நாம் எழுவோம்!
ஆண்ட பரம்பரை மீண்டும் நாம் ஆள்வோம்!
வன்னி மண்ணும் வளமான முல்லை மண்ணும்,
இன்னும் விரைந்தே விடுதலைதான் காணும்,
ஈழத்தின் பல்முனை எல்லை மண்ணும்
வேழத்தின் கால்கள் ஆழப் பதிந்திடும்.
விடுதலைக் காற்று வேகமாய் அடித்திடும்
அஞ்சியஞ்சி வாழ்ந்த வாழ்வை அறவேயொழித்து
கஞ்சிக்காய் தினம் கெஞ்சிநின்ற காலம் போய்
நெஞ்சை நிமிர்த்தி நாம் நமது நாட்டில்
நஞ்சையும் புஞ்சையும் நலமே விளைத்து
வாழ வழி செய்வோம் வழங்கிடுவோம் அள்ளி
நாளும் வளர்ந்திடும் நலிவில்லா நம்நாடு
நம்மவர் நலம் வாழ பெருநிதி குவிப்போம்.

Freeman Dr. மூர்த்தி





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறீலங்கா அரசு கவனம் எடுக்காத "சிங்களப் போர்க்கைதிகள்"

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் போர்க் கைதிகளாக உள்ள சிறீலங்காப் படையினரில் 15 பேர் தமது விடுதலைக்கு அரசு ஆவன செய்ய வேண்டுமெனக் கோரி கடந்த பெப்ரவரி 10ம் திகதியிலிருந்து உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். இந்தச் சிங்களப் படையினர் தொடர்பாக கணவனை இழந்த, இரு குழந்தைகளின் தாயெனக்கூறிக் கொள்ளும் சந்திரிகா அம்மையார் தலைமையிலான அரசு எதுவித அக்கறையும் காட்டவில்லை. சிங்களக் கைதிகள் உண்ணாவிரதமிருக்கும் செய்தியறிந்த அவர்களின் பெற்றோர் உறவினர் தமிழீழம் வரவிரும்பிய பொழுது பல்வேறு முட்டுக் கட்டைகளைப் போட்டுத் தடுத்த சிங்கள அரசு பின்னர் ஒருவாறு அவர்களை வன்னிக்குச் சென்று தமது பிள்ளைகளைப் பார்க்க பல்வேறு நிபந்தனைகளுடன் அனுமதித்தது.



உண்ணாவிரதமிருந்த சிங்களப் படைவீரர்களைப் பார்ப்பதற்கென கடந்த மாதம் 22ம் திகதி சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் தமிழீழத்திற்கு போர்க்கைதிகளின் பெற்றோர் உறவினர் 28 பேர் அழைத்து வரப்பட்டனர். மல்லாவியில் வைத்து அவர்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் துறையினரும் தமிழீழ மக்களும் வரவேற்று உபசரித்தனர். பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் வழித்துணையுடன் புதுக் குடியிருப்பில் தமது புதல்வர்கள் உண்ணாவிரதமிருந்த மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு எவ்விதக் கட்டுப்பாடுகளுமின்றி உண்ணாவிரதிகளுடன் பெற்றோர் உறவினர் தங்கியிருக்க அனுமதிக் கப்பட்டனர்.

பெற்றோர் உறவினர்களின் வேண்டுகோளிற்கிணங்க போர்க் கைதிகள் தமது உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டு சிறீலங்கா தமது விடுதலைக்கு ஆவன செய்வதற்கு காலக்கெடு விதித்து பெற்றோர் கையால் உணவருந்தினர். பெற்றோர் போர்க்கைதிகளுடன் ஐந்து நாட்கள் தங்கியிருந்தனர். சிறீலங்கா அரசின் நிர்ப்பந்தம் காரணமாக 29 பெப்ரவரி கொழும்பு திரும்பினர். அவர்களின் உணர்வுகளுக்கும் வேண்டுகைகளுக்கும் மதிப்பளித்து தமிழீழத் தேசியத் தலைவரின் பணிப்பின் பேரில் தமிழீழ விடுதலைப் புலிகளால் எதுவித நிபந்தனையுமின்றி ஒரு சிறீலங்கா கடற்படை அலுவலரும், மூன்று தரைப்படையினரும் விடுவிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டனர். அத்தோடு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனால் அனுப்பிவைக்கப்பட்ட செய்தியில் "உரிய தீர்வுடன் சிறீலங்காவிலிருந்து அதிகாரம் உள்ள ஒருவர் வந்தால் ஏனைய 11 படையினரையும் விடுதலை செய்வது தொடர்பாகப் பேசத் தயாராக இருப்பதாக" தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிகுந்த மகிழ்ச்சியோடும் நிறைந்த திருப்தியோடும் தமிழீழம் வந்து திரும்பிய சிங்களப் போர்க்கைதிகளின் பெற்றோர் சிங்களச் செய்தியாளர்களிடம் கூறியவற்றில் சில வற்றை தருகிறோம். "வன்னிக்குச் சென்ற எம்மை விடுதலைப் புலிகள் நன்றாக உபசரித்தனர். தேவை





**தேசியத்தலைவரின் பணிப்பின் பேரில் கடந்த காலங்களில் விடுதலை செய்யப்பட்ட போர்கைதிகள்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


விஜித நம்புவாசம், விராஜி

யானவற்றை தந்துதவினர். நாம் வன்னிக்குச் செல்வதற்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது வைத்திருந்த அபிப்பிராயத்தை தவறானது என்று உணர்ந்து கொண்டோம்." என ஒருமித்த குரலில் கூறினர் போர்க்கைதிகளின் தாய்மார். படையினரை விடுவிப்பதற்கு சிறீலங்கா அரசு முயலவேண்டும் எனவும், இந்த அர்த்தமற்ற யுத்தத்தில் எவ்வித பிரயோசனமுமில்லை. அரசு இதற்கு உரிய நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் தாமும் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

சிங்களப் போர்க்கைதி ஒருவரின் தந்தையாரான ரண்பண்டா "மகன் உண்ணாவிரதம் இருக்கிறார் என்பதையிட்டு கவலையடைந்தேன். ஆனால் மகன் எங்களிடம் இருப்பதை விடவும் நன்றாக புலிகளின் பராமரிப்பில் உள்ளார்" என தமிழீழ விடுதலைப் புலிகளை நன்றியோடு நினைவு கூர்ந்தார். இன்னொரு தாயாரோ "புலிகள் மனிதாபிமான அடிப்படையில் எமது புதல்வர்களில் நால்வரை விடுதலை செய்துள்ளனர். அவர்களுக்கு நாம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அவர்கள் எமக்கு மாவீரர் துயிலுமில்லம், அகதி முகாம்கள் முதலானவற்றைச் சுற்றிக் காட்டினர். தரமிகுந்த உணவுகளால் எம்மை உபசரித்தனர். சிறீலங்கா அரசு தமிழர்கள் மீது மேற்கொள்ளும் வன்செயல்களையிட்டு வெட்கப்படுகிறேன்" என்று கூறினார்.

இவையெல்லாவற்றிலும்விட விடுவிக்கப்பட்ட சிப்பாய்களில் ஒருவர் "புலிகள் உண்மையான தமிழர்களாக இருந்தபடியால்தான் நான் தமிழையும் ஆங்கிலத்தையும் கற்றேன். என்னை விடுதலை செய்தமைக்கு விடுதலைப் புலிகளின் தலைவருக்கு நன்றிகள்" என்று கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட கடற்படை உதவி அலுவலர் விஜித நம்புவாசத்தின் கதையோ வித்தியாசமானது. **தமிழீழ விடுதலைப் போராட்டம் தர்மத்தின்பாற்பட்டது என்பதை மீண்டுமொரு முறை உலகிற்கு அறிவித்துள்ளது.** சிங்களக் கடற்படையதிகாரியின் மகள் சிறுமி விராஜி தமிழீழத் தேசியத் தலைவருக்கு எழுதிய கடிதமே அவளது தந்தையை விடுவிப்பதற்கான உத்தரவை தேசியத் தலைவர் விடுப்பதற்கு காரணமாக இருந்தது. அவளின் கடிதத்திற்கு தேசியத் தலைவர் அனுப்பிய பதிலில் "உனது வேண்டுகோளுக்கிணங்க உனது தந்தையை விடுவிக்கிறேன். ஆனால் உன்னைப்போன்ற பல சிறுமிகள் உன் தந்தையின் நண்பர்களால் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர்" என்றிருந்தது.

இது வரை உண்ணாவிரதிகள் தொடர்பாக எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் சிங்கள அரசு மேற்கொள்ளவில்லை. தமிழின வதைப்பிற்காக மேலும் 11000 விசேட அதிரடிப் படையினரைத் திரட்ட ஆரம்பித்துள்ளது. தனது முன்னாள் படையினர் மீது அக்கறை செலுத்தி ஏழைச் சிங்களப் பெற்றோரின் ஏக்கத்தை தீர்க்குமா என்பது கேள்விக்குறியே.

**-சூழல்-**

## முறைசாரா முகவரிகளுக்கு...

அன்பே
முடிந்தவரை
முயற்சி செய்கிறேன்
இறந்து போவதற்கு முன்னால்
உன்னைச் சந்திக்க.
யாழில்
இதுவரை உன்னவன்
உயிரோடுதானிருக்கிறேன்- இப்போது
நாம் முகங்களால் மட்டுமல்ல
முகவரிகளாலும்
சந்திக்க முடியாத
துரதிர்ஷ்ட காதலர்கள்
இருப்பினும்
உன்முகவரியை
முத்தமிடத்துடிக்கின்றன
என் காகித இதழ்கள்
நீயோ
முகவரியைத் தொலைத்துவிட்டு
எங்கே இருக்கின்றாய்?
மாரியின் பின் நீ
இடம் மாறியிருப்பாய் – அந்த
மரத்தின் முகவரியை
மறக்காமல் அனுப்பு –என் புதிய
முகவரி புதைகுழியாகுமுன்.

**-அநாமிகன்-**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடுதலைக்கு வித்திட்ட மாணவர் கிளர்ச்சி

**வங்காள தேசம் மலர்ந்தது.**

அடக்குமுறைக்கெதிராக மாணவர்கள் கிளர்தெழுந்து தெருவில் இறங்கிப் போராட்டம் செய்யத் தொடங்கியதால் உலகப் படத்தின எல்லைக்கோடுகள் மாற்றி எழுதப்பட்டன் இன்றும் எழுதப் பட்டுக் கொண்டிருக்கின்றன. நாளை யும் எழுதப்படும். பங்களாதேஸ் என் னும் வங்காள தேசம் மலர்ந்தது நேற்றைய வரலாறு.. நாளை..? உலராத மையோடு வரலாறு காத்திருக் கின்றது.

இயற்கை வளங்களையும், கூடுத லான மக்கள் தொகையையும் கொண் டிருந்த கிழக்குப் பாக்கிஸ்தானை, ஆட்சியெனும் நுகத்தடியை வைத் துச்சுரண்டிக் கொழுத்தது மேற்கு பாக்கிஸ்தான். இறைநெறியால் கிழக்கும் மேற்கும் ஒன்றாயிருப்பினும் பேசும்மொழியால் வேறுபட்டி ருந்தன. கிழக்குப் பாக்கிஸ்தான் வங் காள மொழியையும், மேற்குப் பாக் கிஸ்தான் 'உருது, பஞ்சாபி' போன்ற மொழிகளையும் தாய்மொழியாகக் கொண்டிருந்தன. எனினும் ஆட்சிக் கோல் கையிலிருந்ததால் குறைந்தளவு மக்கள் உருதுவை ஆட்சிமொழி யாக்கி, அதனை வங்காள மக்களின் தொண்டைக்குள்ளே மேற்குப் பாக் கிஸ்தான் திணிக்க முயன்றது.

1948 மார்ச் 21ஆம் நாள் டாக்கா பல்கலைக்கழகப் பட்டமளிப்புவிழா வில் கலந்து கொண்டு உரையாற்றிய பாக்கிஸ்தான் அதிபர் முகம்மது அலி ஜின்னா "உருது மொழியே பாக்கிஸ்தான் ஆட்சிமொழியென் றும் அதனை எதிர்ப்பவர்கள் தேசப் விரோதிகள் என்றும் கூறினார். வெடித்தது கிளர்ச்சி! டாக்கா பல் கலைக்கழக மாணவனாக இருந்த 'ஷேக் முஜிபுர் ரகுமான்' என்ற மொழிப்பற்று மிக்க மாணவனின் தலைமையில் மாணவர்கள் கிளர்ந்து எழுந்தனர். ஜின்னாவின் கூற்றை ஏற்க மறுத்துக் கிளர்ச்சி செய்த அனைவரையும் பாக்கிஸ்தான் இரா ணுவம் சிறைக்குள்ளே போட்டது.

1952 பெப்ரவரி 21இல் வங்க மொழிக்கு ஆட்சியில் இடமில்லை என்ற பாக்கிஸ்தான் அரசின் தீர் மானத்தையடுத்து மாணவர்கள் பெரும் கிளர்ச்சியில் இறங்கினர். அக்கிளர்ச்சியின்போது பாக்கிஸ் தானின் அடக்குமுறைக்கு 17 மாண வர்கள் பலியாகினர்.

1961 செப்டம்பர் 21ஆம் நாள், வங்காள மக்களை அடக்கியாண்ட பாக்கிஸ்தான் அதிபர் அயூப்கானை எதிர்த்துக் கிளர்ச்சியிலிறங்கிய வங் காள மாணவர்கள் பெருமளவில் கைதாகினர்.

1970, 71 ஆம் ஆண்டுகளில் நடை பெற்ற வங்காளதேச விடுதலைப் போராட்டத்தில் முக்திவாகினிப் படை யில் இணைந்து பல இலட்சக்கணக் கான மாணவர்கள் களத்திலிறங்கினர்.

விடுதலைப் போராட்டத்தில் முதன் மையான பங்கை வகித்ததால் 'டாக்கா' பல்கலைக்கழக மாணவர் கள் பாக்கிஸ்தான் படைகளாற் சுற்றி வளைக்கப்பட்டுப் பல்கலைக்கழகத்தி லேயே படுகொலை செய்யப்பட் டனர். இதில் ஏராளமான பேரா சிரியர்களும் கொல்லப்பட்டனர். முன்னரே தப்பிச்சென்ற பல்கலைக் கழகத் துணைவேந்தர் அபு சையத் சௌத்ரி வெளிநாடுகளில் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவுதிரட்டினார்.

டாக்கா பல்கலைக்கழகத்தில் வெடித்த மாணவர்களின் மொழிக் கிளர்ச்சிதான் சுயாட்சிக் கிளர்ச் சியாக வளர்ந்து, விடுதலைப் போராக வெடித்து,... இறுதியில் வங்காள தேசம் என்ற புதிய நாடு மலர்ந்தது. 'ஷேக் முஜிபுர் ரகுமான்' புதிய தேசத் தின் முதல் அதிபரானார்.

மொழி வெறுங் கருவியல்ல உயிர்மூச்சின் வெளிப்பாடு ஓரினத் தின் பண்பாட்டு அடையாளத்தை உணர்த்தும் அளவுகோல். மொழிக்கு ஊறுநேரின், இனம் அடையாளம் இழக்கும்... தடுமாறும்... இறுதியில் உயிரழியும். அழிய விரும்பாத வங்காளதேசம் குருதி சிந்திப் பெரும் விலை கொடுத்து தன்னை மீட்டுக் கொண்டது. விடுதலை வித்தை ஊன்றி, நீரூற்றி மரமாக்கியது மாணவர் ஆற்றலே.

## ஷஹீத்மினார்

**வங்காளமொழி புறக்கணிக்கப்பட்டு உருதுமொழிதான் ஆட்சி மொழியென 1952 பெப்ரவரி 21 ஆம் நாள் ஆட்சியாளரால் அறிவிக் கப்பட்டதைத் தொடர்ந்து கிளர்ந்தெழுந்து போராடிய மாணவர்கள் ஆட்சியாளரின் அடக்குமுறைக்கு ஆளாகி உயிர்துறந்த மாணவர்களின் நினைவாக டாக்கா நகரில் எழுப்பப்பட்ட நினைவுதான் ஷஹீத்மினார்.**

**உரிமைப்போர் தேசவிடுதலைப் போராக வெடித்ததும் 1971 மார்ச் 21ஆம் நாள் பாகிஸ்தான் படையினர் ஷஹீத்மினாரைத் தகர்த்து தரைமட்டமாக்கினர். வங்காளதேச விடுதலையின் பின் நாடு திரும்பிய முஜிபுர் ரகுமான் பிறப்பித்த முதல் கட்டளை ஷஹீத்மினாரை மீண்டும் கட்டியெழுப்பச் சொன்னதுதான்.**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சம்பு வெளி ஓர் இயற்கை வனப்பு

பரந்து விரிந்த உப்புவெளியாகக் காட்சிதரும் சம்புவெளி இயற்கை எழில் கொஞ்சும் தமிழீழத்தின் ஓர் பிரதேசம். பருவகாலங்கள் இரண்டிற்கும் உருவமாற்றமடையும் சம்புவெளி, மாரி காலத்தில் மக்களை ஈர்த்து கண்கட்கு பசுமையை வாரிவழங்குகிறது. கோடை காலத்தே வாடைவீசும் காற்று உடலிற்கு இதம் தருகிறது. சம்புப்புற்களால் நிறைந்து இருந்த பசும்புற்தரை மனித ஆதிக்கத்தால் அழியுண்டு வெறும் உப்பு வெளியானமை இதன் சோக வரலாறே. வடதமிழீழத்தின் பூநகரிப் பிரதேசத்தில் பூநகரி-மன்னார் நெடுஞ்சாலையின் ஓரமாக பல்லவராயன் கட்டிற்கும் கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு போன்ற கிராமங்கட்கும் இடையில் கிடத்தட்ட 5கி.மீகட்கு நீண்டுகிடக்கிறது.

வெளியுள் நின்று பார்க்கும்போது சுற்றிவர பச்சையரணாகக் காடு காட்சி தரும், இடையிடையே முற்புதர்களும், சேற்றுநிலங்களும், நீர்க்குட்டைகளும் காணப்படும் அவற்றினூடே தவழ்ந்து செல்லும் நீரோட்டங்கள் குட்டைகளை அரவணைத்துச்செல்லும் அழகோ அழகுதான். வெளியின் மத்தி மேட்டுப் பகுதியாக உள்ளது இங்குவானளாவ நிமிர்ந்த பனைகளும் நிலத்தை மூடிநிற்கும் பற்றைகளும் மாரியில் ஓர் தீவு போலக் காட்சிதரும். இப்பகுதியில் ஐயனார் எழுந்தருளியுள்ளார். வெளியே ஊடறுத்துச் செல்லும் வீதியாலே பிரயாணம் செய்வோர் ஐயனாரை வழிபட்டே செல்வர். தமது பிரயாணத்திற்கு அவரே துணை எனக்கருதுகின்றனர். அருள் மிக்க இவ் ஐயனார் கோவிலை அண்டிய பகுதியில் ஒருசில குடிகள் வாழ்ந்துள்ளன. அவர்களே பனைகளை அங்கே உருவாக்கியுள்ளனர். யானைகளின் கடவையாகவும் வசதிகள் குறைந்த பகுதியாகவும் காணப்பட்டமையால் அவர்கள் பின்பு அவ் விடத்தை விட்டு அகன்று விட்டதாகக் கூறுகின்றனர். தற்போது யானைகளின் நடமாட்டம் அருகிவிட்டபோதும் திடீர் திடீரென வரும் யானைக் கூட்டங்களினால் வீதியால் இராப்பயணம் செய்வதை மக்கள் தவிர்த்தே வருகின்றனர்.

வானம் பொழியும் காலம் இந்த வெளி சிரிக்கும். ஆங்காங்கே தேங்கி நிற்கும் நீர்த்தேக்கங்களைச் சுற்றி அழகிய பசும்புற்கள் கம்பளம் விரித்திருக்க, அதன் பின்னே ஓரிரு மரஞ்செடிகள் குளிர்ந்து நிற்கும். நீர்த் தடாகத்தின் உள்ளே பலவர்ணங்களை உடையவல்லினப் பறவைகள் நீந்தி முகிழ்ந்து வானில் வட்டமிட்டு, அழகு வட்டம் விட்டு பிரிய மனமின்றி மீண்டும் தடாகம் நாடும் நாரைகள், கொக்குகள் சிறுகுருவிகள் சில இங்கு தினமும் அலைந்து திரிகின்றன. ஆனால் புதுப்புது பறவையினங்களை மாரி காலத்தில் காணமுடிகிறது. பருவகாலச் சுற்றுலாப் பறவைகளின் ஓர் மையமாகத்திகழ்கிறது போலும்.

வெளியின் வடக்கு, தெற்கு பகுதிகளில் நீர் பாரிய தேக்கமாகக் காணப்பட்ட போதிலும் கோடையில் இவை அனைத்துமே வற்றிவிடுகின்றன. தெற்குப் பகுதியினூடு பாய்ந்து செல்லும் நீர் பிருந்தாவனம் எனும் பகுதியினூடு கடலுடன் சங்கமிக்கிறது. கடல்தொட்டு நீரேரிபோல் நீண்டு கிடக்கும் இந் நீர்த்தேக்கம் ஒவ்வொரு மாரியும் பிறந்து கோடையில் மடிகிறது, இங்கு உப்பு விளைகின்றது. தொகை தொகையாகச் சம்புப் புற்கள் குவிந்திருந்ததை அயற்கிராம மக்கள் தற்போது நினைவு கூருகின்றனர். நாமமே இல்லாது அழிந்துபோன இவை கூரைகளை வேய்வதற்கும் மேலும் பாய் போன்றவற்றிற்கும் பயன்படுத்தப் பட்டுவந்துள்ளது. இவ் வெளிக்கு சம்பு வெளி என்று நாமம் வரக்காரணமே இச்சம்புப் புற்கள் தானாம். அழகிய சொர்க்கமாகக் காட்சி தரும் இப்பகுதி நீர்வற்றிச் சேறாகும் காலத்தில் துர்நாற்றம் வீசுவது கலலைக்கிடமானதே. உண்மையில் இந் நிலப்பிரதேசம் சேற்று நிலமே. ஆனால் கோடையில் நீரெலாம் ஆவியாகிவிட வெறும் தரவையாக விளங்கும். இத்தரவையினூடு மக்கள் பிரயாணம் செய்யவும் முடிகிறது. காற்று பலமாக வீசுங்காலத்தில் இவ்வெளியைக் கடப்பதே பெருங்காரியமாகும்.

சிறு துறைமுக வசதி கொண்ட வலைப்பாடு கடற்பகுதியின் மீன் வளமும், மணற்பாங்கான கிராஞ்சிப் பகுதியின் தென்னை, பனை வளமும் இதனூடான பிரயாணத்தை அதிகரிப்பன எனலாம். மேலும் பூநகரிநகர் இராணுவ ஆக்கிரமிப்பிற்கு உள்ளான பின் ஐயபுரம் பகுதி பூநகரிப் பிரதேச செயற்பாட்டு மையமாக மாறியமையாலும் இவ் வீதியின் பயன்பாடு அதிகமானது.

சம்பு வெளியரங்கிலே சூரியோதயக் காட்சி சூரிய அஸ்தமனக் காட்சிமனதை வருடி இன்ப ஆறை ஓடச்செய்யும் அழகு வாய்ந்தன. தினந்தோறும் இதனூடு பயணிப்போர் இயற்கை அன்னையின் எண்ணற்ற எழிற்கோலங்களைக் கண்டு களிப்புறுகின்றனர். பிரயாணக்களை கழையும் வல்லமை வாய்ந்த பொலிவுடன் சம்புவெளியெனும் வனப்புமிகு அழகு வெளியில் இயற்கை அன்னை குடியிருக்கிறாள்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு பிரச்சினையும் இல்லை

-எஸ்.ஆதவன்-

கண்களைத் திறந்தாலும் கண்களை மூடினாலும் ஒரே நிலை தான். ஒரே இருட்டு, பொழுது விடிந்தால் மட்டும் இலேசான வெளிச்சம் வரும். காற்று என்பது சுவாசிக்க மட்டுந்தான். வியர்த்து வெக்கையாகி உடல் பழகிவிட்டது. மரணத்தின் திகதிக்காக காத்து நிற்கும் ஒன்பது பேரில் "அருளும்" ஒருவன்.

பல்லிகளின் இடைவிடாத எச்சரிக்கையும் சிலந்திகளின் கூடுகளும் தான் அவர்களுக்குத் துணை. யாரோ கஸ்ரப்பட்டு அழகாகக் கட்டிய வீட்டை உடைத்து கைதிகளை வைத்திருப்பதற்காக காற்று வெளிச்சம் உட்புகாதவாறு கொலைகளின் கூடமாகக் கட்டியுள்ளார்கள்.

பிடிபட்ட புதிசில் அடி உதை தாங்கமுடியாமல் அழுவான் பெரிய சத்தமாக. ஐயோ? என கத்துவான். அவர்களின் காலைத்தொட்டுக் கும்பிடுவான். இரங்கிவேண்டுவான். அவர்கள் போகும்போதும் வரும் போதும் பரிதாபமாகப் பார்ப்பான். இரக்கமுள்ள ஒருவனாவது இருக்க மாட்டானா "தேடுவான்". ஆனால் அவைகள் எல்லாம் பலன் அற்றவை என்பது பின்புதான் அவனுக்குப் புரிந்தது.

திருநெல்வேலி பாடசாலைக்குப் பக்கத்தில் வைத்துக் கைது செய்யும் போது அவன் நினைத்திருந்தால் ஓடியிருக்கலாம். ஏனெனில் வேறு எவரையோ கூப்பிடந் சயிக்கிளில் போய்க்கொண்டிருந்தவன் திரும்பிப் பார்த்தால் இவனை வரும்படி காவல் நிலையத்தில் இருந்த இராணுவம் கையசைத்தது. அப்போது அவன் பயப்படவில்லை. இதே இராணுவ முகாமால் எத்தனை நாட்கள் சைக்கிளில் சென்றிருப்பான். இவனை கண்டதும் "சரி... சரி போ" என கையசைத்திருப்பார்கள். இராணுவத்தில் ஒரு சில முகங்கள் அவனுக்கு பழக்கப்பட்டுக்கூட இருந்தது. இந்த நிலையில் அவன் ஏன் பயப்படவேண்டும்? அவன் தனது அடையாள அட்டையை எடுத்துக்கொண்டு இலேசாக புன்னகைத்தபடி "சேர்" என நீட்டினான். அவ்வளவுதான் மின்னல் வேகத்தில் வந்த ஒரு இராணுவ வீரன் கழுத்துப்பிடியாக பிடித்து பக்கத்தில் இருந்த இராணுவ முகா




முக்கு தள்ளிக்கொண்டு போனான்.

அதன் பின் நடந்த ஒவ்வொரு சம்பவமும் அவனால் மீட்டுக்கூட பார்க்க பயங்கரமாக இருந்தது. இப்போது சாவு என்பது எப்போது வரும் என எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். உடன் பிறப்புகளும் உறவுகளும் அம்மா, அப்பா எல்லாமே தலை கீழாக மாறி மறந்து விட்டனர். மரணத்தின் வாயில் நிற்கின்ற ஒன்பது பேரும் தான் இப்போ உறவுகள், உடன்பிறப்புக்கள், அப்பா, அம்மா, வைத்தியர், ஆசான், தோழன் என மாறிவிட்டது.

கைகளிலும் கால்களிலும் விலங்கிட்டு யானைகளைப்போல் கட்டி வைத்திருக்கிறார்கள். சாப்பாடு கிடைக்கும் போதுதான் தெரியும், இது காலை, இது மதியம் என. ஒரு நேரம் காலைச் சாப்பாடு மதியமும் மதியச் சாப்பாடு இல்லாமலும் போகும். "பெரியவர்கள்" யாராவது வந்தால் மட்டும் வரிசையில் கொண்டுபோய் இன்னும் ஒரு அறையில் இருத்துவார்கள்.

அவனுக்கு நேரே முன்னால் படுத்துக் கிடக்கும் ஒருவன் முனகல் அவனது சிந்தனையை கலைத்தது. "என்ன மச்சான் ஆரடாப்பா... காச்சலா?"

அவன் முனகிக் கொண்டே சொன்னான் "என்னை அமத்திப் பிடியுங்கோ ஐயோ என்ன அமத்தி பிடியுங்கோ"

அருள் மெதுவாக எழுந்து தடவி ஒருவாறு அவன் இருக்கும் இடத்திற்குப் போய் "ஆர் விக்கினேசா"

"ஓம் அண்ண என்னை அமத்திப் பிடியுங்கோ"

காச்சல் நெருப்பாக கொதிக்குது வீட்டில் எண்டால் எத்தனை வைத்தியம் இஞ்ச ஆகக்கூடிய வைத்தியம் அமத்திப் பிடிக்கிறதுதான்.

இவனது சத்தத்தில் எல்லோரும் எழுந்து விட்டார்கள்.

யாரைக் கூப்பிட்டாலும் வரமாட்டார்கள். வந்தாலும் நாங்கள் சொல்வது அந்த ஜென்மங்களுக்கு விளங்காது. காச்சல் விடுவதாக இல்லை. தலை எல்லாம் நெருப்பாக எரிகிறது. காச்சலின் வெக்கை மற்றவர்களால் உணரக்கூடியவாறு அனலாக வீசியது.

"அம்மா என்ர அம்மா ஐயோ அம்மா."

அவன் கண்கள் நீர்சுரக்க வேதனையால் துடித்தான். அருளுக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. மெதுவாக எழுந்து கதவுக்குப் பக்கத்தில் போய்

"ஐயோ... ஐயோ... மாத்தையோ... மாத்தையோ..." அவனால் முடிந்த வரை கத்திக்கொண்டே நின்றான். யாரும் வரவில்லை. நீண்ட நேரமாக கத்திக் கத்தித் தொண்டை காய்ந்து விட்டது. சலிப்பு தன்மையும் வெறுப்பும் தோன்ற இயலாமையால் அப்படியே கதவோடு சாய்ந்து படுத்துக் கொண்டான். மற்றவர்கள் எதுவுமே பேசவில்லை.

அருள் கண் விழித்தபோது இலேசான ஒளி கண்களில்பட்டது. ஒருவரின் முகத்தை இன்னும் ஒருவர் அடையாளம் காணலாம். அவ்வளவு தான் சோமசேகரம் அருளை கூப்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிட்டார். "அருள் ஆள் முடிஞ்சுது" அருளால் நம்பமுடியவில்லை. எல்லோரது முகத்திலும் சோகம் படர்ந்தது. அருள் அவனை தூக்கிப் பார்த்தான், ஆட்டிப்பார்த்தான். எந்த வித அசைவும் இல்லை. தேகம் குளிர்ந்து காணப்பட்டது. இப்போது அருளுக்குப் புரிந்து விட்டது. அவன் இறந்து விட்டான். அவனையும் அறியாமல் கண்கள் குளமாகியது.

நேற்று வரைக்கும் தோழனாக அவன் செய்த ஒவ்வொரு செயலும் கண்முன்னே தோன்றின.

அது மட்டுமல்லாமல் அவன் அடிக்கடி சொல்லிக் கொள்வான். "மச்சான் கடவுள் செயலாக ஐ.சி.ஆர்.சி எங்களை வந்து பார்த்தால் எங்கட நிலமையை சொல்லுவம். கடிதம் கொடுத்து விடலாம். அம்மாக்களிட்ட இருந்து கடிதம் வரும். ஐப்பது வயதானாலும் என்ர உறவுகளுடன்தான் சாகவேணும்."

எந்த நேரம் சாவு என எதிர் பார்த்துக் கொண்டிருக்கும்போது அவனது ஏழை மனதில் தோன்றியவற்றை எண்ணும்போது அருளால் தாங்க முடியவில்லை. அவன் மட்டுமல்ல எல்லோரும் விம்மி விம்மி அழுதார்கள்.

அன்று காலை சாப்பாடும் வரவில்லை ஒருவரும் வந்தும் பார்க்கவில்லை. அருள் கதவடியில் நின்று

".. மாத்தையோ... மாத்தையோ... சேர்... சேர்..."

சோகமான குரலில் கூப்பிட்டுக் கொண்டு இருந்தான்.

அரைமணி நேரத்திற்குபின் ஒருவன் வந்து ஏதோ சிங்களத்தால் சொன்னான். அருளுக்கு அவன் சொன்னது புரியவில்லை. நடந்ததைச் சொல்லவும் தெரியவில்லை. ஊமைப் பாசையாலும் செய்கையாலும் காட்டினான். அவனைத் தூக்கி நிறுத்தித் கண்களை விரித்துக் காட்டினான். இவைகளைப் பார்த்துவிட்டு அந்த இராணுவச் சிப்பாய் இலேசாக சிரித்தான். பின்பு எதுவும் சொல்லாமல் சென்று விட்டான்.

சில மணி நேரத்திற்கு பின் மூன்று சிப்பாய்கள் வந்தார்கள். விக்கினேசின் உடலைத் தூக்கிக்கொண்டு வரும்படி சிங்களத்தால் கூறி சைகையாலும் காட்டினார்கள். அருளும், இன்பனும், கரனும் சேர்ந்து தூக்கிக் கொண்டு போனார்கள். அருள் அழுது கொண்டே போனான். அருளின் முதல் நண்பன் விக்னேஸ் தான். அவனது உடல் காவிச்செல்லும் விதம் மிகவும் பரிதாபமாக இருந்தது. இப்படி ஒரு நிலை வரும் என அருள் எண்ணிக்கூடப் பார்க்கவில்லை.

அது ஒரு தென்னந்தோப்பு காணி சுற்றி மதில் சுவர், இடையிடையே காவல் அரண்கள். நீண்ட நாட்களுக்குப் பிறகு வெளியே வரும் ஒரு சந்தர்ப்பம் விக்கினேசின் சாவால்க் கிடைத்தது. ஒரு மண்வெட்டியை கொடுத்துகிடங்கு வெட்டச் சொன்னார்கள்.

அருள் திகைத்துப் போனான். என்ன? இதற்குள்ளா? புதைப்பது.

மூவரும் ஒருவரின் முகத்தை ஒருவர் பார்த்தார்கள். "முகங்கள் இறுகிப் போயின" இவர்களை மேற்பார்வை செய்யவிட்ட இராணுவத்தினர் மூவரும் ஏதோ பேசி பெரிதாக கைதட்டிச் சிரித்தார்கள். ஒருவரை ஒருவர் கீச்சங் காட்டி துள்ளி விளையாடினார்கள்.

அருள் மண்வெட்டியை எடுத்து ஒரு துப்பரவான இடத்தில் வெட்ட ஆரம்பித்தான். மிகவும் இலகுவாக மண் உலுந்து கிடந்தது. இரண்டு மூன்றுமுறை வெட்டியதும் ஒரு துர்நாற்றம் வீசியது. அருள் பயத்தால் உறைந்துபோக கரன் அருளிடம் மண்வெட்டியை வாங்கி திரும்ப மூடினான். மூவரும் ஒருவருடன் ஒருவர் கதைத்துக்கொள்ளவில்லை. மரணப்பயம் அவர்களைக் கவ்விக் கொண்டது. சாவுதான் என்பது இப்போது உறுதியாகியது. இது வரையும் அடி மனதில் இருந்த ஒரு சிறிய நம்பிக்கையும் தூளாகியது. இன்னும் ஒரு இடத்தில் வெட்டினார்கள். அது ஒரு பெரிய தேசிமரத்தடி. அதிலும் மண் இலகுவாக இருந்தது.

இதைக்கண்ட இராணுவச் சிப்பாய் ஒருவன் "அடோ மே அண்ட" என கூறி ஏதோ எல்லாம் சிங்களத்தால் சொன்னான். பின்பு மதில் ஓரமாக ஒரு இடத்தைக் காட்டி வெட்டச்சொன்னான். மூவரும் வியர்க்க வியர்க்க வெட்டி முடித்தார்கள்.

கால் முகம்கூட கழுவ விடாமல் மூவரையும் உள்ளே தள்ளி கதவைப் பூட்டினான். வியர்த்த உடம்பில் மண் சொரசொரத்தது. அப்பாவித் தனமாக இவர்கள் வருவதைப் பார்த்து விட்டு

"வெளியில் யாரையாவது கண்டீர்களா?"

ஒவ்வொருவரும் தங்கள் உறவுகளை கண்டீர்களா என கேட்டார்கள். அவர்களின் எண்ணம் இவர்கள் சுடலைக்கு சென்று வருகிறார்கள். வாகனத்தில் சென்றிருப்பார்கள். அப்போது போகும் வழியில் அல்லது வரும் போது என்றாலும் யாரையாவது பார்த்திருப்பார்கள் என்ற அப்பாவித்தனமான எண்ணம். சுடலை எமக்கு பக்கத்தில் இருப்பது இவர்களுக்குத் தெரியாது.

அருள் நீண்ட நேரம் யோசித்த பின் முடிவுக்கு வந்தான். எல்லோரையும் வட்டமாக இருக்கச் சொன்னான். அவனது கதையில் செய்கையில் புதிய தென்பும் துணிவும் காணப்பட்டது.

"இனி நாங்கள் தப்பமாட்டம். வீணா இஞ்ச கிடந்து எப்ப சாவு எப்ப சாவு எண்டு ஏங்கிறதைவிட வரிசையாக வெளியில் கொண்டு போகும்போது தப்பி ஓடுவம். சுட்டால் சாவம் இல்லாட்டி அது இறைவன் கையில் இனி ஓட வேண்டியது தான்."

எல்லோரும் மகிழ்ச்சியோடு சம்மதித்தார்கள். அந்த நாளை எதிர் பார்த்தபடி காத்திருந்தார்கள்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அணையாத தீபங்கள்



**லெப்.கேணல் ஜொனி**
(விக்கினேஸ்வரன் விஜயகுமார்)
பருத்தித்துறை
21/05/1962 - 13/03/1988

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதனிலைத் தளபதிகளில் ஒருவரான லெப்.கேணல்.ஜொனி பேச்சுவார்த்தைக்கென இந்திய இராணுவத்தால் அழைத்து வரப்பட்டு வஞ்சகமாக 1988 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13ம் திகதி இந்தியப்படைகளாலும், தேசத்துரோகக் கும்பல்களாலும் முல்லைத்தீவு தேவிபுர பகுதியில் வைத்து சுடப்பட்டு வீரச்சாவடைந்தார்.

1980களில் யாழ்க் குடாநாடு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ் கிட்டண்ணாவால் கொண்டுவரப்பட்டது. அதற்கு கிட்டண்ணாவால் சிறீலங்காப் படைகளுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட வரலாற்று முக்கியத்துவமிக்க பல தாக்குதல்களில் ஜொனி முன்னின்று சமராடினார். இந்திய இலங்கை ஒப்பந்தம் வந்த போது கிட்டண்ணாவுடன் தமிழகம் சென்றார். இந்திய இராணுவத்துடனான புலிகளின் போர் தொடங்கியது. கிட்டண்ணாவுடன் இந்திய அரசு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. அது சம்பந்தமாக மேலதிக முடிவுகளை எடுப்பதற்கு கிட்டண்ணா லெப். கேணல். ஜொனியை சமாதானத்துாதுவராக தேசியத் தலைவரைச் சந்திப்பதற்கு அனுப்பினார். இவர் மூலம் தேசியத் தலைவரின் இருப்பிடத்தை மோப்பம் பிடிக்கும் முயற்சியில் இந்தியப்படைகளும், தேசவிரோத சக்திகளும் ஈடுபட்டன. அது சாத்தியப்படாத நிலையில் ஜொனியை நயவஞ்சகமாகக் கொன்றனர்.

தாயகத்தையும் தேசியத் தலைவரையும் ஆழமாக நேசித்து இன்னுயிரை நீத்த இவ்வீரவேங்கையின் பன்னிரண்டாம் ஆண்டு நினைவலைகளை நெஞ்சிலிருத்தி தாயக விடுதலைக்கு விரைந்து செயலாற்றுவோம்.

மகளிர் தினத்தை முன்னிட்டு கனடா ரொறன்ரொ நகரில் நடந்த ஊர்வலத்தில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கனடாவாழ் தமிழீழப் பெண்களும் கலந்து கொண்டு சிறிலங்கா அரசினால் தமிழ்ப் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகளை சர்வதேச சமூகத்தின் முன் வெளிக்கொண்டு வருமுகமாக பதாகைகள் தாங்கியும் கோசங்களையும் எழுப்பினர்.







தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






## மேலும் மேலும்...
# கிளிநொச்சியில் 42 மனித எலும்புகூடுகள் மீட்பு...!



ஓயாத அலைகள் இரண்டின் மூலம் விடுவிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் உதயபுரம் பகுதியில் கடந்த மாதங்களில் மாத்திரம் 35 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. இம் மாதம் 21,24ம் திகதிகளில் மேலும் 7 எலும்புக்கூடுகள் கிளிநொச்சி இரத்தினபுரம், உருத்திரபுரம் பகுதிகளில் மீட்கப்பட்டுள்ளன. கிளிநொச்சியில் சத்ஜெய படையினர் நிலைகொண்ட கடந்த இரு வருடங்களில் வீடுகளைப் பார்க்கச்சென்ற போது சிங்களப் படையால் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் எலும்புக்கூடுகளே அவையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் இராணுவம் நிலைகொண்ட வேளையிலும் மட்டும் 244 பேர் வீடுகளைப் பார்க்கச் சென்ற போது காணாமல் போயுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளிலிருந்து தெரியவந்துள்ளது.

எலும்புக்கூடுகளனைத்தும் அக்கிராயனில் இயங்கும் கிளிநொச்சி வைத்தியசாலையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளன. இது வரைக்கும் 7எலும்புக்கூடுகளே உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதற்கு காரணமான சிங்களப் படையினரை தமிழீழத்தின் ஏனைய பகுதிகளிலிருந்து விரட்டியடிப்பதன் மூலமே தமிழர்கள் நிம்மதியாக உயிர்ப்பயமின்றி சுதந்திரமாக வாழமுடியும்.

# வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டது



பத்து வருடங்களுக்கு மேலாக திருக்கேதீஸ்வரத்திலே நித்திய பூசைகள் நடைபெறுவதற்கும் சிறீலங்காத் தரப்பு தடைவிதித்துள்ளது. இருந்த போதிலும் கடந்த சிவராத்திரி தினத்தில் தமிழ் மக்கள் ஆலயத்திற்கு செல்ல அனுமதிக்கப்பட்டனர். இதன் போது சிறீலங்காப்படையினர் திருக்கேதீஸ்வரத்தை விட்டு வெளியேறியதாகக் கூறப்பட்டுள்ள போதிலும் இது முழுப் பொய்யென சிவராத்திரி தினத்தன்று சிங்களப்படைகளால் அழைத்துச் செல்லப்பட்ட தமிழர்கள் தெரிவித்துள்ளனர்.

திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு இம் மாதம் நான்காம் திகதி அழைத்துச் செல்லப்பட்ட 300 தமிழ் மக்கள் கைவிரல் அடையாளமெடுக்கப்பட்டு வீடியோ எடுக்கப்பட்டு, புகைப்படம் எடுக்கப்பட்டு, பிணை வைக்கப்பட்ட நிலையில் மன்னாரிலிருந்து திருக்கேதீஸ்வரம் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். அதுவும் சிங்களப்படையால் ஒழுங்கு செய்யப்பட்ட பேரூந்தில் கண்ணாடி முழுவதும் கடதாசியால் மறைக்கப்பட்டு பயணிகள் குற்றவாளிகளை அழைத்துச் செல்லுவதைப் போன்று அழைத்துச் செல்லப்பட்டனர். இது தமிழ் மக்களின் மதவழிபாட்டு அடிப்படை மனித உரிமை, சிறீலங்கா பேரினவாத அரச படைகளால் மீறப்படுவதை எடுத்துக்காட்டுகின்றது.


"ஒரு காலத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கூடி வணங்கிய இடமாக விளங்கிய திருத்தலம். இன்று சிங்களப் படையின் 16 வது பிரிகேட் தளமாக மாற்றப்பட்டதுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இப்பகுதியைத் தாக்க மாட்டார்கள் என்ற துணிவில் 1600 படையினர் விசேட பயிற்சிகளைப் பெறுவதற்காகவும் தங்கியுள்ளனர். திருக்கேதீஸ்வரத்தில் தீர்த்தக்குளமான பாலாவிக் கரையெங்கும் இராணுவ பங்கர்கள் நிறைந்தும் காணப்படுகின்றது." என ஆலயத் தர்மகர்த்தா நமசிவாயம் தெரிவித்துள்ளார்.

சிங்களம் தமிழ் மக்களின் வரலாற்றுத் தடங்களை அழிப்பதில் முன்னிற்கிறது என்பதற்கு திருக்கேதீஸ்வரம் ஒரு சான்று.




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



# மதிப்பீட்டுரை

-பிரதீபகுமரன்-



உண்மையற்ற புன்னகையின் உருமறைப்பின் உள்ளே, செவிகளில் மோதி எழும் சமாதானப் பேரொலியின் சத்தத்துள், கைதாகி காணாமற்போனோராகி இன்று "மண் தூர்த்த கைகளே" சொன்ன மனச்சாட்சியின் வார்த்தைகளாகிப் போன, எம் உறவுகளுக்கான கவிதைகள் இவை.

அவர்களின் நீதியற்ற மரணத்தின் பிரிவையும் அதனால் எழுந்த சினம், ஆற்றாமை, அனுதாபம் அவலம் எல்லாமுமாகத் திரண்ட நெஞ்சின் உணர்வுகளையும் வார்த்தைகளாக்கிய கவிதைகளின் தொகுப்பு இது.

கைக்கு அடக்கமாக ஒரு கவிதை போன்ற அழகு கொண்ட அட்டை அமைப்பு. பொருத்தமான நிறத்தெரிவு. கைகளில் எடுத்ததும் வாசிக்கும் விருப்புணர்வு மனதுள் எழுகிறது. முகமிழந்து, பேசும் மொழியிழந்த "அமைதி நகர்" மக்கள் போன்று வழிப்பிள்ளையாரின் வடிவமும் அட்டையின் ஓவியமாகியுள்ளது.

"அமைதி நகரின் மன்னம் பெரிகள்" அமைதிநகரின் திரை கிழித்த முதற் குரலான கிருஷாந்தியின் நினைவுடன் மீண்டும் மீண்டும் வரும் வரலாற்றின் தடம் மாறாத தர்மத்தைச் சொல்கிறது இக் கவிதை. வார்த்தைகள்தான் கவிதை. தனித் தனிச் சொல்லாக எந்தத் தனியான அர்த்தமுமற்று எம் வாயில் உலாவரும் சொற்கள் அவை வைக்கப்படும் விதத்தில் வார்க்கப்படும் கருத்தில் நல்ல கவிதைகளாகின்றன.

"இங்கே உன்மகன் இல்லை" இது இதிலுள்ள ஒரு கவிதையின் தலைப்பு, இப்படித் தொடர்கிறது கவிதை. "அம்மா புதை குழிகள் தோண்டப்படுமானால்/உடைந்து போன மண்டையோடும்/முறிந்து போன கை கால்களும்/உன் மகனுடையது என்று எப்படிச் சொல்வாய்/நீ நிலாக்காட்டிச் சோறூட்டிய/அந்த விழிகளைத்தேடுவாய்/இளமையின் பொலிவில் அரும்புவிட்ட/அந்தச் சிறு மீசையைக் காண விளைவாய்/பூரித்துப் பொங்கி வளரும் அந்த இளம் தோள்களைப் பார்க்கத் துடிப்பாய்/எல்லாவற்றுக்கும் மேலாக அம்மா என்று ஆசையுடன் அழைக்கும்/அந்த! நாவைத் தேடுவாய்/தாயே! எதையும் அங்கே உனக்கு என்னால் காட்ட முடியாது/எனவே மன்னித்துக் கொள்/இங்கே உன்மகன் இல்லை—அவன்/வழமை போல் உன் நெஞ்சில் மட்டும்."

சாதாரணமான வார்த்தைகள்தான். ஆனால் இறுதி வரியையும் படித்து முடிக்கையில் நெஞ்சுள் தெறிக்கும் வலியின் துயர்தான் இக்கவிதையின் வெற்றி. எந்தத் தாயினதும் விழிகளையும் கலங்கவைத்து அவலத்தின் கனத்தை மனதில் பதியவைக்கும் வடிவ ஒழுங்கு கொண்ட கவிதை இது. உறவுகளின் பிரிவு தந்த சோகம் மனமெங்கும் நிறைந்து பழிவாங்கும் ஆவேசம் வார்த்தைச் சாட்டைகளாகி இப்படி விழுகிறது "காலம் பதிலுரைக்கும்" எனும் கவியில்.

குதறுண்ட எம் குருத்துக்களோ/வல்லூறுக்கிரையாகி/வதைக்கப்பட்டிறந்த எம் வசந்தங்களே/உம் ஓலக் குரலுக்கிரங்கா/அரக்கரை உலுக்கப்/ பூகம்பம் உதிர்ப்போம்/எம் தேச வெளியெங்கும்/சாக்குழிகள் தோண்டிய—எம்/பூமிக்குரமாய்ப் புதைப்போம் / நாம்சிந்திய கண்ணீருக்கும் /செந்நீருக்கும் பதிலுரைக்க / சிங்களத்துச் சேனைகளை/ இழுத்து வந்துள்ளது— காலம்/ வந்தவர் இனிச் சென்றிலர்/

இந்த வார்த்தைகளின் வலிமையில் தானே எமது நாளைய நாட்களிற்கான நம்பிக்கைகள் புதைந்து போயுள்ளன.

"மையத்தழலி"ன் ஒரு நான்கு வரிகள்.

"தெருவொன்றிற் பயணித்த போதோ/ வாங்கும் போதோ/கனிந்து



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொழியும் கனவுகளில்/முழுகும் பொழுதோ /காணாமற் போனீர்கள்" இவ்வரிகள் சட்டமிடப்பட்ட வார்த்தைகளாகி மனதுள் ஒட்டிக் கொள்கின்றன. கைதாக முன்பான அவர்களின் கடைசி நிமிடங்களின் இனிமையை, அவர்களின் விழிகள் சுமந்திருக்கக் கூடிய கனவுகளை, எண்ணவைத்து எமக்குள் ஏக்கம் விதைக்கிறது.

"உயரும் என் குரல்" எனும் வேறொரு கவிதை மௌனித்துப் போன மனங்களின் மனச்சாட்சி தொட்டு உயரே எழுகிறது.

"ஒரு சொல் / ஒரே ஒரு சொல்/ கதைப்பதற்கு வழியின்றி/புதைக்கப் பட்ட அத்தனை மனிதருக்குமாய்/ அடிவயிற்றிலிருந்து எழும் என் கதறல்/செம்மணி வெளி கடந்து பிரபஞ்சமெங்கும் பரவும்/"

உறவுகளைப் புதைத்த குழிமீது புல் முளைக்கவிட்டு, நகரைப் பேய்களின் குடியிருப்பாக்கி, இரவுகளை விழிபிதுங்கும் அச்சத்தில் கரைத்த படி மனச்சாட்சியை மரணிக்கவிட்ட மக்களின் காதுகளில் ஓங்கி அறைகிறது இக் கதறல்.

"போராடும் எதுவும் நின்று நிலைக்கும்", எனும் கவிதையின் சில வரிகள்.

உயிர்காக்க எங்கள் இனிய உறவுகள்/இடம் பெயர்ந்து நகர்கையிலே/இதயம் கசிந்துருக வழியனுப்பி/ காத்தேன்/என் மக்களைக் காத்தேன்/எனச் சிலிர்த்த நீள்வெளி/ பத்திரமாய்த்தான் வழி அனுப்பி/ வைத்தவர்கள்/ தன் மடிக்கே பிணங்களாய் வந்தபோது/என்ன நினைத்திருக்கும்/"

செம்மணி வெளியால் சிந்திக்க முடியுமானால் அதன் நெஞ்சு சொல்லும் வார்த்தைகள் நிச்சயமாக இவைதான், எங்கள் வாழ்வின் நகர் பாதையின் மையமாகி, எம் கடந்த காலங்களின் விதியின் சாட்சியாகிப்போன அவ்வெளி பற்றிய இந்தக் கற்பனை நெஞ்சு தொடுகிறது.

புதைகுழிக்கும் எமக்குமான உறவு ஏனோ வரலாற்றின் சாபக் கேடாகித் தொடர்ந்து செல்கிறது. எமது உணர்வுகளும் உதிரமும் சேர்த்து விதைக்கப்பட்ட எம் செல்வங்களின் துயிலும் இடங்கள் உடைக்கப்பட்டு அங்கு நிறைந்திருந்த அமைதி குலைக்கப்பட்டபோதும் நாம் நீதியின், நியாயமான மன உணர்வுகளின் எல்லைகளையும் மீறி உலகே அதிசயிக்கும் வண்ணம் எதிர்ப்பின் அடையாளம் ஏதுமற்று மௌனித்திருந்தோம். இன்று வரலாறே புதைகுழிகளை கிளறவேண்டிய துன்பியல் நிகழ்வையும் எம்மேல் சுமத்தியுள்ளது. அநீதியின் முன்னான அமைதி துன்பங்களைத் தவிர வேறெதையும் எமக்குத் தந்து விடப்போவதில்லை என்பதற்கு இது சான்று.

கேட்போர் இதயங்களைக்கரைய வைத்து, காற்றில் மிதக்கும் செம்மணி பற்றியே அந்தப் பாடலின் பின்ணினைப்பு இத்தொகுப்பிற்கு, கனதி சேர்க்கிறது.

நுழைவாயிலின் பின்னணியில் மூண்டெழும் தீயின் நாக்குகள் உள்ளே நடக்கும் எல்லாவற்றுக்குமாகி நிற்கிறது. "நிறமிழக்கும் நகரத்தில்" எனும் கவிதையின் இறுதி வரிகளான

"கண்ணீர் நிரம்பிய முற்றங்களில்/துயர் முற்றி பெண்களின் சித்திரம் நடுங்கிறது/வெம்மை தகிக்கும் தெருக்களில்/வேர் சுட்ட மரங்களின் மீதலைகின்றன/கரும்பட்சிகள்/மலம் பரவிய முற்றமாயிற்று/நகரின் தோரணவாசல்"

இவ்வரிகளுடன் பின்னட்டைப் படமும் சேர்ந்து எமக்கு எமது நகரின் நிலை பற்றிய செய்தியைச் சொல்கிறது.

நூலின் முன்னுரையில் கூறியதுபோல உலக மனச்சாட்சியை உலுப்பும் குரலாக, எம்மக்களிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒளிச்சுடராக, இக்கவிதைகள் இலக்கை நோக்கி குறிப்பிடும் வகையில் முன்சென்றுள்ளன.

ஒரே பொருள் கொண்ட கவிதைகளானாலும் எம்வாசிப்புணர்வில் எந்தத் தொய்வையும் தராது கடைசிக் கவிதை வரையும் அழைத்துச்செல்கிறது.

கை தொடமுடியா தூரமாகிப் போன எம் சொந்த மண்ணில் எம் சொந்தங்கள் மீதான வன்முறையின் எதிர்ப்பின் ஒலியாக ஒரே குரலில் எமது செய்தி உலகின் காதுகளிற்கு கவிதைகளாக அனுப்பப்படுகிறது.

இது எமது உறவுகளுக்கான பாடல். எம் இரத்தத்தின் பாடல்கள். இன்னும் இன்னும் உயரும் குரல்களாகி உலக மனச்சாட்சியின் செவி தொடும் வகையில் வார்த்தைகளில் உணர்வுகளைப் பதித்திருக்கலாம்.

உயிர் உருக நாம் சுமக்கும் அந்த வலியின் துயரை விழிசிவக்க எம்முள் மூண்டெழும் அந்தக் கோபத்தீயின் வெம்மையை, ஏதும் இயலாதவர்களாகத் தொலைவில் இருக்கும் எம் ஆற்றாமையை இன்னும் உணர்வு தொடும் விதத்தில் சொல்வதற்கு கவிதைகள் முயன்றிருக்கலாம்.

மொத்தத்தில் இக் கவிநூல் காலத்தின் குரலாகி எம்கைகளுக்கு வந்துள்ளது. உண்மை முகம் கொண்ட கலைஞர்களாக இக் கவிஞர்கள் தங்கள் காலக் கடமையை நிறைவாக்கித் தம் உணர்வுகளைக் கவிதையாக்கி தந்துள்ளனர்.

இனி இதை எம் மனதின் கனவாக ஏற்றுக்கொள்ளும், ஏற்றிக்கொள்ளும் பணி எங்களுக்கானதே.

வெளியீடு - "வெளிச்சம்"
விடுதலைப் புலிகள்
கலை பண்பாட்டுக் கழகம்
மீள் வெளியீடு - அனைத்துலகச் செயலகம்




நீ(தீ) தே - வதை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நீள்பார்வை 2000

## பெப்ரவரி

**01.02.00**

கடந்த மாதம் 25ம் திகதி சிறீலங்காப் படைகளால் கைது செய்யப்பட்ட மாணவர்களான பிரியா சிறிஸ்கந்தராசா, அவர் சகோதரர் விநோத் சிறிஸ்கந்தராசா, மற்றும் அவர்களது தாயாரையும் விடுவிக்கக் கோரி யாழ் குடாநாட்டில் மாணவர்கள் தொடர்ந்தும் பாடசாலைகளை பகிஸ்கரித்தனர்.

**03.02.00**

ஐ.நா அபிவிருத்தி திட்டத்திற்கான ஆசியப் பிரதிநிதி பட்றிக் வண்டன், உலக வங்கியின் தென்னாசியப் பிரதிநிதி அஸ்வன்றே பென்டனுர் ஆகியோர் வன்னிக்கு விஜயம் செய்து சிறீலங்கா அரசின் பொருளாதாரத் தடையால் தமிழீழ மக்கள் படும் அவலங்களைக் கண்டறிந்தனர்.

**12.02.00**

நோர்வே வெளிவிகார அமைச்சர் கினுட் வொல்பேக் அவர்கள் இலண்டனில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களை சந்தித்து சமாதானப் புறநிலைகள் குறித்து பேச்சுவார்த்தை நடாத்தினார்.

**14.02.00**

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் போர்க்கைதிகளாக உள்ள 15 சிறீலங்கா சிப்பாய்கள் தமது விடுதலைக்கு சிறீலங்கா அரசு ஆவன செய்ய வேண்டுமென கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர்.

**15.02.00**

மியாங்குளத்தில் பொலிஸ் வாகனத் தொடரணி மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 14ற்கு மேற்பட்ட பொலிசார் பலி 20 பேர் படுகாயம்

**16.02.00**

நோர்வே அமைச்சர் கினுட்வொல்பேக் அவர்கள் சிறீலங்காவிற்கு வருகை தந்து சிறீலங்கா ஜனாதிபதி, அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து இலங்கையில் அமைதிப் பேச்சுக்கான சூழல் குறித்து பேச்சுக்களை நடாத்தினார். இவரின் வருகைக்கு பௌத்த பேரினவாத அமைப்புக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் படையணிகளால் ஆனையிறவின் தென் பகுதி முன்னரங்கக் காவலரண் தொடரில் சுமார் 700மீற்றர் வரையான பகுதி ஊடுருவித் தாக்கியழிக்கப்பட்டது. இதன் போது பெருந் தொகையான இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு பலர் காயமடைந்தனர்.

**28.02.00**

தமிழீழத் தேசியத் தலைவரவர்களின் விசேட பணிப்பின் பேரில் நான்கு போர்க்கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். போர்க்கைதிகளில் நால்வரையும் மனிதாபிமான அடிப்படையில் விடுதலைப் புலிகள் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைத்தனர்.

**07.02.00**

யாழ்ப்பாணத்தில் சிறீலங்காக் கடற்படையின் கடல் வலயத்தடையை நீக்கக் கோரி 10,000ற்கு மேற்ப்பட்ட



தமிழீழ மக்கள் கண்டன ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். இதன் போது மகஜரொன்றும் அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது. சிறீலங்காப் படைகள் யாழ் குடாநாட்டை ஆக்கிரமித்த தன் பின்னர் முதன்முதலாக மிக அதிகமான மக்கள் கலந்து கொண்ட ஆர்ப்பாட்ட ஊர்வலம் இதுவென நோக்கர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இதன்போது இவ்வுணர்வெழுச்சியை அரசியலாக்க முயன்ற துரோகக் கும்பல்களைச் சேர்ந்தவர்கள் பொதுமக்களால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர்.

**14.02.00**



சந்திரிகா அம்மையார் இன்று பாராளுமன்றில் 2000 ஆண்டிற்கான பாதீட்டைச் (Budjet) சமர்ப்பித்தார். அதில் இதுவரைகாலமும் இல்லாத வகையில் தமிழழிப்பு யுத்தத்திற்கு 6000ம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**17.02.00**

தென்மராட்சி எழுதுமட்டுவாள் பகுதியில் விடுதலைப் புலிகளின் விமானஎதிர்ப்பு அணியினரால் சிறீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான Bel 212 ரக உலங்குவானூர்தி சுட்டுவீழ்த்தப்பட்டது. இதன்போது இரு விமானப்படையினர் பலியாகினர் மேலும் அறுவர்



கடுங்காயங்களுக்கு உள்ளாகினர். விடுதலைப் புலிகளின் விமானஎதிர்ப்பு அணியினரால் சுட்டு வீழ்த்தப்பட்ட 29 வது சிறீலங்காவின் வான்கலம் இதுவாகும்.

**26.02.00**



வன்னியிலிருந்து சிறீலங்காப் படைகளின் ஆக்கிமிப்பு பிரதேசத்திற்கு நீண்ட நாட்களுக்கு பின்னர் தமிழ் மக்களை அனுமதித்த சிறீலங்கா இராணுவத்தனர் தமிழர்களை விலங்கிலும் கீழாக முட்கம்பி வேலிகளுக்கு உட்புகுத்தி நீண்ட மணி நேரம் பால் வயது வேறுபாடின்றி தடுத்து வைத்துத் துன்புறுத்திய பின்னர் வவுனியாவிற்கு செல்ல அனுமதித்தனர்.




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'கண்கள் கூறும் வார்த்தைகள்'

காணும் கண்களே,
கூறும் வார்த்தை என்ன?
அஞ்சல் ஊடாக எரிமலைக்கு.







**எரிமலை**
*C/O T.C.C-France,*
*341, Rue des Pyrenees,*
*75020 Paris.*
*FRANCE.*


குறிப்பு: உங்கள் ஆக்கங்களை பத்து வரிகளுக்கு மேற்படாமல் எழுதவும்.

## ஜனவரி



வானமே எங்கள் கூரையானதோ
மரநிழல்தான் எங்கள் குடிசையானதோ
வையகமே நீயும் கொஞ்சம் எண்ணிப்பார்
ஓடி வந்த எங்கள் சகோதரர்கள்
ஒதுங்கிய இடத்தினை உற்றுப்பார்
பச்சிளம் பாலகன் படுத்து உறங்கும்
இடம் இது தானோ...?

ஏணையில் துயிலும் பிஞ்சும்
நாளை பாலுக்கு அழுதால்
தாய் அவள் என்ன செய்வாள்
அருகில் அடுப்பு ஏதும் எரியவில்லை
அவள் ஆசைக் குழந்தைகளின்
பசியைப் போக்க என்ன செய்வாள்
அதனால்தான் இந்த ஏக்கப்பார்வையோ...?

நீங்கள் தேசம் விட்டு வரவில்லை
எங்கள் தாயகத்துள் ஒதுங்கியவர்கள்
போராடும் காலத்துள் வாழ்பவர்கள்
இந்த மரநிழல் வாழ்வு
இன்று கேள்விக்குறி...? ஆனால்
நாளை அது முற்றுப்புள்ளி
புலரும் எங்கள் தேசம் – எமக்கு
புது வாழ்வு தரட்டும்;

**-குறிஞ்சிக்குமரன்-சவுத்கோல், இலண்டன்**

---

சிறு வயதில் பட்டம் விட்டு
பொங்கல் பொங்கி வாழ்ந்தோம்,
பாலும் தேனும் பச்சையரிசியும் உண்டு வாழ்ந்தோம்,
பசிபோக்க பலவேலை செய்துழைத்தோம்,

பாவியரசுகளால் இன்று குளிர்தேச வாழ்க்கை
வீரத்தாய் எம்போல் நாடோடி போலிராது
கல்வியையும் வீரத்தையும் ஒரு மரத்தின்
கீழ் ஊட்டி வளர்க்கிறாள்.

**-சுமன்-லுகானோ சுவிஸ்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்